www.padippakam.com

JUDE

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 11/00

දිනමුරසු වාරමලර් நவ.29—டிச.05,1998

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 285

## 'ஜயசிக்குறுய்'

## காத்திருக்கும் திருப்பங்கள்



மாமனிதர் மண்டேலா



ரோஜா என் அழுதார்

மனிஷாவின் நெத்தியடி



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## மாமனிதர் மண்டேலா–உதவினால் நஷ்டமா?

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

தென்னாபிரிக்க அதிபர்
நெல்சன் மண்டேலா
ஓர் மாமனிதர்!

சமரசத்துக்கு இடமின்றி
தனது மக்களுக்காக
போராடி வென்றவர்!

நெல்சன் மண்டேலாவை
இலங்கை ஜனாதிபதியும்
ஏற்றிப் போற்றியிருந்தார்!

ஆனாலும், ஒருகாலத்தில்
இலங்கை அரசு
கறுப்பின மக்களின்
எதிரிகளுடன்
கைகுலுக்கிக் கொண்டிருந்தது!

அகில உலக
ஜனநாயக, முற்போக்கு
சக்திகளும் ஒன்றுதிரண்டு
காறி உமிழ்ந்த
நிறவெறியரசுடன்
நட்புறவு வைத்திருந்தது!

பயங்கரவாத தடைச்சட்டம்,
அவசரகாலச் சட்டம்
போன்றவற்றின்
கொடும் விதிகள்
தென்னாபிரிக்காவின்
ஒடுக்குமுறையாளர்களிடம்
இருந்து கற்றுக் கொண்டவையே!

தென்னாபிரிக்க
நிறவெறியரசுடன்
இலங்கை அரசு
உறவு வைத்திருந்ததை
தென்னிலங்கை மக்கள்
பெரிதாக எதிர்க்கவில்லை!

சிங்கள, ஆங்கில
பத்திரிகைகளும்
கண்டு கொள்ளவுமில்லை!
கண்டிக்கவுமில்லை!

அன்று–
எதிர்க்கட்சியாகவிருந்த
சிறீலங்கா சுதந்திரக் கட்சியும்
உறவு வேண்டாம்
என்று எதிர்க்கவில்லை!

வடக்கு–கிழக்கில்
போராடிக் கொண்டிருந்த
அமைப்புக்கள் மட்டுமே
கறுப்பின மக்களுக்காக
ஆதரவுக் குரல்
எழுப்பின!

ஒடுக்கப்படுபவர்கள்
என்ற ரீதியில்
எல்லைகள் தாண்டி
வெளிப்பட்ட உணர்வுதான்
அந்த ஆதரவுக்குரல்!

இப்போது
தென்னாபிரிக்காவில்
தீர்வு ஏற்பட்டுவிட்டது!

இலங்கை இனப்பிரச்சனை
தீர்வை எட்டவில்லை!
கொடும் போர்
முடிவை எட்டவில்லை!

இதற்கொரு முடிவைக்
காண்பதற்கு
மாமனிதர் மண்டேலா
உதவினால்
மாபெரும் செயலன்றோ!

பிரசவ வலி தெரிந்த
ஒருவர்–இங்கு
சுகப்பிரசவம் நடக்க
உதவினால் நஷ்டமா?

பெருக்கெடுத்தோடும்
இரத்த ஆறு
முற்றுப் பெறுமன்றோ!

அதனை ஏன்
நந்தி போல் நின்று
தடுக்க முனைகிறார்கள்?

நிறவெறியரசுக்கு
எதிர்ப்புக்காட்டாதோருக்கு
இன்று மண்டேலாமீது
திடீர்ப் பாசம்!
அடிக்கடி ஆளனுப்பி
நாடி பிடித்தறிகிறார்கள்?

நிறவெறியரசின்
ஆயுதங்களும், டாங்கிகளும்
இத்தீவுக்குள்–
இன்னொரு இனத்தை
வேட்டையாட
இறக்குமதியானபோது
மௌனமாக இருந்த
பேரினவாத சக்திகள்,
இப்போது மட்டும்
ஏன் துள்ளிக் குதிக்கின்றன?

தமிழ் பேசும் தரப்பை
பலவீனமாக்கி
அரை குறைத் தீர்வை
திணிக்கும் திட்டம்
தோல்வி கண்டுவிடக்கூடாதே
என்பதுதான்
பேரினவாதத் துள்ளலின்
உண்மையான காரணம்!

நோய்க்குத் தகுந்த
சிகிச்சை செய்ய
விரும்பாதபோது,
மருத்துவர்களை
வேண்டாம் என்பதும்
புதுமையுமல்ல– புதிருமல்ல!

தகுந்த மருத்துவர்தான்
மண்டேலா– ஆனால்
பேரினவாதமும்,
சுயநல அரசியலும்
நோயாளி உயிர்
பிழைப்பதை விரும்பவில்லை!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,

ஆசிரியர்

# ஆன்மீகம்

## மன்னனின் பெருந்தன்மை

கொடும்பாளூரை ஆண்ட மன்னன் இடங்கழியார். இவ்வரசன் செங்கோல்முறை தவறாது ஆண்டுவந்தான். இவன் காலத்திலிருந்த சிவனடியார் ஒருவர் அடியவர்களுக்கு அமுது படைக்கும் திருப்பணியை மேற்கொண்டிருந்தார். அத்திருப்பணிக்குப் பொருள் கிடைக்காததால் அரசனின் கருவூலத்திலேயே புகுந்து திருடினார். அதனால் அகப்பட்டுக் கொண்டார். இவர் ஏன் திருடினார் என்று விசாரித்து உணர்ந்த அரசன் தானே குற்றவாளி என்று முடிவு செய்தார்.

"இத்தகைய திருப்பணிகளுக்கு பொருள் கொடுக்கவேண்டியது என் கடமை. கடமை தவறிய யானோ அரசன், யானே கள்வன்!" என்று கூறி கருவூலத்தையே திறந்து விட்டு அடியாரை வேண்டிய பொருளை அள்ளிப் போகுமாறு பணித்தான். "இம்மாதிரி நற் செயலுக்கு எம் கருவூலம் எப்பொழுதும் திறந்திருக்கும்!" என்று கூறினான் அரசன். என்னே இவனது பெருந்தன்மை!

இவ்வாறு பெருந்தன்மையுடன் இத்தகைய நற்காரியங்களுக்கு பொருள்கொடுத்து உதவிய இடங்கழியார் திருநீற்று நெறி நின்று சிவனடியே சிந்தித்து- வந்தித்து வாழ்த்தி இறைவன் திருவடி அடைந்தார். ஆண்டவனுக்கு திருப்பணி செய்து அவனடி பணிவோமாக!

தொகுப்பு: செல்வி. ஜெயந்தி சிதம்பரம், புத்தளம்.



## அல்லாஹ்வை கண்ணியப் படுத்துங்கள்!

நற்கருமங்களில் முதலில் அல்லாஹ்வை ஞாபகப்படுத்துங்கள்.

* எக்கருமங்கள் செய்யினும் அல்லாஹ்விற்காக செய்வதாக எண்ணிக் கொள்ளுங்கள். (குர்-ஆன்)

* அல்லாஹ்வை பூரணமாக நம்பாதவரை எந்த நற்கருமங்களும், ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. (நபி-மொழி)

* மனிதனுக்கு மனிதன் செய்யும் எந்த ஒரு நற்கருமங்களும், அல்லாஹ்விற்காக என மனதில் நம்பிக்கை கொள்ளாதவரை அது நற்கருமமாக அல்லாஹ்விடம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. (நபி-மொழி)

* உலக விடயமாயினும், மறுமை விடயமாயினும், அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை நாடியே செய்ய வேண்டும்! (நபி மொழி)

* அல்லாஹ்வின் கடமைகளை சரிவர செய்வதிலும், நன்மையான காரியங்களில் ஈடுபடுவதிலும், அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை கண்ணியப்படுத்துவதிலும், அல்லாஹ்வின் கண்ணியத்தை பெற்றுக்கொள்ள முடியும். (நபி-மொழி)

தொகுப்பு: என். முகம்மது தஸ்லீம், தாராபுரம், மன்னார்.

## கவிதைப் போட்டி இல. 282



இடம்
உள்ளவரை
இடம்
பிடித்துள்ள
வியக்க
வைத்த
கவிதைகள்:

### பரிசுக்குரிய கவிதை

### பற்றுக்கோல்

கடல்தாண்டி
ஒரு கண்டம் தாண்டி
கைகொடுக்கத்துடிக்கும்
ஒரு கறுப்புக்கரம்!

உரும்பிராய்- சிவன்சுதன்.

### உதவிக்கரம்

பேரினவாதத்தின்
உதவிக் கரம்
அரசுக்கு!

என். நஜேந்திரன்-
கொழும்பு-13.

### வேண்டாம்!!!

எங்களின்
எதிர்காலத்தை
எமனிடன்
கொடுக்காதீர்கள்!!

எஸ்.பி. பாலமுருகன்-
பதுளை.

### யார் நீ?

எங்கம்மா செம்மணியில்;
எங்கப்பா அவளருகில்,
நீயாருப்பா என்னருகில்?

கே.திரு-வவுனியா.

### உதவி

பயப்படாதே!
எழுந்துநில்!!
கைவிட நான் ஒன்றும்
தமிழ் கட்சிகளல்ல....!

சிவசேகரம் சிவகுமார்-
மட்டக்களப்பு.

### இனி இல்லை!

உன் அம்மா கண்மணியை
புதைத்துவிட்ட செம்மணியை
இறுதியாக ஒரு தடவை
என்னுடனே வந்து பார்த்துவிடு!

ந.சிவநாதன்-திருகோணமலை.

### பயனில்லை!

பற்றிப் பிடித்தும்
பாதுகாப்பில்லை-
சுற்றிவளைப்பும்
'கைது'களும்
சுமுக வாழ்வைத்
தராதபோது!

செ.ஞானராசா-
சின்னப்பண்டிவிரிச்சான், மடு.

### சந்தேகம்

அழைத்துச் செல்வதற்கான
ஆயத்தமா?
விட்டுச் செல்லும் சோகமா?
அன்றேல் இவை-
வெட்டுனர்ட இரு
கரங்களா?!

எஸ்.பிரபா-பதுளை.

## கவிதைப் போட்டி இல.285



### வழித்துணையும் விழித்துணையும்

சின்ன விரல்
ஷெல்லடியில் அநாதையாக;
பெரிய விரல்
கன்னி வெடியில் கண்ணிழக்க;
அகதி முகாமில்
ஆளுக்காள் வ(வி)ழித்துணை!

செல்வி மதுரா யோகேந்திரன்-
திருக்கோவில்.

### மரவிரல்?

அவர் ஆட்சியில் நாம்
மரத்தைச் சுற்றிய கொடிகள்...!
இவர் ஆட்சியில்...
விரலைச் சுற்றிய கரங்கள்?

அ.சந்தியாகோ, ஆசோகா
வித்தியாலயம்-கண்டி.

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 05.12.1998

முகவரி: கவிதைப் போட்டி இல.285
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

### செல்வோம்–வருவோம்!

கை வீசம்மா கைவீசு,
'காடு செல்வோம்' கைவீசு!
உய்யும் நிலைமை வந்தாலே,
'ஊருக்கு வருவோம்' கைவீசு!

அ. கௌரிதாசன்-ஆலங்கேணி கிழக்கு,
கிண்ணியா.

### தும்பிக்கை

காக்கும்
கரம் பெரும் நம்பிக்கை!
அதை
நோக்கும் சிறிய பிஞ்சுக்கை;
இந்த
சேய்க்குக் கிடைத்த தும்பிக்கை!

பாலசோதி வருண்-பண்டாரவளை.

# வாசக(ர்)சாலை



அன்பு முரசே!

ரசிகனின் 'இறுதி முத்தம்' இலக்கிய நயம் மிகவும் இரசனையாக இருந்தது. நீரோவின் கொடுமை முத்தத்தில் முற்றுப் பெற்றது. தமிழருக்கான கொடுமை எதில் முற்றுப்பெறும் ரசிகனே?

'காதிலை பூ கந்தசாமியின் 'கோட் கலைகிறது' கற்பனை மிகவும் சிறப்பாக இருந்தது. நன்றிகள் பல கந்தசாமிக்கு!

ஜெ. கருணாநிதி, அக்கரைப்பற்று-07.

அன்பின்முரசே,

நீ தொடர்ந்து வாழ்கின்ற எதிர்காலம் வாசகர்களைக் கவர்ந்துள்ளது. அதில் நானும் ஒருவன். யாவையும் சுப்பர். இதில் எனக்கு கவியரசு கண்ணதாசனின் சுயசரிதையும் கவிதை வரிகளும் மேன்மேலும் உற்சாகத்தை ஊட்டுகின்றன. மிகவும் கவர்ந்த சுயசரிதை தொடர என் இனிய வாழ்த்துகள்.

ஏ. வாமினி-பூவரசங்குளம்.

வேதாகமத்தைப் படித்தும், புரிந்து கொள்ள முடியாது இருக்கும் அனேகருக்கு ஒரு கதைபோல விளங்கக்கூடிய முறையில் தங்களது பத்திரிகையில் 'திருமறை தரும் பொதுநெறி' என்ற தலைப்பில் வெளியிடுவதின் மூலம் அனேக வாசகர்கள் சத்தியத்தை அறிந்துகொள்ள வழி அமைத்துக் கொடுத்திருக்கிறீர்கள்.

ஆர். ராமச்சந்திரன், நாகொட, கந்தானை.

தித்திக்கும் செய்தி
கொண்டு
எத்திக்கும் விரைந்து
சென்று
முத்தமிழர் கைகளிலே
முக்குளிக்கும் தினமுரசே!
நீ எங்கள் இதய அரசே!

எஸ். ஸ்ரீதரன், மட்டக்களப்பு.

அன்பின் முரசே

கொழும்பு துறைமுகம் சம்பந்தமான தமிழ் பேசும் மக்களின் உண்மை நிலையை வெளியிட்ட முரசுக்கு எம் அனைவரின் சார்பிலும் வாழ்த்துக்கள்.

இ.மிலானா, லா.சாதானா, சி.பர்வின், இலங்கைத் துறைமுக அதிகாரசபை கொழும்பு.

அன்பின் முரசே!

நீ தாங்கி வரும் அனைத்து அம்சங்களும் சூப்பர்! சுரேஷ்- பாலா (சுபா) இருவரும் இணைந்து வழங்கும் 'உதட்டில் ஒரு மச்சம்' தொடர் விறுவிறுப்பாக உள்ளது. மற்றும் அரசியல் தொடர் எழுதும் அற்புதன் அவர்களுக்கு எனது பாராட்டுக்கள்!

ம. தீபா செல்வி, ஹோல்புறூக்,
அக்கரபத்தனை.

## கவசப் பயணிகள்

முரசே!

பயணிகளை சிறுதொகையாக மெல்ல மெல்ல அனுப்பிவைப்பதாக ஜனாதிபதி கூறினாராம். அதனைக் கேட்டு வந்து பத்திரிகைகளுக்கு கூறுகின்றன தமிழ்க் கட்சிகள். தமிழ் மக்களை விடுவிக்க, சுபீட்சம் தர என்று யாழ்ப்பாணத்தை பிடித்தனர். இப்போது படையினருக்கு முன்னுரிமை, பயணிகளுக்குப் பின்னுரிமை. அதுவும் கவசங்களாக மக்கள். இதனை தட்டிக் கேட்க முடியாத கட்சிகள், விளம்பர அரசியல் நடத்துகின்றன.

ஆர். சுஜீவன், சாவகச்சேரி.

## ஆமாம் சாமி

முரசே! "யாழ் குடாநாட்டை விடுவித்து சொர்க்கபுரியாக்குவோம்" என்று கூறியது அரசாங்கம். இன்று அம் மக்களுக்காக கப்பல் சேவை கூட நடத்த முடியாத நிலையில் இருக்கிறது. தனியார் நடத்தட்டும் என்று பொறுப்பைத் தட்டிக் கழிக்க, தமிழ்க் கட்சிகளும் 'ஆமாம் சாமி' போடுகின்றன.

இ. துரைராஜ், யாழ்ப்பாணம்.

## ஒற்றைக்காலில்

தென்னாபிரிக்காவிடம் அரசுக்கு ஏன் இத்தனை கலக்கம்? 'முரசு' முன்னரே சுட்டிக்காட்டியதுபோல தமிழ் மக்களுக்கு அனுதாபம் ஏற்படுவதைத் தடுப்பதற்கு ஒற்றைக்காலில் நிற்கிறார்கள். புலி எதிர்ப்பு என்பதெல்லாம் வெளிப்பூச்சு.

பெ. தனஞ்சயன், திருமலை.

## நாற்காலி ஆடாவிட்டால்

இனிய முரசே

தானாடாது விட்டாலும் தன் தசை ஆடும் என்பார்கள். தமிழ்க் கட்சிகளைப் பொறுத்தவரை தானாடினாலென்ன, தசையாடினாலென்ன.. தானிருக்கும் நாற்காலி மட்டும் ஆடக் கூடாது. அதுதான் அவர்களது கொள்கைப் (பி)படிப்பு. இதில் எங்கே தமிழுக்காக- தமிழனுக்காக அவர்கள் வாய்திறப்பார்கள்? ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்! தாம் வெட்டும் குழியில் தாமே விழும்போதுதான் ஓரளவேனும் உண்மையை உணர்வார்கள்.

நவிண்டிலூர், அருமைத்துரை
பரமேஸ்வரன்.

## மறந்தால் மகிழ்ச்சி

செம்மணி விவகாரத்தில் தமிழ்க் கட்சிகளுக்கு அம்மணியார் கொடுத்த வாக்குறுதிகள் காற்றில் பறந்தன. தமிழ்க் கட்சிகள் அதைப்பற்றி ஏன் சத்தமின்றி இருக்கின்றன? குரல் வளைகளையும் இரவல் கொடுத்து விட்டனரா?

செம்மணியை மக்கள் மறந்து தொலைத்தால் தமிழ்க் கட்சிகளுக்கும் மகிழ்ச்சிதான்!

இ. சச்சிதானந்தம், யாழ்ப்பாணம்.

## கலைந்தன

இனிய முரசே!

இராஜதந்திரியாரின் அலசல் பிரமாதம். யாழ் குடாநாட்டில் படைகளுடன் ஆயுதம் ஏந்தித் திரியப்போகின்றனர் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள். இவர்களும் போரின் ஓர் அங்கமே. ஜனநாயக வேஷங்கள் கலைந்துவிட்டன.

எம். பிரபு, கொழும்பு-05.

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட
சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல்:- 074-513266



படிப்பகம்

www.padippakam.com

# 'புலிகளின் குர'லில் சிங்கள சேவை!

## 'ஜயசிக்குறுய்' படையினருக்கு பிரசாரம்

(நமது நிருபர்)

**சிறப்புச் செய்தி**

விடுதலைப் புலிகளின் வானொலியான 'புலிகளின் குர'லில் சிங்கள சேவை ஒன்றும் ஆரம்பமாகப் போகிறது.

வன்னியில் 'ஜயசிக்குறுய்' படையினர் மத்தியில் தமது நிலைப்பாடுகளை விளக்கவும், தணிக்கையற்ற யுத்தச் செய்திகளை படையினருக்கு வழங்கவும் புலிகள் திட்டமிட்டுள்ளனராம்.

சிங்கள சேவை ஒன்றை புலிகள் ஆரம்பிக்க உள்ளதால், அரசுக்கும், படை உயர் வட்டாரங்களுக்கும் பெரும் நெருக்கடி தோன்றும் என்று இராணுவ விமர்சகர்கள் கூறுகின்றனர்.

தாக்குதலுக்கு-பின்னர் ஏற்படும் விளைவுகள் பற்றி படைத்தரப்புக்கு பூரண விபரங்களை புலிகளின் குரல் தெரிவித்துவிடும்.

அது மட்டுமன்றி தணிக்கை காரணமாக சிங்கள- ஆங்கில பத்திரிகைகள் வெளியிட முடியாத செய்திகள், தகவல்கள் போன்றவையும் புலிகளின் குரல் சிங்கள சேவையில் வெளியாகப் போகின்றனவாம்.

படையினரது மனோநிலை பாதிக்கப் படக்கூடாது என்பதும் தணிக்கை தொடர்வதற்குக் கூறப்படும் காரணங்களில் ஒன்றாகும்.

எத்தகைய தகவல்கள் படைத்தரப்பு மனோநிலைக்குப் பாதகம் என்று அரசு கருதுகிறதோ, அத்தகைய செய்திகளை புலிகளின் குரல் மூலம் வெளியிடப்போகின்றனர்.

இந்த வானொலி சேவைக்கு கொழும்பில் உள்ள சிங்கள-ஆங்கில விமர்சகர்கள் மற்றும் செய்தியாளர்களது உதவியையும் புலிகள் பெற உள்ளதாகத் தெரியவருகிறது.

புலிகளின் காவலில் உள்ள படையினர் சிலரும் சிங்கள சேவை ஊடாக தமது சகாக்களுக்கு விடுக்கும் செய்திகளும் ஆரம்பக் கட்டமாக இடம்பெறவுள்ளனவாம்.

படையினருக்கு புலிகள் விடுக்கும் சிறப்புச் செய்தியுடன் சிங்கள சேவை ஆரம்பமாக உள்ளதாம்.

படிப்படியாக இச் சேவையை தென்னிலங்கைக்கு எட்டக் கூடியதாக தொழில் நுட்ப ரீதியில் விரிவுபடுத்தும் திட்டமும் புலிகளுக்கு இருப்பதாகக் கூறப்படுகிறது.

வன்னியில் பாரிய தாக்குதல் ஒன்றை நடத்திக் கொண்டு படையினருக்கு அறிவித்தல்களை வெளியிடவும் சிங்கள சேவையை பழக்கப்படுத்த புலிகள் திட்டமிடக்கூடும் என்று இராணுவ விமர்சகர்கள் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

சிங்கள சேவையை புலிகள் ஆரம்பிக்கப் போவது அரசின் தணிக்கைக்கு மட்டுமன்றி, இராணுவ முஸ்தீபுகளுக்கும் பலத்த பாதிப்பை ஏற்படுத்தப்போகிறது, என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

தமது செயற்பாடுகளில் உள்ள நியாயம் பற்றி மறுதரப்புக்கு அவர்களது மொழியிலேயே எடுத்துக் கூறுவதை உலகில் பல நாடுகளில் உள்ள இயக்கங்கள் கையாண்டு வந்திருக்கின்றன.

வன்னியில் பெரும் எண்ணிக்கையான படையினர் நிலைகொண்டுள்ள இக் காலகட்டத்தில் புலிகள் தமது பிரசாரத்தை ஆரம்பிக்கப் போகின்றனர். வன்னி எங்கும் புலிகளின் குரல் தெளிவாகக் கேட்கக்கூடியதாக இருக்கும்.

# எத்தகைய விளைவுகளையும் ஏற்கத் தயார்!

## குமார் பொன்னம்பலம் சவால்!

"புலிகளின் அரசியல் நோக்கங்களுக்கு முழு மனதுடனான ஆதரவை அளிப்பவன் நான். இதனைப் பகிரங்கப்படுத்துவதனால் எனக்கு ஏற்படப்போகும் எத்தகைய பலாபலன்களையும் எதிர்கொள்ளச் சித்தமாக இருக்கிறேன்!"

தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. குமார் பொன்னம்பலம் கடந்தவாரம் மலேசியாவுக்குப் புறப்படுவதற்குச் சற்று முன்னதாக 'சண்டே லீடர்' ஆங்கில வார ஏட்டுக்கு இதனைத் தெரிவித்துள்ளார்.

தென் ஆபிரிக்கத் தொலைக்காட்சிகளுக்கு பேட்டி அளிக்கும்போது, ஜனாதிபதி சந்திரிக்கா, 'தமிழர்கள் இந்த நாட்டின் சொந்தக்காரர்களல்ல' என்று குறிப்பிட்ட கருத்தையொட்டி 'சுவர்ணவாஹினி' தொலைக்காட்சியின் சிங்கள ஒளிபரப்பின்போது குமார் பொன்னம்பலம், தொலைத்தொடர்பு மூலம் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளித்தார்.

இப்பேட்டியின்போது, அவருடைய கருத்துக்கள் யாவும் விடுதலைப் புலிகளுக்குச் சார்பானதாகவே அமைந்துள்ளன. இதனால் பேரினவாதிகள் பலர், "குமார் பொன்னம்பலம் ஒரு புலி; அவரை ஏன் கைது செய்யவில்லை?" என்று கூக்குரல் எழுப்புகின்றனர்.

திரு. பொன்னம்பலம் அவர்களின் கருத்துக்கள் அடங்கிய ஒலிப்பதிவு நாடாவை கடந்த 19ம் திகதியன்று பொலிசார் சுவர்ணவாஹினியிலிருந்து கைப்பற்றியுள்ளனர். அந் நிறுவனத்தின் மூத்த அதிகாரி ஒருவரையும் அவர்கள் விசாரித்ததாகத் தெரிகிறது.

கடந்த வியாழக்கிழமையன்று- ஏற்கனவே திட்டமிடப்பட்டபடி-மலேசியா புறப்படு முன்னர் குமார் பொன்னம்பலம் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

"இந்த நாட்டில் எனது சொந்தக் கருத்துக்களைத் தெரிவிக்க உரிமையில்லையா? நான் தமிழர்களுடைய நிலைப்பாட்டைப் பற்றியும், புலிகளைப் பற்றியும் அதே வேளை எனது நிலைப்பாட்டைப் பற்றியுமே அந் நிகழ்ச்சியின்போது தெளிவுபடுத்தினேன்.

ஜனாதிபதி சந்திரிக்கா, தமிழர்களைப் பற்றிக்கூறிய கருத்துக்களுக்கு மாறாக நான் மாற்றுக் கருத்துக்களைக் கூறிவருவதனால் என்மீது நடவடிக்கை எடுக்குமுகமாகவே சிலர் திட்டங்கள் தீட்டுகின்றனர்.

எனது அரசியல் கொள்கைகள் பற்றிக் கூறுமாறு தொலைக்காட்சி நிறுவனம் அழைத்திருந்தது. இந்நிகழ்ச்சியில், அரசாங்கம் எத்தகைய கருத்துக்களைக் கொண்டிருக்கிறதோ, அவற்றுக்குச் சார்பாக மட்டும்தான் நான் கருத்துக்கூற வேண்டும், என்று எதிர்பார்க்கிறார்களா?

எனது மனச்சாட்சிக்கு விரோதமற்ற கருத்துக்களை நான் கூறினால் அது குற்றமாகுமா? இந்த 'சிங்கள தேசத்தில், சிறுபான்மையினருக்கான இடம் இதுதானா?'" என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

# காணிப்பகிர்வில் அநீதி

## தொண்டமான் கருத்து நிராகரிப்பு

பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க அவர்களுக்கும் அமைச்சர் தொண்டமான் அவர்களுக்குமிடையில் 'காணித் தகராறு' ஒன்று வெடித்திருக்கிறது. இங்கிரியாவிலுள்ள ஒரு தோட்டத்துக்குச் சொந்தமான காணிகளை கிராம வாசிகளுக்குப் பங்கிடுவதற்கான ஒரு திட்டத்தை அமைச்சர் விக்கிரமநாயக்க வகுத்துள்ளார்.

தோட்டக்காணிகளைப் பங்கிடுவதானால் தோட்டத் தொழிலாளர்களுக்கே அவை பங்கிடப்பட வேண்டும் என்று அமைச்சர் தொண்டமான் எதிர்ப்புக் குரலெழுப்பியுள்ளார். ஜனாதிபதி பிரேமதாசா காலத்தில் இத்தகைய உடன்பாடு ஏற்படுத்தப்பட்டமையினால், அதற்கு விரோதமாக நடக்கலாகாது என்று திரு. தொண்டமான் வாதிடுகிறார்.

ஆனால் திரு. விக்கிரமநாயக்க, "அத்தகைய உடன்படிக்கை பற்றி நான் கவலை கொள்ளப் போவதில்லை. எனது திட்டப் படியேதான் நான் செயற்படுவேன்!" என்று கூறியிருக்கிறார். அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இரு அமைச்சர்களும், 15 நிமிடங்கள் வரை கடுமையான வார்த்தைகளைப் பிரயோகித்து விவாதித்ததாகத் தெரிகிறது.

# கிட்டு அணி தாக்குதல்

## வன்னியில் ஷெல்லடி

பரந்தன் நோக்கியும், மாங்குளப் பகுதியில் உள்ள படை நிலைகள் நோக்கியும் புலிகள் மோட்டார் ஷெல் தாக்குதல்களை அடிக்கடி நடத்துகின்றனர்.

19.11.98 அன்று பலத்த ஷெல் தாக்குதல் ஒன்றை புலிகள் நடத்தினார்கள். பாரிய சேதமும், இழப்புகளும் படைத்தரப்புக்கு ஏற்பட்டதாக புலிகள் கூறினர். இதுபற்றிய விபரங்களை ஊர்ஜிதம் செய்ய இயலவில்லை.

கிட்டு பீரங்கிப் படையணியே தாக்குதல் தொடுத்ததாகத் தெரியவருகிறது.

# நின்றது நிவாரணம்! வந்தது விமானம்!

## வன்னியில் தொடர் தாக்குதல்!

வன்னிக்கு நிவாரணம் அனுப்புமாறு தாம் அரசிடம் கோரியுள்ளதாக தமிழ்க் கட்சிகள் கூறிவருகின்றன. அரசு அக் கோரிக்கையை நிராகரித்துவிட்டது. அதே சமயம் வன்னியில் தொடரான விமானத் தாக்குதல்களும் நடத்தப்பட்டுள்ளன. பொது மக்கள் உடல் சிதறி பலியாகியுள்ளதுடன், சொத்துக்களும் சேதமாகியுள்ளன.

"நிவாரணத்தை அனுப்ப மறுத்த அரசாங்கம், விமானங்களை அனுப்பியுள்ளது!" என்று வன்னியில் வெகுஜன ஒன்றிய பிரமுகர் கூறியுள்ளார்.

வன்னியில் தொடர் விமானத் தாக்குதல் குறித்தும், பொது மக்கள் இழப்புக்கள் குறித்தும் பத்திரிகைகளில் செய்திகளும் வெளியாகியுள்ளன. அவ்வாறு இருந்தும் வன்னி மாவட்ட எம்.பி.கள் முதற் கொண்டு தமிழ்க் கட்சிகள் அனைத்தும் மௌனமாக இருக்கின்றன.

தமது உள்ளூராட்சி உறுப்பினர்கள் சிலர் பலியானதற்கு உலகத் தலைவர்களுக்கு மகஜர் அனுப்ப முன்வந்தன சில தமிழ்க் கட்சிகள். அப்பாவி குடிமக்கள் பலியாவது தொடர்பாக எவ்வித கரிசனையும் இல்லாமல் இருக்கின்றனவே என்றும் குறை கூறப்படுகிறது.

# யாழில் ஷெல்லடி

யாழ் குடாநாட்டில் பருத்தித்துறை படை முகாம் நோக்கி புலிகள் ஷெல் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுகிறது.

22.11.98 அன்று இரவு இத் தாக்குதல் நடத்தப்பட்டது. வடமராட்சி நாகர்கோவில் பக்கம் நோக்கி படையினரும் பதிலுக்கு ஷெல் தாக்குதல் நடத்தினர்.

ஆனையிறவு இராணுவ தளத்தில் இருந்து பூநகரி முகாம் நோக்கி ஷெல் தாக்குதல் நடந்துள்ளது. பூநகரி தற்போது புலிகளின் கொரில்லா தளமாக இருந்து வருகிறது.

# வரைபடத்துடன் இருந்தாராம்

## வன்னி இளைஞர் கைது

(கண்டி நிருபர்)

கண்டி நகரின் திட்ட வரைபடத்தையும் கண்டி இராணுவத் தலைமை உட்பட பாதுகாப்புப் படைப்பிரிவின் கண்டி முகாம்களையும் உள்ளடக்கிய வரைபடத்தையும் தமது கைவசம் வைத்திருந்த தமிழ் இளைஞர் ஒருவர் கண்டி தேவி வீதியில் கடந்த 13 ஆம் திகதி பொலிஸாரால் கைதானார்.

பௌத்தம் அல்லாத சமய இயக்கம் ஒன்றின் வீட்டைப் பரிசோதனை செய்த பொழுது சந்தேகத்தின் பேரில் கைதாகிய இந்த இளைஞர் மாங்குளம் பிரதேசத்தில் இருந்து கண்டிக்கு வந்தவராவார்.

மத்திய பிரதேச பிரதி பொலிஸ் மா அதிபரின் ஆலோசனையின் பேரில் கைது செய்யப்பட்ட இந்த இளைஞரின் பெயர் டிக்ஸன் (வயது 25) என்பதாகும்.

இவரிடம் இருந்து ரூ.25,000/- ரொக்கப் பணமும் பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டது. வவுனியா, கிளிநொச்சி போன்ற இடங்களில் இவர் நடமாடியதாகவும் கூறும் இவர் இப்பொழுது பொலிஸ் பாதுகாப்பில் இருந்து வருகிறார். இவரைப் பற்றிய விசாரணை தொடர்கின்றது.

# ஈ.பி.டி.பி.எம்பியின் மெய்க்காவலர் கைது!

ஈ.பி.டி.பி. பா.உ சந்திரகுமாரின் மெய்க் காப்பாளர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு உதவியதாக காரணம் கூறியே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியாவைச் சேர்ந்த செல்வம் என்றழைக்கப்படும் கண்ணன் பாலகிருஷ்ணன் என்பவரே கைது செய்யப்பட்டவராவர்.

ஈ.பி.டி.பி.யில் இவர் எட்டு வருடங்களாக இருக்கிறார். அதற்கு முன்னர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பில் இருந்தவர்.

ஈ.பி.டி.பி.யின் கொழும்பு காரியாலயத்தில் வைத்து இவர் கைதானார். இவரது சகோதரர் முன்னர் புலிகள் அமைப்பில் இருந்தார். ஆனால் அவர் தற்போது வெளிநாடு சென்றுவிட்டார். "ஆதாரமில்லாத சந்தேகத்தின் அடிப்படையிலேயே செல்வம் கைது செய்யப்பட்டுள்ளார்" என்று ஈ.பி.டி.பி எம்.பி தங்கவேல் முரசுக்கு தெரிவித்தார்.

மு.சந்திரகுமார் எம்.பி. தற்போது வெளிநாடு சென்றுள்ளார். ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா செல்வத்தை விடுதலை செய்யுமாறு பாதுகாப்பு அமைச்சிடம் கோரியுள்ளார்.

# மீண்டும் பதிவா

கொழும்பு வெள்ளவத்தைப் பொலிசில் ஏற்கனவே பதிவு செய்த தமிழ் குடியிருப்பாளர்கள் மீண்டும் பதிவு செய்ய வேண்டும் என்று கோரப்படவில்லையாம். அதுபோல பதிவு செய்ய புகைப்படங்களும் இதுவரை கோரவில்லையாம். வெள்ளவத்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் அதுபற்றி கேட்கப்பட்டபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# கொழும்பில் மின்மாற்றி தகர்ப்பு

## ஒரே நாளில் இரு தாக்குதல்

(நமது நிருபர்)

இரண்டு மின்மாற்றிகள் 22.11.98 அன்று தகர்க்கப்பட்டன. கொழும்பு செட்டியார் தெருவில் ஒன்றும், மட்டக்களப்பு சாய்ந்தமருதுப் பகுதியில் ஒன்றும் தகர்க்கப்பட்டன. இரண்டும் அதிகாலை நேரத்திலேயே நடைபெற்றன.

கொழும்பு மின்மாற்றி வெடிப்பு மின் ஒழுக்கால் ஏற்பட்டது என்பதை மின்சார சபை திட்டவட்டமாக மறுத்துள்ளது. மின் மாற்றி வெடித்த பகுதியில் வெடி மருந்துகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

நவம்பர் 21ம் திகதி மாவீரர் வாரம் ஆரம்பமாகியது. மாவீரர் தின இறுதி நிகழ்வுகள் 25 முதல் 27 வரை அனுஷ்டிக்கப்படுகின்றன. 22ம் திகதி அதிகாலை மின்மாற்றி தகர்க்கப்பட்டது.

சமீபகாலத்தில் பொதுமக்கள் நடமாட்டம் குறைவான நாட்களிலேயே புலிகள் தமது தாக்குதல்களை கொழும்பில் நடத்தி வருகின்றனர்.

மின்மாற்றித் தகர்ப்பும் ஞாயிறு அன்று அதிகாலையிலேயே நடத்தப்பட்டுள்ளது.

பலத்த பாதுகாப்புக்கள் செய்யப்பட்ட போதும் தாம் நினைத்தால் தாக்குதல் நடத்த முடியும் என்று படைத்தரப்புக்கு காண்பிக்கவே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக ஊகிக்கப்படுகிறது.

இடையே ஓய்ந்திருந்த மின்மாற்றித் தகர்ப்பு மறுபடி ஆரம்பித்திருக்கிறது.

# மின் மாற்றிகளில் புலிகள் குறி!

சமீப சில மாதங்களுக்கு முன்னர் நாடளாவிய ரீதியில் மின் மாற்றிகளையும் மின் நிலையங்களையும் சேதப்படுத்தி வந்த புலிகள், சில காலம் அந்த நடவடிக்கைகளைக் கைவிட்டிருந்தனர். அதனையடுத்து நாட்டின் பல பகுதிகளில் மின் விநியோகம் சீரடைந்திருந்தது.

அதன்பின்னர் முதல் தடவையாக புலிகள் கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான மின் விநியோகத்தை, மின்கோபுரங்களைச் சாய்த்ததன் மூலம் துண்டித்தனர். கடந்த ஒன்றரை மாதங்களுக்கு மேலாக மட்டக்களப்பு மாவட்டதிற்கான மின் விநியோகம் துண்டிக்கப்பட்டிருக்கும் இவ்வேளையில் நாட்டின் நாலாபுறமும் புலிகளின் கவனம் மின்மாற்றிகளின் பக்கம் திரும்பியிருப்பது புலனாகிறது.

காத்தான்குடி- பாலமுனையில் இருந்த மின்மாற்றி 17.11.98 அன்று குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. இது ஆறு மாதங்களுக்கு முன்னர் தகர்க்கப்பட்டு பின்னர் பொருத்தப்பட்டதாகும்.

கல்முனை-சாய்ந்தமருதில் இருந்த மின்மாற்றியொன்றும் 22.11.98 அன்று குண்டு பொருத்தப்பட்டுத் தகர்க்கப்பட்டது.

கல்முனை-மருதமுனையில் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிலையத்தின் தொலைபேசிப் பரிவர்த்தனைப் பெட்டிகள் இரண்டு 20.11. 98 அன்று குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

கொழும்பு செட்டித் தெருவிலுள்ள மின்மாற்றியொன்றும் 22.11.98 அன்று அதிகாலை குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

# வெளிநாட்டு கடிதங்கள் திருட்டு

## இலட்ச ரூபா முத்திரைகள் தப்பின

(திருமலை நிருபர்)

திருக்கோணமலைத் தபாற்கந்தோரில் கடந்த சனி இரவு வெளிநாட்டுக் கடிதங்கள் திருட்டுப் போயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இரவுக் கடமையில் எவரும் இல்லாத நிலையைப் பயன்படுத்தி கூரை ஓடுகளைப் பிரித்த திருடர்கள் இடைத் தடுப்புக்கூடாக இறங்கி மரப்பெட்டகத்துள் வைக்கப்பட்டிருந்த கடிதங்களைத் திருடிச் சென்றுள்ளனர். பெட்டகத்தின் 'கொண்டி' உடைக்கப்பட்டே இத் திருட்டு நடந்துள்ளதாக தபாற்கந்தோர் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

திருட்டுப் போன கடிதங்கள் 27 எனக் கூறப்படுகிறது. இவற்றுள் மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்தவை 21, இந்தியக் கடிதம் 1, மாலைதீவுக் கடிதங்கள் 2, ஐரோப்பிய நாட்டுக் கடிதங்கள் 2, விலாசதாரரிடம் சேர்ப்பிக்க முடியாமற் திரும்பிய இலங்கைக் கடிதம் 1 என அடையாளம் காணப்பட்டுள்ளன.

உடனடி நடவடிக்கையாக மேற்படி கடிதங்களுக்குரியவர்கள் அலுவலகத்துக்கு அழைக்கப்பட்டு வங்கிக் காசோலைகள் இருப்பின் கொடுப்பனவு நிறுத்தம் செய்யுமாறு வங்கிகளைக் கோரும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

அன்றைய தினம் கந்தளாய் தபாலகத்துக்கு அனுப்பப்பட வேண்டிய ரூபா 97 ஆயிரம் பெறுமதியான முத்திரைகள் இருந்ததாகவும் இதனைக் குறிவைத்தே திருடர்கள் செயல்பட்டிருக்கலாம் எனவும் ஊகிக்கப்படுகிறது. அவை இடம் மாற்றி வைக்கப்பட்டிந்ததால் முயற்சி கைகூடவில்லை.

30.11.96 அன்றும் இதே பாணியில் மரப்பெட்டகத்துள்ளிருந்த 70 ஆயிரம் ரூபாய் திருடர்களால் கொள்ளையிடப்பட்டதும், திருடர்களைக் கண்டுபிடிக்க முடியாத நிலையில் கடமைக்குப் பொறுப்பாக இருந்த திரு.என்.சபாரத்தினம், திரு.எஸ்.வாமதேவ சர்மா ஆகிய இரு அதிகாரிகளும் ஆளுக்கு 35 ஆயிரம் வீதம் கட்டி நட்டத்தைப் பங்கேற்றனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் புலி மோதலில் பலி!

## பழிக்குப் பழி! புலிகள் தாக்குதல்!

இராணுவத் துணைப்படையினரான ஈ.பி.ஆர்.எல்.எஃப். ராசிக் குழுவினர் மறைந்திருந்து புலிகள்மீது தாக்கியதில் புலி உறுப்பினர் ஒருவர் பலியானார். அவரது சடலத்துடன் இரு மோட்டார் சைக்கிள்கள், 5 சைக்கிள்கள், மற்றும் துப்பாக்கி, கிரேனைட் என்பனவும் கைப்பற்றப்பட்டிருக்கின்றன.

இந்த மோதலின்போது, புலிகளில் இருந்து கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் படையினரிடம் சரணடைந்து ராசிக் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எஃப். துணைப்படையினருடன் இயங்கி வந்த சு.குருகுலசிங்கம் என்பவர் கொல்லப்பட்டார். மேற்படி சம்பவம் மட்டக்களப்பு- சித்தாண்டிப் பகுதியில் 16.11.98 அன்று இடம்பெற்றது.

புலி உறுப்பினர் கொல்லப்பட்டதற்குப் பதிலடியாக மறுநாள் இரண்டு ஈ.பி.ஆர்.எல்.எஃப். துணைப்படையினரைப் புலிகள் சுட்டுக் கொன்றனர். ஏறாவூர்- ஆறுமுகத்தான் குடியிருப்பைச் சேர்ந்த வி.விஜயகுமார் என்பவரை அவரது வீட்டிலிருந்து அழைத்துச் சென்று வீதியில் வைத்துச் சுட்டுக் கொன்றனர். இவரது தந்தை சில காலம் முன்பாக படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.

மட்டக்களப்பு-தாழங்குடாவில் எஸ்.கனகலிங்கம் என்பவரையும் புலிகள் சுட்டுக் கொன்றனர்.

# ஜெனரேற்றர் புலிகளால் பறிப்பு!

மட்டக்களப்பு-செங்கலடியிலுள்ள இலங்கை வங்கியை உடைத்து உட்புகுந்த புலிகள் அங்கிருந்த 70 ஆயிரம் ரூபா பெறுமதியான ஜெனரேற்றர் ஒன்றை எடுத்துச் சென்றுள்ளனர் என்று பொலிஸில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வங்கியில் இருந்த வேறெதிலும் புலிகள் கவனம் செலுத்தவில்லை என்று வங்கி நிர்வாகம் கூறுகிறது. கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக இந்த வங்கியில் ஜெனரேற்றர் மூலம் கருமங்கள் நடைபெறுவதைப் புலிகளும் அறிந்திருந்தபோதிலும் அதற்கு எதுவித ஊறும் விளைவிக்கவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மின் விநியோகம் தடைப்படுத்தப்பட்ட பின் பாவினையில் இருந்த ஜெனரேற்றர் ஒன்றைப் புலிகள் பறித்துச் சென்றிருப்பது இதுவே முதற் தடவையாகும்.

இதனிடையே வசதி படைத்த ஏராளமானோர் தமது சொந்தப் பாவினைக்காக ஜெனரேற்றர்களை வாங்கியுள்ளார்கள். மின் விநியோகத்தை விரைவில் புலிகள் வழங்க அனுமதிப்பர் என்ற நம்பிக்கை அற்றுப் போய்விட்டதாக மின் பாவினையாளர் கூறுகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

# காணாமல் போனோரின் எலும்புகள்



கிளிநொச்சியில் உதய நகரில் மலசலகூட குழிகளில் இருந்து மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளையே படத்தில் காண்கிறீர்கள். கணவன்-மனைவி ஆகியோரும் எலும்புக்கூடுகளாகக் கிடந்தனர். கிளிநொச்சியை புலிகள் கைப்பற்றிய பின்னரே இவை கண்டெடுக்கப்பட்டன.

# 'ரெலிகொம்' பொறியியலாளருக்கு பழிவாங்கல்

## அரசியல் போட்டியில் பலிக்கடா!

மட்டக்களப்பில் மக்கள் நலனைக் கவனத்திலெடுக்காமல் அரசியல் தொழில் நடத்துவதிலும், அரசியல் பழிவாங்கலுடன் பத்திரிகைகளிலேயே அபிவிருத்தி பற்றி அறிக்கைப் போட்டி நடத்துவதிலும் அரசியல்வாதிகள் முனைப்புக் காட்டுகின்றனர்.

சமீபத்தில் மட்டக்களப்பு 'ரெலிகொம்' நிறுவனப் பொறியியலாளர் ஏறாவூரில் தொலைத்தொடர்பு கேபிள்களை அமைக்கும் புதிய திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் ஐ.தே.க. பாராளுமன்றப் பிரதிநிதியான அலிஸாஹிர் மௌலானாவும் கலந்து கொண்டார்.

ரெலிகொம் நிறுவனத் தலைவருக்கு அவர் கொடுத்த வேண்டுகோளின் பேரிலேயே 1000 தொலைபேசி இணைப்புக்களை வழங்கும் புதிய திட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டதாலும் தனது சொந்த ஊர் என்பதாலும் ஐ.தே.க. பா.உ சந்தர்ப்பத்தைத் தவறவிடாது கலந்து கொண்டுள்ளார்.

இதனைச் சூட்டோடு சூடாக கேள்விப்பட்ட ஒரு பிரதியமைச்சர், மட்டக்களப்புப் பொறியியலாளரைக் கடிந்து கொண்டதுடன் அவருக்கெதிரான நெருக்குதல்களைக் கொடுத்துத் தண்டனை வழங்குமளவுக்கு விவகாரத்தைப் பெரிதாக்கி விட்டார்.

உடனடியாக பொறியியலாளரான அந்தத் தமிழருக்கு சிங்களப் பகுதியான பொலன்னறுவைக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. பொறியியலாளருக்கு வழங்கப்பட்டுள்ள திடீர் இடமாற்றம் பழிவாங்கலும், அநீதியானதும் என்று மட்டக்களப்பு தொலைபேசிப் பாவனையாளர்கள் விசனம் தெரிவிக்கிறார்கள்.

அபிவிருத்தி வேலைகள் சகலதும் தங்கள் முயற்சியிலேயே நடைபெறுகிறதென்று பத்திரிகைகளுக்கு அறிக்கைப் போட்டி நடத்துவோர் மக்களுக்குச்சேவை செய்வதை மறந்து அடிப்படையில் பல பாரபட்சங்களைக் காட்டி வருகின்றனர்.

### புலிகள் சந்தேகம்

அபிவிருத்தி என்று போலியான வெறும் அறிக்கைகளை விடுவதாலேயே புலிகளும் கிழக்கில் முரண்பட்டு பல தடைகளை ஏற்படுத்தியுள்ளனர். மின்சாரம் வழங்கும் அபிவிருத்தித் திட்டம் என்று வாக்குறுதி அளித்தது வெறும் ஏமாற்று என்று புலிகள்- கருதுகிறார்கள்.

இத்தகைய போலியான ஏமாற்று வாக்குறுதிகளின் மறைவில் பெரிய அரசியல் பின்னணி இருப்பதாகவே அவர்கள் உணருகிறார்கள். அதனாலேயே புலிகளின் வசமுள்ள கொக்கட்டிச்சோலைப் பகுதிக்கு மின்சாரம் வழங்கும் புதிய திட்டத்திற்கு பாதுகாப்புப் பிரதியமைச்சருடன் தான் எடுத்த முயற்சியின் பயனாக அனுமதி கிடைத்துள்ளது என்று பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் பத்திரிகைகளில் விட்ட அறிக்கைகளையும் புலிகள் சந்தேகக் கண்கொண்டு நோக்கினர்.

# தொண்டர் ஆசிரியர் எதிர்காலம்

## "அரசுக்கு கரிசனை இல்லை!"

(நமது நிருபர்)

"அதிகாரத்திலுள்ளவர்கள் தொண்டர் ஆசிரியர்கள் விடயத்தில் எதுவித கரிசனையும் காட்டவில்லை. தொண்டர் ஆசிரியர்கள் போராட்டக்களத்தில் குதிக்க வேண்டிய சந்தர்ப்பம் வந்துவிட்டது!" என அகில இலங்கை இஸ்லாமிய தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் எம்.எல்.அவ்பர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மருதானை தொழிற்சங்க தலைமை செயலகத்தில் இருந்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

"தொழிற்சங்க நடவடிக்கை மூலம் பல்வேறு துறையைச் சார்ந்தவர்களும் தமது உரிமைகளுக்காகப் போராடி வெற்றி ஈட்டுகின்றனர். ஆனால் தொண்டர் ஆசிரியர்களுக்காகப் போராடும் ஒரு அமைப்பு தமிழ் பேசும் சமூகங்களைப் பொறுத்தவரை இதுவரை தோன்றவில்லை.

இன்று நாம் முஸ்லிம் தொண்டர் ஆசிரியர்களை தேசிய மட்டத்தில் அமைப்பு ரீதியாக ஒன்று படுத்தியுள்ளோம். அத்துடன் பல்வேறு செயற்திட்டங்களை துரிதமாக மேற்கொண்டு வருகிறோம். எதிர்காலத்தில் தொண்டர் ஆசிரியர் சங்கத்தை ஒரு தேசிய அமைப்பாக மாற்றுவோம்!" என்று கூறியுள்ளார்.

# பிரயாணிகள் சங்கம் வேண்டுகோள்!

## ஆணைச் சீட்டுக்கு பஸ் பயணம்

கிழக்கு மாகாணத்தில் கதுறுவெல இலிருந்து மட்டக்களப்புவரை புகையிரத சேவை நடைபெறும் சாத்தியக்கூறே இல்லை. அதனால் அரச ஊழியர்கள் புகையிரத ஆணைச் சீட்டைப் பயன்படுத்தி பஸ்களில் பயணம் செய்ய அனுமதி வழங்குமாறு கேட்டு நியூ ஈஸ்டேர்ன் பஸ் கம்பனியின் நிருவாகப் பணிப்பாளருக்கு பிரயாணிகள் சங்கத்தலைவர் எஸ்.எம்.மீரா முகைதீன் கடிதம் அனுப்பியுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: மட்டக்களப்பில் இருந்து பொலன்னறுவை வரைக்கும் புகையிரத சேவை கிடைக்கும் என்ற சாத்தியக்கூறு அற்றுவிட்டது. இதனால் கிழக்கு மாகாண அரச ஊழியர்கள் தங்களது இலவச ஆணைச்சீட்டைப் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளார்கள் என்பது அறிந்ததே. தற்போதுள்ள சூழ்நிலையில் கல்முனை, களுவாஞ்சிக்குடி, காத்தான்குடி, மட்டக்களப்பு, ஏறாவூர், வாழைச்சேனை போன்ற இ.போ.ச. பஸ் டிப்போக்கள் தூர இடங்களுக்கான பஸ் சேவையை நடாத்துகின்றன.

அரச ஊழியர்களின் புகையிரத ஆணைச்சீட்டை பஸ் சேவைக்கு மாற்றுவதால் பஸ்டிப்போக்களின் வருமானமும் அதிகரிக்கும். அத்துடன் பொது மக்களுக்குப் பிரயாண சௌக்கியமும் நன்மையும் கிடைக்கும்.


விளம்பரப் பகுதி

ALPHA TELECOM CARD - SWISS

சுவிஸ் நாட்டில் அல்பா தொலை பேசி அட்டைகளின் மொத்த விற்பனையாளர் V.T. சீலன்.
சுவிஸில் ஏனைய மாநிலங்களுக்கும் விற்பனை முகவர்கள் தேவை.
18 வீதம்வரை கொமிஷன் வழங்கப்படும்.
— மேலதிக விபரங்களுக்கு —
ALPHA TELE COM CARD
V.T. SEELAN
MOOS SRT-01
8038 - ZURICH
SWISS.
Tel: 01-4812521
Natel: 079-4322158

ஸ்டுடியோ சாயா
வீடியோ, போட்டோ, பிரேமிங், லேமினேஷன், டியூரோகாட்.
40 1/1, காலி வீதி, வெள்ளவத்தை. தொ.பே.:594492

New Victors

பழுது பார்க்கும் இடம்
நியூ விக்ரஸ்
40 1/3, காலி வீதி,
(அலெக்சான்ட்ரா வீதிக்கு அருகில்)
வெள்ளவத்தை.

அஸ்மா
நோய்க்கு வைத்தியம்
* தொய்வு * இழுப்பு
* இளைப்பு * மாய்ச்சல்
* மூச்சுத்தட்டல் * இருமல்
* சளி * மூக்கடைப்பு
* தலைவலி * தும்மல்
* பீனிசம்
போன்ற குணங்களுக்கு முழு சுகமடைய உடலுக்கு பாதுகாப்பான, பக்க விளைவுகள் அற்ற மருந்துகளைக் கொண்டு கிருமியான, குளிரான, சமிபாடு அடையாத உணவுகளை உண்ணுதல் மற்றும் குளித்தல் போன்ற பல விளக்க முறைகளுடன் சிகிச்சை அளிக்கப்படுகிறது.
ஒருமுறை வைத்தியம் செய்து பாருங்கள் பலன் தெரியும்.
டாக்டர்
சுறாஜ் சோமசுந்தரம்
அஸ்மா சிகிச்சை நிபுணர்
Ph.Dh(Ind); M.B.B Sch (Cey)
Govt Reg No A 1553 (1970)
25, சில்வெஸ்டர் வீதி, கல்கிசை
மவுண்ட்லேவினியா - (கொழும்பு)
(பஸ்ஸால் இறங்க வேண்டிய இடம் ஓடியன் தியேட்டர்)
தினமும் மாலையில்
4 மணி முதல் 7 மணி வரை
தூர மாவட்டத்தில் உள்ள நோயாளர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு தொலைபேசி மூலம் பதிவு செய்தால் காலை நேரங்களிலும் பார்வையிடப்படும். சனி, ஞாயிறு, விடுமுறைநாட்களில் நோயாளர்கள் அதிகம் இருப்பதினால் புதிய நோயாளர்கள் தொலைபேசி மூலம் பார்வையிடப்படும் நாளையும் நேரத்தையும் பெற்று வரவும்.
074-201582

NISACO STEEL FURNITURE

Special Discount on This Month Only
Open on Every Sunday 8.am to 8.pm
நிசாகோ இன்டஸ்ட்ரீஸ்
204, ஆல்பத்திரி வீதி, களுபோவில, தெஹிவல. Tel : 074-201727 Fax : 075-515168
(Opposite Buddagosha Vidyalaya)
FACTORY & SHOW ROOM
Millagaha Estate, Aturugiriya Road, Hokandara North, Hokandara. Tel: 561367
(Near the telecommunication Exchange Hokandara)

காண்டம்
முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை
ரிஷி.S.மணி
மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.
S. MANI
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு-6.
T.P:- 586218

மனோதத்துவ வைத்தியம்
பிரபல மனோதத்துவ நிபுணர் Dr. P.ஆறுமுகம் அவர்களை
கொழும்பில் நவம்பர் 22முதல் 30 வரை சந்திக்கலாம்
Dr. P.Arumugam S.A.M.P REG.9492
BEAUTY LODGE, 67/A, WOLFENDHAL ST. COLOMBO-13.
(5 லாம்புச் சந்தியிலிருந்து 100 யார் தூரத்தில் உம்பிச்சி பிளேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது) (ஆட்டுப்பட்டித் தெரு) T.P:- 338165-338166
கொழும்பு நாட்கள் மட்டும் செல்டெல் No. 072-609388
கல்முனையில் டிசம்பர் 5,6ம் திகதிகளில் சந்திக்கலாம்
T.M.M. பார்மசி - கல்முனை. T.P. 067-29329
வவுனியாவில் டிசம்பர் 12,13,14ம் திகதிகளில் சந்திக்கலாம்
(முன்கூட்டியே பதிவுசெய்யவும்) VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோயில் வீதி, வவுனியா. T.P. 024-22074 Residend: T.P. 065-24019
கடிதத்தொடர்பு:- Dr. P.Arumugam S.A.M.P.
No. 33, Tissa Weerasingam sq, Boundary Road, Batt SRI LANKA.

உங்களுக்கும் அஞ்சல்வழி விவிலியம் (R.C) கற்க விருப்பமா?
இறை வார்த்தை எமது வாழ்க்கைப் பாதைக்கு விளக்கு
பலரிடத்திலும் இன்று வேதாகமத்தை அறிய வேண்டும் என்ற ஆவல் இருக்கின்றது. எனவே 2 ஆண்டுகளில் வேதாகமத்தை பற்றிய அடிப்படை அறிவை பெற அஞ்சல்வழி வகுப்பை ஆரம்பிக்க இருக்கின்றோம்.
இக்கல்வி முறையில் இணைந்து கற்கவிரும்பினால் கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
வேறு பல கிறிஸ்தவ நூல்களிற்கும் நீங்கள் நாட வேண்டிய இடம்:
DIRECTOR, Claretian Publications,
No: 55, Ragama Road, Welisara, Ragama.
T.P:- 958542

மலையாள மாந்திரிகம்


மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.
தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
P.K. SAAMI J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHIRIKA
UCHCHADA PEEDAM
NO. 162, KOTAHENA STREET,
MAY FIELD ROAD, COLOMBO-13.
வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831

BRIGHT NEW METHOD
SPOKEN ENGLISH
பேச்சு ஆங்கிலம்
தபால் மூலமும் நேரிலும் நடைபெறும்

ஆங்கிலம் பேச வேண்டும் என்று விருப்பம்
ஆனால்......
ஏதாவது தவறாகப் பேசி விடுவோமா என்ற தயக்கம், பயம்.
மற்றவர்கள் ஆங்கில மொழியைப் பேசும் போது புரிந்து கொள்ள முடிகிறது
ஆனால் பேசும் போது தயக்கம்
இது தானே உங்கள் பிரச்சினை
கவலையை விடுங்கள்!
மிக குறுகிய காலத்தில் ஆங்கிலத்தில் பேசப் பழக முடியும். நேரில் கற்க விரும்புவோர் தொலைபேசி மூலமோ, நேரிலோ தொடர்புகொள்ளவும். தபால்மூலம் கற்க விரும்புவோர் கீழ்க்காணும் விண்ணப்பப்படிவத்துடன் சுயவிலாசமிடப்பட்ட தபாலுறையுடன் தொடர்பு கொள்ளவும்.
பெயர்: ..................
விலாசம்: ..................
BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S- 27 FIRST FLOOR, COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX. P.O. BOX NO: 162, COLOMBO - 11 TELE: 434770, 074 - 718592


# 31ம் நாள் நினைவஞ்சலி



திருமதி அந்தோனிப்பிள்ளை தேவியம்மா 23.10.1998 அன்று காலமாகி 22.11.1998 அன்று 31வது தினம். அன்னார் அந்தோனிப்பிள்ளை J.P. (வெள்ளை அண்ணர்) அவர்களின் அன்பு மனைவியும் விவேகானந்த், சாரதா, ஞானாநந்த் (பிரான்ஸ்), பிரேமானந்த், கணேசானந்த், தேவானாந்த் ஆகியோரின் அன்புத் தாயாரும் இரட்நேசன், இராதிகா, வசந்தி ஆகியோரின் மாமியாரும், கார்த்திகா, நிவேதா, கணேசானந்த், டிலக்ஸ்சனா, கீர்த்திகா ஆகியோரின் பேத்தியுமாவார். அன்னாரின் 31வது நினைவு நாள் ஸ்கந்தபுரம் முதியோர் இல்லத்தில் நடைபெற்றது.

தகவல்:- ஞா. பெனடிக்ற்


படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# மாவீரர் தின உளவியல் போர்

புலிகளின் விமானம் அங்கும் இங்கும் பறந்து போக்குக் காட்டுகிறது.

எங்கு தாக்கும், எப்போது தாக்கும் என்பதை ஊகிக்க முடியாமல் படைத்தரப்புக்கு திண்டாட்டம்.

1989ல் புலிகளின் மாவீரர்தினம் முதன் முதலில் பிரபாகரனால் பிரகடனம் செய்யப்பட்டது.

ஒன்பதாவது மாவீரர் தினம் இது. மாவீரர் தின தாக்குதல் 1990ல் மாங்குளம் முகாம்மீது முதலில் நடத்தப்பட்டது.

அதன்பின்னர் மாவீரர் தினங்களில் அதற்கு முன்னரோ பின்னரோ தாக்குதல்கள் நடத்தப்படுவதுண்டு.

இதனால் மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்படும் நவம்பர் மாதம் முழுவதும் படையினர் உஷாராகவே இருப்பதும், படை முகாம்கள் விழிப்பாக இருப்பதும் வழமை.

ஆனால் இம் முறை கடந்த ஆண்டுகளைவிட அதிக பரபரப்பும், பீதியும் நாடு முழுவதும் காணப்படுகிறது.

இத்தனைக்கும் புலிகளிடமிருந்து ஒரு எச்சரிக்கையோ, அறிவித்தலோ வரவில்லை.

விமானம் பறக்கும் தகவல்களும் கூட படைத்தரப்பின் ஊடாகவே வெளியாகி பரபரப்பையும், எதிர்பார்ப்பையும் உண்டாக்கின.

வானத்தில் இடிச் சத்தம் கேட்டால்கூட மக்கள் பீதிக்குள்ளாகும் மாதம் நவம்பர் மாதம். இம் முறை அப்பீதி கொழும்பில் அதிகமாக இருந்தது. பீதி மக்களுக்கு மட்டுமல்ல.

வடக்கு-கிழக்கிலும் படையினர் எந்நேரமும் தாக்குதலை எதிர்பார்த்தே இருக்க வேண்டிய கட்டாயம்.

வெடி குண்டு ஒன்றின் மேலே இருப்பது போன்ற மனநிலையில்தான் வடக்கு-கிழக்கில் உள்ள படையினர் நிலையும்.

1996ல் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் பின்னர் யாழ் குடாநாடு படையினர் வசம் சென்றது. மூன்று வருடங்களின் பின்னர் இம் முறை மாவீரர் தினத்தில் யாழ் குடாநாட்டில் நிலை கொண்டுள்ள படையினர் முன்னெப்போதும் இல்லாதளவு பரபரப்புக் காட்டினார்கள். துப்பாக்கியின் விசையில் வைத்த விரலை எடுக்காதளவுக்கு விழிப்பாக இருந்தாக வேண்டிய கட்டாயம்.

முன்னைய மாவீரர் தினங்களைவிட இம்முறை மாவீரர் தினம் படைத்தரப்பினது நாடித்துடிப்பை அதிகப்படுத்தியிருக்கிறது.

கிளிநொச்சி சமரின் பின்னர் புலிகளின் பலம் தொடர்பான பிரமிப்பு சகல மட்டங்களிலும் எழுந்துள்ளது.

கிளிநொச்சி சமர் ஏற்படுத்திய அதிர்ச்சி அலைகள்தான் தற்போதைய உளவியல் போருக்கு கைகொடுத்திருக்கிறது.

உளவியல் போர் வெற்றிக்கு புலிகளது விமானப் பறப்புக்களும் பெரிதும் உதவியுள்ளன.

மாவீரர் தினத்துக்கு முன்பாகவே புலிகளது விமானம் யாழ் குடாநாட்டின் சில பகுதிகளுக்கு மேலாக வட்டமிட்டு சென்றது.

குடாநாட்டில் படைத் தரப்பினரிடையே உளவியல் கலக்கத்தை உருவாக்கும் விதமான பறப்புக்களே அவை.

குண்டுகள் எதனையும் போடாமலேயே குடாநாடெங்கும் படை முகாம்களுக்குள் அதிர்ச்சியை உருவாக்கிவிட்டது விமானப் பறப்பு.

விமானப் பறப்பும், புலிகளின் பலம் தொடர்பான கணிப்புக்களும், பாரிய தாக்குதல் ஒன்றை எதிர்பார்த்து தினமும் பதற்றம் கொள்ளும் உளவியல் தாக்கத்தை கொடுத்துள்ளன.

தமது முகாம்களுக்கு அருகில் உள்ள மக்கள் கவனமாக இருக்க வேண்டும் என்று படைத்தரப்பே அறிவிக்கும் அளவுக்கு யாழ் குடாநாட்டில் பாதுகாப்பு நிலவரம் உள்ளது.

யாழ் குடாநாட்டில் இருந்து புலிகளை முற்றாக விரட்டி விட்டோம் என்று சில வருடங்களுக்கு முன்னர் கூறிய அதே படையினர், தமது முகாம்களை தாக்குமளவுக்கு குடாநாட்டில் புலிகள் பலம் பெற்று வருவதை தமது அறிவித்தல் மூலம் இம் மாவீரத்தினத்தில் ஒப்புக் கொண்டு விட்டனர்.

படையினரது இத்தகைய அறிவித்தல் மக்களையும் கிலிகொள்ள வைத்தது. யாழ் குடாநாட்டில் மக்கள் வீடுகளைவிட்டு வெளியே வரவே அஞ்சினார்கள்.

நகரிலும் நடமாட்டம் குறைந்து வெறிச்சோடிக் காணப்பட்டது. வர்த்தக நிறுவனங்கள் கூட யாழ் நகரில் நேரகாலத்துடன் மூடப்பட்டன.

சைக்கிள் டயர் வெடித்தால்கூட மக்கள் ஓட எத்தனித்தனர். புலிகளால் தாக்குதல் நடத்த முடியும் என்று மக்கள் நம்புவது ஒரு காரணம். புலிகள் தாக்கினால் பதிலுக்கு தாம் பாதிக்கப்படலாம் என்று நம்புவது இரண்டாவது காரணம். அதுதான் மக்கள் கிலி கொண்டனர்.

அடையாள அட்டைகளை தொலைத்தவர்கள் இராணுவ காவலரணை தாண்டிச் செல்லவே முடியாது என்று படைத்தரப்பு யாழ்ப்பாணத்தில் கூறியிருந்தது.

எந்தளவுக்கு படைத்தரப்பின் மனோநிலை இருந்துள்ளது என்பதற்கு அந்த அறிவித்தல் ஒரு உதாரணம்.

மொத்தத்தில் துப்பாக்கியின்றி, இரத்தம் இன்றி உளவியல் போர் ஒன்றை புலிகள் நடத்தியுள்ளனர்.

தாக்குதல் நடவடிக்கைகளது நோக்கங்கள் இரண்டு.

ஒன்று: எதிரியை உடல்ரீதியாக அழித்தல்.

இரண்டு: எதிரியின் உளவியல் பலத்தை அழித்தல்.

எந்த யுத்தத்திலும் ஆயுத பலத்தைவிட மனோபலமே பிரதான பாத்திரம் வகிக்கிறது.

மனோபலத்தை சிதைத்தால் எதிரியை உடலியல் ரீதியில் அழிப்பது சுலபம் என்பது போர் விதி.

கிளிநொச்சி சமர் மூலம் தமது எதிர்த்தரப்பில் ஏற்பட்ட மனோபல தாக்கத்தை மேலும் உயர்த்த புலிகள் திட்டமிட்டனர்.

விமான பறப்புக்களும், முகாம்களுக்கு அருகே குடியிருக்க வேண்டாம் என்று குடாநாட்டில் விடுக்கப்பட்ட எச்சரிக்கைகளும் உளவியல் சமருக்கான உத்திகள்தான்.

ஆனால், இந்த உளவியல் சமர் சட்டென்று உண்மையான சமராக எங்கு மாறும் என்பதை படையினர் ஊகிக்க முடியாது.

யாழில் தென்மராட்சியை விட்டு மக்களை வெளியேறுமாறு புலிகள் கூறவில்லை. அது மக்களை குழப்ப புலிகளுக்கு எதிரான சக்திகள் கிளப்பிவிட்ட புரளி.

முகாம்களுக்கு அருகேயுள்ள மக்களைத் தான் தள்ளிச் செல்லுமாறு புலிகள் கூறியிருந்தனர்.

அவ்வாறு புலிகள் கூறி பலமாதங்களாகி விட்டன. ஆனால் தாக்குதல் எதுவும் நடக்கவில்லை.

படையினர் தாக்குதலை எதிர்பார்த்து இத்தனை மாதங்களும் விழிப்பாக இருந்தனர். சில முகாம்களும் தென்மராட்சியில் மூடப்பட்டன. புலிகளின் உளவியல் போர் பயனளித்தது.

இங்குதான் ஒரு ஆபத்து இருக்கிறது. உளவியல் போர்தான் என்றும், புலிகள் உண்மையாக தாக்கமாட்டார்கள் என்றும் படைத்தரப்பு ஒரு கட்டத்தின் பின்னர் சலித்துப்போகும். விழிப்பை தளர்த்தும். அப்போது முன்னர் எச்சரிக்கப்பட்ட முனைகளில் ஏதாவது ஒன்றில் புலிகள் பாய்ச்சல் நடத்துவர்.

புலிகளிடம் தாக்குதல் பலம் இருப்பதால், அவர்கள் போக்குக் காட்டினாலும் இழுபட வேண்டிய நிலை படைத்தரப்புக்கு இருக்கிறது.

இராணுவரீதியில் பலமான ஒரு தரப்புக்கு உளவியல் போர் நடத்துவதும் சுலபம். ஏனெனில் அத் தரப்பின் பெயரில் பரவும் வதந்திகளைக்கூட மக்கள் நம்புவர். மக்கள் மட்டும் தான் என்றில்லை.

புலிகளின் எதிர்த்தரப்புகளும் உளவியல் போர் உத்திகளை கையாண்டு பார்த்துள்ளனர். ஆனால் அவர்களது உத்திகள் மக்களைத்தான் குழப்பியுள்ளன. பாதிப்படைய வைத்துள்ளன. புலியணிகளை எப்பாதிப்புக்கும் உள்ளாக்கவில்லை.

தென்மராட்சியில் முகாம்களுக்கு அருகே உள்ள மக்கள் தள்ளியிருப்பது நல்லது என்று புலிகள் கூறியதை, தென்மராட்சி முழுவதும் உள்ள மக்கள் வெளியேறவேண்டும் என்று புலிகள் கூறியதாக புரளி கிளப்பப்பட்டது.

யாழ் குடாநாட்டு பாடசாலைகள் அனைத்தையும் மூடிவிடுமாறு புலிகள் போடுவதுபோல கடிதங்கள் அனுப்பப்பட்டன.

மக்கள் கூடும் பகுதிகளில் மர்மக் குண்டுகள் வெடித்தன. இவையெல்லாம் புலிகளை உளவியல் தாக்கத்திற்கு உள்ளாக்குவதற்கும் பதிலாக, மக்களையே குழப்பின.

புலிகளை மக்கள் வெறுப்பர் என்பதும் இத்தகைய புரளிகளே நோக்கமாக இருந்தன. ஆனால் புலிகளின் பெயரில் தங்களுக்கு ஆபத்தை விளைவிக்க வேறு சக்திகள் திட்டம் போடுவதாக நினைத்து மக்கள் கிலி கொண்டனர்.

இத்தகைய மனோநிலைகூட புலிகளின் எதிர்த்தரப்புக்களுக்கு எதிரான உணர்வுகளையே தோற்றுவித்தன.

எனவே உளவியல் போர் நடத்துவதில் தமது எதிர்த்தரப்புக்களைவிட புலிகளே மேலோங்கி நிற்கின்றனர்.

இம்முறை மாவீரர்தின உளவியல் போர் அரசுக்கு ஏற்படுத்தியுள்ள செலவீனங்கள் மிக அதிகம்.

அரசுக்கும், படைகளுக்கும் இரண்டு வித நெருக்கடிகள் உள்ளன.

ஒன்று: புலிகளின் உளவியல் போருக்கும் முகம் கொடுத்தாக வேண்டும்.

இரண்டு: உண்மையான தாக்குதலுக்கும் ஈடுகொடுத்தாக வேண்டும்.

'யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே' என்பது போல, உளவியல் போர் முன்னேவர, உண்மையான பாய்ச்சல் நடக்கும் பின்னே.

□ □

மாவீரர் தினத்தை முன்னிட்டு படையினர் பாரிய நகர்வை வன்னியில் ஆரம்பிக்கக்கூடும் என்று வெளியான ஊகங்களை நாம் மறுத்திருந்தோம்.

வன்னி கள நிலவரம் அதற்கு இம்முறை அனுமதிக்காது என்று கூறியிருந்தோம். அவ்வாறுதான் நடந்திருக்கிறது.

பாரிய தரை நகர்வு சாத்தியம் இல்லை என்பதால், வான் மார்க்க தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக நான்கு நாட்கள் தாக்குதல் நடந்துள்ளது.

புலிகளின் விமான எதிர்ப்பு துப்பாக்கிகளும், ஏவுகணைகளும் தயார் நிலையில் இருக்கும் என்று கருதப்படுவதால் இலக்கு பார்த்து நிதானமாக குண்டு போட முடியாது.

விமானத்தில் ஏற்றப்படும் குண்டுகள் அத்தனையையும் போட்டுவிட்டுத்தான் வரவேண்டுமா? போடப்பட்ட குண்டுகள் குடிமக்கள் உயிரை குடித்திருக்கின்றன. சொத்துக்களை நாசமாக்கியுள்ளன.

முள்ளியவளையில் மட்டும் நான்குபேர் உடல் சிதறிப் பலியாகியுள்ளனர். சாந்தினி, ஜெயந்தினி என்னும் இருசகோதரிகளும் பலியாகியுள்ளனர். கிளிநொச்சியில் மூன்றுபேர் பலியானதாக இதுவரை கிடைத்த தகவல்கள் கூறுகின்றன. அதில் 7 வயது சிறுமியும் அடக்கம்.

**புலிகளின் விமானப் பறப்பு உளவியல் போருக்கு கைகொடுக்கிறது.**

வானமாகக் தாக்குதல்கள் அவலை நினைத்து உரலை இடித்த கதை.

யாழ் குடாநாட்டு வான் பரப்பிலும் கிபீர் குண்டுவீச்சு விமானம் பறந்துள்ளது. யாழ் குடாநாட்டில் புலி முகாம்கள் இல்லை. எனவே யாரை அச்சுறுத்த அந்தப் பறப்பு? வட்டமடிப்பு?

படைத்தரப்பின் தற்காப்பை விமானத் தாக்குதல்கள் ஒருபோதும் பூர்த்தி செய்யாது.

பாரிய தாக்குதலுக்கு புலிகள் திரண்டால்கூட வான் தாக்குதல் மூலம் அதனைத் தடுக்க இயலாது.

முகாம்கள் தாக்கப்பட்டால் நாங்கள் உங்கள் மக்களை தாக்குவோம் என்று புலிகளை அச்சுறுத்துவது போன்ற தாக்குதல்களா? என்று மக்கள் வினாவுகின்றனர்.

தொடர் விமானத் தாக்குதல்கள் மக்களின் சந்தேகத்தை அதிகரிக்கச் செய்யும். எதிர்பார்க்கும் பலன்கள் படைத்தரப்புக்கு கிட்டாமல் போகும்.

வன்னியில் பொருளாதாரத் தடைகள் அங்குள்ள மக்களை கடும் வெறுப்புக்குள் தள்ளியுள்ளது. ஆயிரத்து ஐநூறுக்கு மேற்பட்டவர்கள் சமீபத்தில் புலிகளில் இணைந்துள்ளனர்.

விமானத் தாக்குதல் விளைவுகள் புலிகளின் ஆட்பலத்தை பெருக்கும்.

பொருளாதார தடைக்கு அரசு கூறும் காரணம் என்ன? புலிகளுக்கு உணவுப் பொருட்கள் போய்ச் சேருகிறது என்கிறார்கள்.

பாரிய பொருளாதார தடைகள் மத்தியில்தான் மிகப் பெரிய சமரான ஓயாத அலைகள்-02 ஐ புலிகள் நடத்தி முடித்தனர்.

பொருளாதார தடைகள், விமானத் தாக்குதல்கள் அரசு நினைப்பதற்கு மாறாக புலிகளது ஆட்பலமும் உளவளமும் பெரிதாகவே தளம் அமைத்துக் கொடுகின்றன.

இதற்கிடையே ஜயசிக்குறுய் 18 மாதங்களை பூர்த்தி செய்திருக்கிறது. ஒன்றரை வருட சமர்.

சமர்களுக்கு எல்லாம் தாய்ச்சமர் என்று விபரிக்கப்படும் 'ஜயசிக்குறுய்' ஜனவரிக்கு முன்னர் நகர்வு முயற்சிகளில் ஈடுபடமுடியாது.

ஜனவரிவரை 'ஜயசிக்குறுய்' படையினர் காத்திருக்க புலியணிகள் அனுமதிக்குமா? என்பது பிரதானமான கேள்வி.

'எதிரி தேடிவர முன்னர் அவனது வாசல் தேடி நாம் செல்ல வேண்டும்.' என்பது பிரபா அடிக்கடி கூறுவது.

படயினருக்கும் தமது எதிரிகளது உத்தி தெரியும்தான். ஆனால் எந்த முனையில் குறி வைக்கப்படும் என்பதை ஊகிக்க முடியாமல், குழம்பிப் போனது போலவே சம்பகால பதற்றங்கள் காணப்படுகின்றன.

இன்னொன்று, நினைத்த நேரத்தில் தமது எதிரியை தேடிச்செல்லக்கூடிய நிலையில் புலிகள் உள்ளனர். ஆனால் படைத்தரப்பினர் தமது எதிரியை தாம் நினைத்த நேரத்தில் தேடிச் செல்லக்கூடிய கள நிலவரம் இல்லை.

எவ்வாறிருந்தாலும் இன்றைய பிரதான சண்டை முனை வன்னிக்களம்தான். பிரதான சமர் 'ஜயசிக்குறுய்' சமர்தான்.

அரச துருப்புக்களது பிரதான நோக்கம் 'ஜயசிக்குறுய்' நடவடிக்கையை பலப்படுத்துவதாக அமையும். புலிகளின் பிரதான நோக்கம் ஜயசிக்குறுய்யை பலவீனமாக்குவதாகவே அமையும்.

எனவே, வன்னியில் மட்டுமல்ல அதற்கு வெளியே புலிகள் நடத்தும் தாக்குதல்களும் 'ஜயசிக்குறுய்' களத்தில் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடியதாகவும், தாக்கத்தை தரக்கூடியதாகவுமே இருக்கும்.

வன்னியில் பயிற்சிகள் துரிதமாக நடந்துவருகின்றன. வன்னியிலும், கிழக்கிலும் புதிதாக இணைக்கப்பட்ட உறுப்பினர்களுக்கும் வன்னியிலேயே பயிற்சி அளிக்கப்படுகிறது.

## நாரதர்

சமீபத்தில் வன்னியில் வெடி விபத்து ஒன்று நடந்தது. மட்டக்களப்பு அணியின் முகாமிலேயே விபத்து நிகழ்ந்துள்ளது. 7 புலிகள் பலியாகினர்.

வெடிகுண்டுத் தாக்குதலுக்கான பயிற்சியின்போதே குண்டு வெடித்திருக்கிறது.

பயிற்சிகளின் துரிதம் அடுத்த கட்ட தாக்குதலுக்கு புலியணிகள் தம்மை தயார்படுத்தி வருவதையே காண்பிக்கின்றன.

பயிற்சிகளை பிரபாகரனே நெறிப்படுத்துகிறார். வன்னிக் களத்துக்கு ஏற்ற பயிற்சிகளும் உண்டாம்.

'ஜயசிக்குறுய்' களம் மட்டுமல்ல, வன்னியில் படையினர் நிலைகொண்டுள்ள சகல முனைகளிலும், புலிகளின் உளவுப் பிரிவின் நடமாட்டத்தை காணமுடிகிறது.

தகவல்கள் திரட்டப்பட்டு வரைபடங்கள் தயார். எது குறி என்பதை தீர்மானிப்பது பிரபாகரன்தான்.



கடந்த மாவீரர்தினம்



புலிகளின் பயிற்சி முகாம்

## அதிரடி அய்யாத்துரை



***குமாரர் என்றால்*** தமிழ்க் கட்சித் தலைவர்மாருக்கு பிடிக்காது. தங்களால் முடியாததை அவர் செய்வதால் எக்கச்சக்க பொறாமை. அவரை விசாரணைக்கு உள்ளாக்கப்போவதாகச் செய்திகள் கண்ட சிலருக்கு குசியாம். வந்தேறு குடிப்பேச்சுக்கு வருத்தமே தெரிவிக்கவில்லை. குமாரரின் பேச்சுக்கு மட்டும் நடவடிக்கையாம். அதை எண்ணிப் பார்க்காமல், குமாரருக்கு கண்ணிவைக்கினம் டமில் கட்சிக்காரர்கள் சிலர். எப்பதான் பரந்த மனதோடு சிந்திக்கப்போகினம்?

***வவுனியாவில்*** கூட்டுறவுச் சங்கத் தலைவரைக் குத்தியதை தமிழ்க் கட்சி ஒன்று பொதுப்படையாகக் கண்டிச்சது. சக கட்சி செய்தால், அதை அராஜகம் என்று கூறுவதற்கு ஏனைய கட்சிகளுக்கு நாக்கூச்சமாம். இப்போது புரியுதோ ஜனநாயக அக்கறைறைறை! ஆனால் ஒன்று, தனிப்பட்ட முறையில் பலருக்கு காதும் காதும் வைத்த மாதிரி பிரசாரம் செய்திருக்கினமாம். வாழ்க ஐக்கியம்!

***யாழ்ப்பாண பத்திரிகை*** கட்சியின் பெயரைக் குறிப்பிடாமல் சம்பவம் ஒன்று தொடர்பாக பொதுப்படையாக கண்டனம் தெரிவித்திருந்தது. "யார் என்று கூறாமல் கண்டிப்பது முறையல்ல" என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப்.காரரர் கூறியிருந்தவை. அதற்கு பத்திரிகையும் பதிலடி கொடுத்திருந்தது. இது பலமாதம் முன்னர் நடந்த கதை. சமீபத்தில் வவுனியா சம்பவத்திற்கு அதே கட்சி விட்ட அறிக்கையில் சம்பவத்திற்கு யார் காரணம் என்று கூறாமல் கண்டனம். ஹி.ஹி.ஹி.

***"வவுனியாவில் கிராமம்*** கிராமமாக ரெண்டு எழுத்தாரை கிளியர் பண்ணித்தரலாம்!" என்று தமிழ்க் கட்சி ஒன்று ஆயுதம் கேட்டுள்ளதாம். பெரிய பட்டியலே கொடுத்திருக்கினமாம். பச்சைத் தரப்பு பரிசீலித்து வருகிறதாம். அவைக்கும் வேலை மிச்சம்தானே!

***கொழும்பில் தனியார்*** பஸ் சாரதியை பொலிசார் தாக்கியதால் வேலை நிறுத்தம் நடத்திப்போட்டினம். "தட்டி'க் கேட்கக்கூட எங்களுக்கு அதிகாரம் இல்லாமல் போச்சு. உடனே ஸ்ரைக் பண்ணுகிறார்கள். நாங்கள் என்ன பண்ணுவது?" என்று பொலிஸ்காரர் சிலர் முணுமுணுக்கினம். தமிழ் மக்கள் இருக்கையில் ஏன் கவலை? தட்டிக் கேட்டுக் கொண்டுதானே இருக்கிறியள்? ஐ.சி., பொலிஸ் பதிவு, இப்போது புகைப்படமும் கேட்கிறியள்! நாளைக்கு குடும்பமாக வீடியோ எடுத்துத் தரச் சொல்லியும் கேப்பியள், என்று சொல்ல நினைத்தாராம் நண்பர்.

***சாப்பாட்டுக் கடைகளை*** கொழும்பில் அலசி ஆராய்ந்ததில் திடுக் செய்திகளாம். மலசலகூடத்திற்கும் சமையலறைக்கும் சில கடைகளில் வித்தியாசமே தெரியவில்லையாம். வேறு சில கடைகளில் மலசல கூடத்தின் அருகிலேயே சமையல் அறையாம். கடைகளில் சாப்பிடுபவர்கள் கடைத்தேறவோ முடியும்? கிருமிகள்தான் குடைந்தாடும்!

***இலங்கை இனப்பிரச்சனைக்கு*** மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்றால் அதிகாரத்தரப்புக்கு பற்றிக்கொண்டு வரும். அதனால் டமில் கட்சிகள் போல நாமும் அதைப் பற்றி கதைக்காமல் வேறு விஷயம் பேசவோம். சர்வதேச அளவில் இலங்கைத் தமிழர் ஒருவர் மத்தியஸ்தராக இருக்கிறார். என்ன, ஆச்சரியமாக இருக்கிறதோ? அவுஸ்திரேலிய, இங்கிலாந்து டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நடக்குதல்லோ! அதற்கு நடுவர்களில் ஒருவர் நம்மாள்தான். பெயர்: பிரான்சிஸ். எங்களுக்குள்ளேயும் சர்வதேச அளவில் மத்தியஸ்தர்கள் இருக்கினம் என்பது பெருமைதானே!

***இந்த ஆண்டு*** இறுதியில் அருமையான தமாஷ் பண்ணுயிருக்கினம். ரெண்டு எழுத்தார் தடுத்தாலும் வன்னிக்கு உணவு அனுப்பப்படுமாம். அடுத்த தமாஷ் யாதெனில்: ரெண்டு எழுத்தார் மரங்களை வெட்டுகினமாம். காடு அழிக்கினமாம். அதிகாரத்தரப்பில் ஒருவர் கவலை தெரிவித்திருக்கிறார். சிரிக்காமல் தமாஷ் பண்ணுவதில் கில்லாடிகள்தான்.

***குமாரரை ஒரு மணி நேரமாக*** பேட்டி கண்டவை. அந்த ஒரு மணி நேர பேட்டியிலும் தமிழ் மக்களின் துன்ப துயரம் பற்றி ஒரு கேள்விகூட கேட்கவில்லை. எல்லாக் கேள்வியும் ரெண்டு எழுத்தார் பற்றித்தான். பல கேள்விகள் இனவாத சாயலில் விழுந்தன. பேட்டியை கண்ணுற்ற தமிழ் ஆட்கள் என்ன சொல்லுகினம் தெரியுமோ? "நாங்கள் சொல்ல நினைக்கும் பல விஷயங்களை அவர் சொல்லியிருக்கிறார்!"

***வவுனியாவில் சீருடைத்*** தரப்பாரும் அதிகாரத்தரப்பாரும் 'பைலா' பாட்டுகளுக்கு ஆடின காட்சியை தொலைக்காட்சியில் காண முடிந்தது. பெண் சீருடையினரும் விட்டுக் கொடுக்காமல் ஆடினவை. பிரேமதாசா 'பைலா' நடத்தித் திரிகிறார் என்று நீல அணியினர் முன்னர் திட்டித் தீர்த்ததும் நினைவுக்குள் மின்னலடித்தது.

***தீர்வுப் பொதியை*** எதிர்ப்பவர்கள் தமிழ் இனவாதிகளாம். அதிகாரத்தரப்பார் கூறிவிட்டார். அதுவும் வெகுஜன சபையில் வைத்து கூறிவிட்டார். டமில் கட்சிகள் தாங்கள் பொதியை ஏற்கவில்லை என்றுதானே மாற்றுத் திட்டம் கொடுத்தவை? அப்ப தமிழ் இனவாதிகள் என்பதை ஏற்றுக் கொள்ளுகினமோ? நாங்கள் உண்மையாக எதிர்க்கவில்லை என்று அவருக்குத் தெரியும்தானே? அதனால் எங்களை கூறியிருக்க மாட்டார் என்று நினைக்கினமோ? ஏனென்றால் ஒரு டமில் கட்சிகூட காதில் விழுந்த மாதிரி காட்டிக்கொள்ளவில்லை.

***இந்தவாரப் பொன்மொழி***

**"கேவலமான மனிதனாக இருப்பதைக் காட்டிலும் ஒரு நல்ல குரங்காயிருக்கலாம்!"**



படிப்பகம்

www.padippakam.com

209

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

இந்திய மத்திய அரசை திருப்தி செய்வதற்கு தமிழ் நாட்டில் புலி வேட்டை நடத்துவதாக காண்பித்தார் கலைஞர் கருணாநிதி.

புலிகளைவிட ஏனைய இயக்கத்தினரே கைதானது அதிகம். அதேசமயம் காயமடைந்து மருத்துவ சிகிச்சைக்காக தமிழகம் சென்றிருந்த புலிகள் சிலரும் கைது செய்யப்பட்டனர்.



எப்படியாவது கலைஞர் அரசை கலைக்க வேண்டும் என்று ஜெயலலிதா பிடிவாதம் காட்டி வந்தார். ஆகவே, கலைஞர் எடுத்த நடவடிக்கைகள் மத்திய அரசை திருப்தி செய்யவில்லை.

1991 ஜனவரியில் தி.மு.க. அரசு கலைக்கப்பட்டது. ஜெயலலிதாவின் பிடிவாதம் ரஜீவ் காந்தி ஊடாக வென்றது.

தி.மு.க. அரசை கலைக்க ஒரு காரணம் தேவைப்பட்டது. புலிகள் மீது பழியைப் போட்டுவிட்டு கலைத்து முடித்தனர்.

'எலியாக வாழ்வதைக் காட்டிலும் புலியாக வாழ்வதே மேல்' என்று தமது ஆட்சி கலைக்கப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்னர் கூறியிருந்தார் கலைஞர்.

எனினும் ஆட்சி கலைக்கப்பட்டது அவருக்கே அதிர்ச்சிதான்.

கலைஞர் ஆட்சி கலைக்கப்பட்டதை நியாயப்படுத்தும் விதமாக தமிழ் நாட்டில் இலங்கைத் தமிழர்கள் பலர் கைது செய்யப்பட்டனர். அனைவரும் புலிச் சந்தேக நபர்கள் என்று கூறப்பட்டனர்.

ஆளுநர் ஆட்சியில் சட்டம், ஒழுங்கை காப்பாற்ற துரித நடவடிக்கை எடுக்கப்படுவதுபோல காண்பிக்க, புலி வேட்டை முடுக்கிவிடப்பட்டது.

தி.மு.க. அரசை புலிகளைக் காரணம் காட்டி கலைப்பதற்கு ராஜீவ்காந்தியே முன்னின்றார் என்பதை புலிகள் அறிந்தனர்.

இலங்கை, இந்திய ஒப்பந்தம், இந்தியப் படைக்கால நடவடிக்கைகள் போன்றவற்றால் ராஜீவ் காந்திமீது புலிகள் அதிருப்தி கொண்டிருந்தனர்.

தமது பெயரைக் கூறி தி.மு.க அரசை கலைக்க ராஜீவ் துண்டுகோலாக இருந்தமை புலிகளுக்கு அவர்மீது மேலும் கசப்பை ஏற்படுத்தியது.

ஆளுநர் ஆட்சியில் புலிகளை தமிழ் நாட்டில் கட்டுப்படுத்தி விட்டதாக கூறப்பட்டது. ஆனால் புலிகள் அங்கு சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருந்தனர்.

இந்திய மத்திய அரசின் புலனாய்வு நிறுவனங்களுக்கும், தமிழக அரசின் புலனாய்வு நிறுவனங்களுக்கும் புலிகளது தங்குமிடங்கள், நடமாட்டங்கள் பற்றிய முழு விபரங்களும் தெரிந்திருக்கவில்லை.

## அரசு கூறிய செய்தியும் நேரில் கண்ட உண்மைகளும்

அதனால்தான் ஆளுநர் ஆட்சியிலும் புலிகளின் செயற்பாடுகள் தமிழ்நாட்டில் முடங்கிப்போகவில்லை.

### குண்டு வீச்சுக்கள்

யாழ் குடாநாட்டை கைப்பற்ற பல்வேறு முயற்சிகள் செய்தும் பயனற்று போனதால், விமானக் குண்டுவீச்சுக்களில் ஈடுபட்டனர் படையினர்.

யாழ் குடாவின் வான் பரப்பில் விமானங்கள் சீறிப்பறந்தன. குண்டுகள் பொழியப்பட்டன.

'புலிகளின் முகாம்கள் அழிக்கப்பட்டன. பெருந்தொகையான புலிகள் கொல்லப்பட்டனர்' என்று அரசும், அதன் பிரசார சாதனங்களும் கூறின.

வல்வெட்டித்துறையில் விமானப் படையினர் நடத்திய குண்டு வீச்சில் பெருமளவான பொதுமக்களின் உடமைகள் நாசமாகின.

பதுங்கு குழிகளுக்குள் மக்கள் சென்றதால் பெருமளவான உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டன.

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தின வல்வெட்டித்துறை தாக்குதல் தொடர்பாக கூறும்போது; "வல்வெட்டித்துறையில் நடத்திய தாக்குதல்களால் புலிகளை அங்கிருந்து வெளியேற்றி விட்டோம்" என்று கூறினார்.

### விமானத்தாக்குதல்

இக் காலகட்டத்தில் சுவீடன் நாட்டுப் பேராசிரியர் பீட்டர் ஸ்சோக் (PETER SCHALK) யாழ் குடாநாட்டில் தங்கியிருந்தார்.

அவர் சுவீடன் திரும்பியபின்னர் சிறந்த அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

அந்த அறிக்கையில் அரசு கூறிய தகவல்களுக்கும், உண்மைக்கும் இடைமிலான தூரத்தை கண்டு கொள்ளலாம்.

அறிக்கையின் ஒரு பகுதி இது: "ஜனவரி 22 தொடக்கம் பெப்ரவரி 1ம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தபோது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அப்பகுதிக்கு ஆற்றி வரும் அரிய தொண்டுகளை நேரில் பார்க்கும் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது.

செஞ்சிலுவைச் சங்கத்திற்கு கூடுதலான ஆதரவுகளை சிறீலங்கா அரசு கொடுக்க வேண்டும். இப் பகுதியில் உள்ள நிலைமையை இராணுவம் தமது அரசாங்கத்திற்கு தெரியப்படுத்துவதில்லை என்பது தெட்டத் தெளிவாகிறது.

பீப்பாக் குண்டுகள் உட்பட சகலவிதமான குண்டுத் தாக்குதல்களையும் அரசு உடனடியாக நிறுத்த வேண்டும். அதேபோல இப்பகுதியில் ஹெலியில் இருந்து பொது மக்களை சுடுவதையும் நிறுத்த வேண்டும்.

வல்வெட்டித்துறையில் 1991 ஜனவரி 20 முதல் 22ம் திகதிவரை ஏற்படுத்தப்பட்ட சேதத்தையும், அழிவுகளையும் நேரில் சென்று பார்க்கும் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது.

இதில் ஆச்சரியப்படத்தக்க விடயம் என்னவென்றால், யாழ் நகரிலும் சரி, மற்றும் சகல இடங்களிலும் சரி, புலிகளின் முகாம் ஒன்றுகூட சேதமாகவில்லை. அவை அப்படியே இருந்தன.

வல்வெட்டித்துறையில் இருந்து புலிகளை வெளியேற்றிவிட்டோம் என்று ரஞ்சன் விஜயரத்ன கூறினார். 30.01.1991ல் வெளியான சிறீலங்கா நியூஸ் பத்திரிகையில் 7ம் பக்கத்தில் அச் செய்தி பிரசுரமாகியிருந்தது.



அந்த அறிக்கை எத்தனை பித்தலாட்டமான அறிக்கை என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது.

அவரால் கூறப்பட்ட அதே விடுதலைப் புலிகளின் முகாமை 28ம் திகதி நான் பார்வையிட்டேன்.

'பையன்கள்' அப்படியே இருந்தார்கள். ஒருவருக்கும் காயம் ஏற்படவில்லை. முகாமில் சிறு சேதம்கூட ஏற்படவில்லை.

### பீதியை உண்டாக்க

வல்வெட்டித்துறையை அழிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் சிறீலங்கா அரசு செயற்பட்டது.

ஜனவரி 20ம் திகதி 12.30 மணியளவில் ஹெலியில் இருந்து துண்டுப்பிரசுரங்கள் போடப்பட்டன. சகலரும் 48 மணிநேரத்தில் வல்வெட்டித்துறையை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

பிரசுரம் போடப்பட்ட மூன்றே கால் மணிநேரத்திற்குள் 3.45 மணியளவில் குண்டு போட ஆரம்பித்து விட்டனர்.

வல்வெட்டித்துறை பிரபாகரன் பிறந்த ஊர். அவர் பிறந்த வீடு இப்பொழுதும் அப்படியே இருக்கிறது.

இராணுவத்தின் கொள்கை என்ன? பொருளாதாரத் தடை விதித்து, குண்டு வீச்சினால் பொதுமக்களுக்கு பீதியை ஏற்படுத்தி புலிகளுக்குள்ள ஆதரவை இல்லாமல் செய்வதே.

ஆனால் உண்மையான நிலை இவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு எதிர்மாறாக இருப்பதை நான் காணக்கூடியதாக இருக்கிறது.

பல்கலைக்கழக ஆசிரியர்கள், பாடசாலை ஆசிரியர்கள், வாசக சாலைப் பொறுப்பாளர்கள், வீட்டுத் தலைவிகள் போன்ற வயது முதிர்ந்த பலருடன் நான் பேசினேன். அவர்கள் பலர் ஆயுதப் போராட்டத்தை ஆதரிப்பதை அறியக்கூடியதாக இருந்தது.

"எங்களுடைய பெண் பிள்ளைகள் புலிகளுடன் சேர்ந்து போராடுவதை வரவேற்கிறோம்!" என்று பலர் கூறினர்.

அந்த மனிதர்களுடன் பேசும்போது சிறீலங்கா இரண்டாக பிரிந்து விட்டதுபோன்ற உணர்வு ஏற்பட்டது" என்று பேராசிரியர் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

### இந்து விபரிப்பு

யாழ் குடாநாட்டில் குறிப்பாக வல்வெட்டித்துறையில் ஜனவரி 20 முதல் நடைபெற்ற விமானத்தாக்குதல்கள் தொடர்பாக பெப்ரவரி 16, 1991ல் இந்திய ஆங்கில பத்திரிகையான இந்து விபரம் வெளியிட்டிருந்தது.

'இந்து'வின் இலங்கை நிருபராக அப்போதிருந்த தோமஸ் ஏபிரஹாம் விபரங்களை திரட்டி அனுப்பி இருந்தார்.

இதோ அந்த விபரங்கள்:

ஸ்ரீலங்கா விமானப்படை நான்கு நாட்களாக கண்மூடித்தனமாக, ஈவிரக்கமில்லாமல் சாதாரண பொதுமக்களுக்கெதிராக குண்டு வீச்சுக்களை நடாத்தியுள்ளது. ஆட்டிலறி (Artillery) தாக்குதல்களும் குறைந்த பட்சம் ஒரு பீப்பாக்குண்டும் போடப்பட்ட தடயங்களை பார்க்கக் கூடியதாகவிருந்தது.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் பிறந்த ஊரான வல்வெட்டித்துறையின் பெரும்பகுதி முற்றாக அழிக்கப்பட்ட பொழுதும் அந்த ஊரிலிருந்து விடுதலைப்புலிகளின் முகாம் ஒரு சிறிய சேதமுமில்லாமல் காணப்பட்டது.

ஜனவரி 20 முதல் 23ம் திகதிவரை நடைபெற்ற இந்தக் தாக்குதல்களின் கொடூரமும் இதனால் ஏற்பட்ட அழிவுகளின் விபரங்களும் வெளி உலகத்திற்கு இதுவரை தெரியாமலே இருந்துவிட்டது.

"ஸ்ரீலங்கா இராணுவத்தின் வடமராட்சித் தாக்குதலையும், இந்தியப்படை இவ்வூரில் நடத்திய தாக்குதலையும் விட இம்முறை நடந்த தாக்குதல்கள் மிகவும் கொடூரமானவை. எமது வரலாற்றிலேயே இப்படியொரு அழிவு நடந்ததில்லை" என வல்வை புனரமைப்புச் சபையின் தலைவர் சண்முகசுந்தரம் கூறினார்.

"விடுதலைப்புலிகள் பாவிக்கும் கடலோரங்களில் உள்ள இறங்கு துறைகளையே தாக்கினோம்" என ஸ்ரீலங்கா அரசாங்கம் கூறிய பொழுதும் பொது மக்களையே விமானப்படை வேண்டுமென்றே குறிபார்த்துத் தாக்கியிருப்பது தெட்டத் தெளிவாகத் தெரிந்தது.

100 வருடங்களுக்கு முன் நிர்மாணிக்கப்பட்ட புராதன கோவில்களான சிவன் கோவிலும் முத்துமாரி அம்மன் கோவிலும் சுற்று மதில்களைத் தவிர ஏனைய கட்டடங்களெல்லாம் முற்றாக அழிந்து காணப்பட்டது. வேறு நான்கு கோவில்கள் சேதமுற்றிருந்தன அவ்வூர் தேவாலயமும் குண்டு வீழ்ந்து கூரையே இல்லாத நிலையில் காணப்பட்டது.

## வடக்கில் தொடர்ந்து விமானக் குண்டு வீச்சுகள்!

சிவகுரு வித்தியாசாலையில் ஒரு பீப்பாக் குண்டு வெடித்துச் சிதறிக் கிடந்ததைக் கண்டேன். இந்த விசித்திரக் குண்டுகள் ரப்பர். ரசாயனப் பொருட்கள் பெற்றோல் போன்றவைகளால் நிரப்பப் பட்டவை. விமானங்களிலிருந்து தள்ளப்பட்டு கீழே நிலத்தில் விழுந்தவுடன் வெடிக்கக் கூடியவை.

உருகிய நிலையிலுள்ள ரப்பர் துண்டுகள் வெடித்துப் பறந்து, பட்ட இடங்களில் ஒட்டியபடியே எரியக் கூடியவை.

அதிஷ்டவசமாக இக்குண்டு விழுந்த பொழுது மாணவர் ஒருவரும் அங்கே இருக்கவில்லை. கதிரை மேசைகளெல்லாம் சாம்பலாகவும், உடைந்து சுவர்களெல்லாம் கரியாகவும் இருந்தது.

கோவில்கள் பாடசாலைகள் முதலியவற்றில் நடைபெற்ற தாக்குதல்களை நினைத்தால் பயங்கரமாக இருக்கிறது ஏனென்றால், குண்டு வீச்சுகள் நடைபெறும் நேரங்களில் பொது மக்கள் இப்படியான இடங்களில் தான் தஞ்சம் புகுவது வழக்கம்.

"நாங்கள் அதிஷ்டசாலிகள். இம்முறை மக்கள் கோவில்கள் பாடசாலைகள் என ஓடாமல் பதுங்கு குழிகளை பாவித்தார்கள்" என சண்முகசுந்தரம் மேலும் கூறினார்.

கொடூரமான இந்த நான்கு நாள் தாக்குதலில் பத்துப் பேர் மட்டுமே இறந்தமை இப்பகுதி மக்கள் தங்களை பாதுகாக்கப் பழகிவிட்டார்கள் என்பதையே காட்டுகிறது குடாநாட்டில் அநேகமாக சகல வீடுகளிலும் குழிகளை அமைத்துள்ளனர். வசதி இல்லாதோருக்கு பொது இடங்களில் பதுங்கு குழிகள் அமைக்கப்பட்டுள்ளன.

வல்வெட்டித்துறைத் தாக்குதலுக்கு முன் அந்த ஊர் பொதுமக்களை வெளியேறும்படி 48 மணித்தியால அவகாசம் கொடுத்து துண்டுப்பிரசுரங்கள் ஹெலியில் இருந்து போடப்பட்டதாக ஸ்ரீலங்கா அரசு கூறுகிறது.

ஆனால் அவ்வூர் மக்கள் "ஜனவரி 20ம் திகதி 12 மணியளவில் வல்வெட்டித்துறையில் உள்ள மக்கள் எல்லாம் 48 மணித்தியாலத்திற்குள் வெளியேறிவிட வேண்டுமென ஹெலியில் இருந்து துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டன. ஆனால் மூன்று மணித்தியாலங்கள்கூட செல்லவில்லை. மாலை 3.30 மணியளவில் விமானங்கள் தாக்கத் தொடங்கி விட்டன" எனக் கூறினர்.

இத்தாக்குதல் மாலை 5.30 மணிவரை நடைபெற்றது. அடுத்த நாள் காலை 6 மணியிலிருந்து மாலை 4.30 மணிவரை இதே தாக்குதல் நடைபெற்றது. இதே போல் அதற்கடுத்த நாளும் நடைபெற்றது.

101 வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டன. 451 வீடுகள் சேதமுற்றது. 6 கோவில்கள், 1 தேவாலயம் 4 பாடசாலைகள் குண்டுத் தாக்குதல்களுக்கு உள்ளாகின. பொது மக்கள் 10 பேர் இறந்துள்ளனர். 20 பேர் படுகாய மடைந்துள்ளனர். சேதமுற்ற தனது வீட்டைக் காண்பித்த டாக்டர் சுந்தரம் மூன்றாவது முறையாக தனக்கு இப்படி நடந்துள்ளதெனக் கூறினார்.

"சாதாரணப் பொதுமக்களைத் தாக்குவதையே ஸ்ரீலங்கா இராணுவம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. கடந்த சில வாரங்களாக சந்தை கூடும் இடங்கள், கோவில்கள், பாடசாலைகள், அகதி முகாம்கள் போன்ற இடங்களையே தாக்கிவருகிறார்கள்" என யாழ் வாசி ஒருவர் கூறினார்.

"விடுதலைப்புலி போராளிகள் எவரும் இறந்ததாகவோ காயப்பட்டதாகவோ தெரியவில்லை. ஸ்ரீலங்கா அரசாங்கத்திடமிருந்து நியாயம் பெறமுடியாதென்று மக்கள் நினைப்பது சரியானதென்பதையே இந் நிகழ்ச்சிகள் காட்டுகின்றன"

இவ்வாறு தமது நிருபர் தோமஸ் ஏபிரஹாம் தெரிவித்த விபரங்களை இந்து வெளியிட்டிருந்தது.

### புலிகள் அறிக்கை

புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த யாழ் குடாநாட்டில் விமானப் படையினர் தொடர்ச்சியாக நடத்திய தாக்குதல்கள் தொடர்பாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

"விடுதலைப் போராட்டம் வளர்ச்சியடைந்து வரும் வேளையில், எதிரி தொடுத்துள்ள உளவியல் ரீதியான போர் உபாயம் தான் இன்று நடந்து கொண்டிருக்கும் விமானக் குண்டுவீச்சு.

எமது மக்களை அவர்களது சொந்த இடங்களில் இருந்து விரட்டி அவர்களை அநாதரவான நிலைக்கு தள்ளுவதே அரசின் திட்டம்.

தமக்கு தேவையான யாழ் கோட்டை இராணுவ முகாமையோ, மாங்குளம் இராணுவ முகாமையோ தொடர்ந்து தக்கவைக்க முடியவில்லை. இந்நிலையில் வல்வெட்டித்துறையில் புதிய முகாமை அமைக்க படைகள் நினைக்கின்றன.

விமானக் குண்டு வீச்சு என்னும் உளவியல் போருக்கு அஞ்சாமல், நாம் தற்காப்பு நடவடிக்கைகளில் இறங்க வேண்டும்.

ஒவ்வொரு பொதுமகனும் பதுங்கு குழியை நிறுவவேண்டும்!" என்று புலிகளின் மக்கள் முன்னணி அறிக்கை வெளியிட்டிருந்தது.

### வன்னியில் தாக்குதல்

அரசின் விமானப் படையினர் யாழ் குடாநாட்டில் மட்டுமன்றி வன்னியிலும் 1991 ஜனவரியில் குண்டுத் தாக்குதல்களை நடத்தினார்கள்.

01.02.1991ல் அதிகாலை 3.45 மணியளவில் புதுக்குடியிருப்பில் குண்டு வீசப்பட்டது. 300 கிலோ கிராம் எடையுள்ள அக் குண்டுக்கு 16 குடிமக்கள் பலியானார்கள்.

பாடசாலை ஒன்றில் அகதிகளாக தஞ்சமடைந்திருந்த திருக்கோணமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களே பலியாகினர்.

பாடசாலைமீது குண்டுவீச்சு நடத்திவிட்டு, புலி முகாம் நிர்மூலம் என்று செய்தி கூறப்பட்டது.

மன்னார் ஆண்டாள் குளத்தில் 28.01.91ல் நடைபெற்ற குண்டுவீச்சில் வே.மகேஸ்வரன் (30) என்னும் இளைஞரது உடல் சிதறியது. அங்கிருந்த றோமன் கத்தோலிக்க பாடசாலையின் மூன்று கட்டடங்களும், கூட்டுறவுத் திணைக்கள செயலகமும் சேதமடைந்தன.

இத்தாக்குதல்களிலும் புலிகளுக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# வேலுப்பிள்ளை செல்வநாயகமும் பிரபாகரனும்

**அலசுவது– இராஜதந்திரி**

விடுதலைப் புலிகளின் மாவீரர் தினமும் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்தநாளும் நாடு முழுக்க அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

இலங்கைத்தீவில் வேறெந்த தினமும், வேறெந்த தலைவரது பிறந்த நாளும் நாடு முழுவதும் தாக்கத்தினை ஏற்படுத்தியதில்லை.

மாவீரர் தினம், பிரபாகரன் பிறந்ததினம் இரண்டுக்கும் முன்பும், பின்புமாக கிட்டத்தட்ட ஒருமாத காலமாக நாடு பூராவும் முப்படைகளும், பொலிசாரும் விழிப்பாகவும், விறைப்பாகவுமே இருக்க வேண்டியவர்களாயினர்.

விடுதலைப் புலிகள் தமது மாவீரர் தினம் தொடர்பாகவோ, தலைவர் பிரபாகரனின் பிறந்தநாள் தொடர்பாகவோ எவ்வித அறிவித்தலையும் வெளியிடும் அவசியமே இருப்பதில்லை. அரசாங்கமும், படைத்தரப்பும் முன்கூட்டியே உஷாராவதுடன் அவை பற்றிய முன்னறிவித்தல்களையும் நாடெங்கும் வெளியிட்டுவிடுகின்றன.

இவை விடுதலைப் புலிகளுக்கு அரசாங்கம் தமது செலவில் செய்து வரும் பிரசாரம் போன்றே அமைந்து வருகின்றன.

இம்முறை படைத்தரப்பினர் மாவீரர் தினத்தை முன்னிட்டு விசேஷ அறிவித்தல் ஒன்றை விடுத்திருந்தனர்.

விடுதலைப் புலிகளின் முகாம்களுக்கு அருகே மக்கள் குடியிருக்க வேண்டாம் என்று கூறப்பட்டதோடு, படையினரது முகாம்களுக்கு அருகே உள்ள மக்களும் விழிப்பாக இருக்கவேண்டும் என்றும் படையினரது அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டிருந்தது. கிளிநொச்சியில் வாழும் மக்களுக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

யாழ் குடாநாட்டை கைப்பற்றியதால், புலிகளை காடுகளுக்குள் விரட்டியடித்துவிட்டதாக ஆட்சியாளர்கள் கூறிவந்தனர்.

அக் கூற்றை படைத்தரப்பின் அறிக்கை பொய்யாக்கியுள்ளது. அதேவேளை படைத்தரப்பு விடுத்துள்ள அறிக்கையானது அப்பாவி குடிமக்களை அச்சுறுத்தும், விதமாகவும் அமைந்திருந்தது.

கிளிநொச்சியை படையினர் கைப்பற்றியபோது ஒரே ஒரு நாய் மட்டுமே அங்கு காணப்பட்டது. பின்னர் அதுவும் காணாமல் போயிருந்தது.

கிட்டத்தட்ட இரண்டு வருடங்களாக கிளிநொச்சி நகரில் படையினர் நிலைகொண்டிருந்தும் அங்கு மக்கள் எவரும் திரும்பச் செல்லவில்லை. தமது வீடுகளை பார்வையிட சென்றவர்களும் காணாமல் போயிருந்தனர்.

தற்போது கிளிநொச்சியை புலிகள் கைப்பற்றிய பின்னர் அங்கிருந்து முன்னர் இடம்பெயர்ந்த மக்கள் பலர் திரும்பச் சென்று குடியேறியுள்ளனர்.

தாமிருக்கும்போது வெறிச்சோடிக் கிடந்த நகரில் மீண்டும் குடியேறிய மக்களை அச்சுறுத்துவதாகவும் படைத்தரப்பின் அறிக்கை அமைந்திருந்தது.

தரைப்போருக்கான சர்வ வல்லமை படைத்த படைக்கலங்களை கொண்டிருக்கும்போதும் அரச துருப்புக்களால் தரைச்சண்டை மூலம் கிளிநொச்சியை கைப்பற்ற இயலவில்லை.

பிறிதொரு நாட்டின் வான் பரப்பில் பறந்து குண்டுகளை நகரங்கள்மீது வீசுவது போன்றே தமது பலத்தை காண்பிக்க முயலுகின்றனர் என்பதையும் அந்த அறிவித்தல் புலப்படுத்தியுள்ளது.

இருநாடுகள், இருபடைகள் என்ற அணுகுமுறையைத்தான் நடைமுறை நிகழ்வுகள் வெளிப்படுத்தி வருகின்றன.

விடுதலைப் புலிகளின் பலம் குறித்து ஆட்சியாளர்களுக்கும், படைத்தரப்புக்கும் இருக்கக்கூடிய கணிப்புக்களையும் மாவீரர் தினம் போன்ற காலகட்டங்களில் நன்கு அவதானிக்க முடிகிறது.

நாட்டின் எந்தப் பகுதியிலும் எந்த ரூபத்திலும் புலிகள் ஊடுருவக்கூடியவர்கள் என்பதை ஏற்று, அதற்கேற்பவே பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

புலிகளின் பிரதான தினங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வதற்காகவே பல கோடி ரூபாய்கள் செலவிடப்படுகின்றன. தாக்குதல்கள், தகர்ப்புக்கள் எதுவும் மேற்கொள்ளாமலேயே இவ்வாறு பாரிய நஷ்டத்தை புலிகள் ஆட்சியாளர்களுக்கு ஏற்படுத்தி விடுகின்றனர்.

இலங்கைத்தீவின் தலைவிதியை கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக தீர்மானிப்பது விடுதலைப் புலிகளும், அவர்களது தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுமே என்பதை சிங்கள விமர்சகர்களும் கூறிவருகின்றனர்.

இராணுவரீதியில் மட்டுமன்றி புலிகளின் தீர்மானிக்கும் பலம் அரசியல், பொருளாதார ரீதியாகவும் நாட்டை உலுக்கத் தொடங்கியுள்ளது.


செல்வா


பிரபா

ஜனாதிபதி சந்திரிக்காவுடன் நடத்திய பேச்சுவார்த்தை முறிந்த பின் மூன்றாம் கட்ட ஈழப்போரை பிரபாகரன் ஆரம்பித்திருந்தார்.

ஜனாதிபதி சந்திரிக்கா சமாதானத்தை விரும்பும் ஒருவராகவும், நீதியான தீர்வொன்றை காண்பதில் அக்கறை உடையவராகவுமே பெரும்பாலானோர் கருதி வந்தனர்.

தமிழ் பேசும் மக்களில் பெரும்பாலானோரும் அவ்வாறு கருதியே ஜனாதிபதித் தேர்தலில் கணிசமான வாக்குகளை அளித்திருந்தனர்.

ஆனால், ஜனாதிபதி சந்திரிக்காவுடன் பேச்சு நடத்தியபோதும் பிரபாகரன் முழு நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. சிங்கள அரசியல் தலைவர்கள் எவரும் தாமாக முன்வந்து நியாயமான தீர்வை தரப்போவதில்லை என்றே நம்பியிருந்தார்.

வெளிப்பேச்சுக்களிலும், ஆரவாரங்களிலும் மயங்கிய முன்னாள் தமிழ்த் தலைவர்கள் இறுதியில் ஏமாற்றப்பட்டனர். அரசியல் விவேகிகள் என்று தம்மைத்தாமே தம்பட்டம் அடித்துக்கொண்ட தமிழ்த் தலைவர்கள் பலரை சிங்கள அரசியல்வாதிகள் தமது இனிப்பான பேச்சுக்களால் சுலபமாக ஏமாற்றியிருந்தனர்.

இலங்கை சுதந்திரமடைந்த கடந்த ஐம்பதாண்டுகளில் எந்தவொரு சிங்கள அரசியல் தலைவரும் தமிழ்த் தேசிய இனத்திற்கு தாம் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றியதாக ஒரு உதாரணம்கூட கிடையாது.

கட்டடங்கள், பாலங்கள், அபிவிருத்திகள் என்று சில சலுகைகளை வழங்க முன்வந்தனரே தவிர, அடிப்படை உரிமைகளை வழங்க எவரும் முன்வந்திருக்கவில்லை.

இத்தகைய கசப்பான அனுபவங்கள் வெறுமனே நினைவுகூறுவதற்கானவையல்ல. பாடம் படிப்பதற்கானவையே. அனுபவமே சிறந்த ஆசானாகும்.

ஜனாதிபதி சந்திரிக்கா பதவிக்கு வந்தபோது அவர் கூறிய கருத்துக்களும், பறக்கவிட்ட புறாக்களும் தமிழ் பேசும்மக்கள் அனைவரையும் நம்பிக்கைமுனைக்கு இட்டுச்சென்றன.

தற்போது, அதே ஜனாதிபதி சந்திரிக்கா அவர்கள், 'இலங்கைத் தமிழர்கள் இந்த நாட்டுக்குச் சொந்தமானவர்களல்ல' என்ற கருத்தை கூறியுள்ளார். இது வெறுமனே கூறப்பட்ட கூற்றல்ல. தனிநாட்டு கோரிக்கை நியாயமற்றது என்பதற்கான ஆதாரமாக கூறப்பட்ட கூற்றே அதுவாகும்.

இவ்விவகாரம் குறித்து தமிழ் பேசும் மக்கள் கொண்டுள்ள அதிருப்தி தொடர்பாக கவலைப்படாதவராக, வருத்தம் எதனையும் தெரிவிக்காமலும் இருந்து வருகிறார்.

தனது ஆட்சிக் காலத்தில் வடக்கில் காணாமல் போனோர் விவகாரத்தில் ஜனாதிபதி காண்பித்துவரும் அலட்சியப் போக்கும் அவர்மீதான நம்பிக்கைகள் அனைத்தையும் தகர்த்தெறிந்துள்ளன.

ஜனாதிபதி சந்திரிக்கா அவர்களால் தீர்வுப்பொதி முன்வைக்கப்பட்டபோது, அதன் பின்னாலிருந்த அரசியல், இராணுவ உத்திகளை ஆராயாமல் தமிழ்க் கட்சிகள் முதற்கொண்டு தமிழ் விமர்சகர்கள் பலரும் வரவேற்றிருந்தனர்.

வரவேற்ற அனைவரும் தற்போது பொதியை குறைகூறியே வருகின்றனர். தமிழ் பேசும் மக்களின் அடிப்படையான அபிலாசைகளை நிறைவு செய்யாத பொதி என்பதும் வெளிப்படையாகியுள்ளது.

வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் மக்களது பாரம்பரிய தாயகப் பிரதேசம் என்பதை மறுதலித்து, அதனை பல கூறுகளாக பிரிக்கும் திட்டமே பொதிக்குள் அடங்கியுள்ளது.

அரசின் தீர்வுப்பொதியை புலிகள் உடனடியாக நிராகரித்திருந்தனர். அதனை 'செத்த பொதி' என்றும் பிரபாகரன் கூறியிருந்தார்.

பிரபாகரன் அன்று கூறியதையே சமீபத்தில் அமைச்சர் அஷ்ரப்பும் கூறியிருக்கிறார்.

'அரசின் தீர்வுப் பொதி செல்லாக் காசு' என்று அழுத்தம் திருத்தமாக அவர் கூறியிருக்கிறார்.

தமிழ்க் கட்சிகளுக்கும் அதே கருத்து. இருந்தாலும்கூட, தாம் அரசை சார்ந்து நிற்பதை நியாயப்படுத்த முடியாமல் போகும் என்பதால் மௌனமாக இருந்து வருகின்றன.

ஆனால், கூட்டணி உட்பட சில தமிழ்க் கட்சிகள் தீர்வு யோசனைகளை புலிகளுக்கு அனுப்பி வைக்குமாறு முன்னர் கோரியிருந்தன.

அரை குறைத்தீர்வை தாம் பரிசீலித்து மேலும் மேலும் இறங்கிச் செல்வது போதாது என்று, புலிகளையும் இழுத்துவிட இக்கட்சிகள் முனைந்தன.

ஆனால், இக் கட்சிகள் தீர்வு பொதிக்கு முன்வைத்த யோசனைகளை ஆட்சியாளர்கள் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. குப்பைக் கூடையிலேயே போடப்பட்டன.

இவ்வாறான நிராகரிப்பானது 'புலிகள் பேச்சை முறித்திருக்காதுவிட்டால் இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணப்பட்டிருக்கும்' என்ற ஆட்சியாளரின் பிரசாரத்தை உருத்தெறியாமல் செய்துவிட்டது.

அடிப்படை பிரச்சனைகளில் மட்டுமன்றி, அன்றாடப் பிரச்சனைகளான கைதுகள், சிறைமரணங்கள், போக்குவரத்து வசதியீனங்கள், நிவாரணங்கள் போன்றவற்றில்கூட இன்றைய ஆட்சியாளர் இராணுவ நலனுக்கே முன்னுரிமை கொடுத்து வருகின்றனர்.

தம்மீது தமிழ் பேசும் மக்கள் வைத்த நம்பிக்கை தவறானது என்பதை உறுதிப்படுத்துவதுபோன்றே ஆட்சியாளரின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

எனவே, தமிழ் பேசும் மக்கள் தாமதமாக புரிந்துகொண்டதையே, வேலுப்பிள்ளை பிரபாகரன் முன்கூட்டியே கணிப்பிட்டு கூறியிருந்தார் என்று புலிகள் கூறுவதை மறுக்கவியலாமல் உள்ளது.

கடந்தகால கசப்பான அனுபவங்களை மறக்காமல் இருப்பதும், வளைந்து கொடுத்தால் பேரினவாதம் தமிழ் பேசும் மக்களது முதுகில் சவாரி செய்யவே முனையும் என்பதை உணர்ந்திருப்பதுமே பிரபாகரனின் கணிப்புக்களை மெய்யாக்கி வருகிறது.

மக்களின் எண்ணங்கள் எல்லாம் எப்போதும் சரியாக இருக்கும் என்று கூறுவதற்கில்லை. மக்களின் தீர்ப்புக்கள் கூட பல சந்தர்ப்பங்களில் தவறாக அமைந்துவிடுவதுண்டு. அதன் காரணமாகவே தவறான சக்திகள் தேர்தல்களில் வெற்றிபெறுவதையும் கண்டுள்ளோம்.

மக்களின் தவறான மனப்போக்குகளுக்கு பின்னால் வால்பிடித்து செல்பவர்கள் தலைவர்களாக முடியாது. மக்களால் முன்னால் சென்று வழிகாட்ட முடியுமானால் தலைமைகளுக்கோ கட்சிகளுக்கோ தேவையிருக்காது.

மக்களின் முன்னால் நின்று, அக் காலகட்டத்திற்குரிய பாதையை காட்டுவதே தலைமை எனப்படும். அத்தகைய தலைமைதான் மாற்றங்களை ஏற்படுத்த முடியும்.

தமிழீழக் கோரிக்கையை கூட்டணியும், அதன் தலைவர் சாமுவேல் வேலுப்பிள்ளை செல்வநாயகமும் முன்வைத்தபோது, மக்கள் அனைவரும் அக் கருத்தை கொண்டிருக்கவில்லை.

எனினும் காலத்துக்கேற்ற கொள்கையாக அது விளங்கியதால் மக்களால் ஏற்கப்பட்டது. எழுச்சியாக மாறியுமிருந்தது.

வேலுப்பிள்ளை செல்வநாயகம் அவர்கள் துணிந்து எடுத்த அரசியல் முடிவுகளே அவரை தமிழ்த் தேசிய இனத்தின் தானைத் தலைவராக முன்னிறுத்தியது.

வேலுப்பிள்ளை பிரபாகரனும் செல்வநாயகம் அவர்களது நிழலில் வளர்ந்தவரேயாவார்.

"செல்வநாயகம் அவர்கள் ஒரு கட்டத்தில்; தமிழர்களை இனிக்கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்" என்று கூறியிருந்தார்.

ஆனால், வேலுப்பிள்ளை பிரபாகரன் எக்கட்டத்திலும் அவ்வாறு தன்னம்பிக்கை குறைவான கருத்தை வெளிப்படுத்தவில்லை.

இந்தியப் படைகளை எதிர்த்துப் போரிட்டபோது பிரபாகரன் காட்டிய தன்னம்பிக்கையை இந்திய படை அதிகாரிகளே வியந்து பாராட்டியிருந்தனர்.

வேலுப்பிள்ளை பிரபாகரனும், விடுதலைப் புலிகளும் இனி மீளவே முடியாது என்று அவர்களது எதிரிகள் பலமுறை கணித்துக் கூறியிருந்தனர். அந்தக் கணிப்புக்கள் பின்னர் பொய்யாகியிருந்தன.

அதே சமயம் வேலுப்பிள்ளை பிரபாகரனின் கணிப்புக்கள் அரசியல் ரீதியிலும், இராணுவ ரீதியிலும் பலித்து வருகின்றன.

பிரபாகரனால் நிராகரிக்கப்பட்ட தென்னிலங்கை தலைவர்கள், தமிழ் மக்களுக்கு தக்க தீர்வை வழங்கி பிரபாகரனின் கணிப்பை பொய்யாக்க தவறிவிட்டனர். அந்தப் பட்டியலில் ஜனாதிபதி சந்திரிக்காவும் இடம் பிடித்திருக்கிறார்.

புலிகளையும், வேலுப்பிள்ளை பிரபாகரனையும் தோற்றுவித்தவர்கள் தென்னிலங்கை ஆட்சியாளர்களே. இப்போது புலிகளை தெற்காசியாவின் தலைச் சிறந்த அரசியல் இராணுவ அமைப்பாக புகழப்பட செய்திருப்பதும் ஆட்சியாளர்களே.

'ஜயசிக்குறுய்' தொடங்கப்பட்டதும், இதன் ஒன்றரை வருட நீடிப்பும், புலிகளின் முறியடிப்பு சமருமே இலங்கைத்தீவில் இரண்டு சமபலமான தரப்புக்கள் இருப்பதை உலகுக்கு காண்பித்துள்ளன. அதன் காரணமாகவே உலக நாடுகள் சில தாமாக முன்வந்து மத்தியஸ்தம் பற்றியும் பேசியுமுள்ளன.

பிரிட்டன் போன்ற நாடுகள் மத்தியஸ்தம் செய்ய முன்வந்தமை சாதாரண விடயமல்ல. பாலஸ்தீனப் பிரச்சனை போன்றவற்றுக்கு நிகராக இலங்கை இனப்பிரச்சனை உலக அரங்கில் உற்று நோக்கப்படுகிறது என்பதன் அடையாளமே இதுவாகும். இது ஒரு முன்னேற்றமான கட்டமேயாகும்.

எனவே ஒன்று மட்டும் உறுதி, இலங்கைத்தீவின் எதிர்காலம் பற்றிய எத்தகைய முடிவும் வேலுப்பிள்ளை பிரபாகரனையோ, விடுதலைப் புலிகளையோ ஒதுக்கிவிட்டு எடுக்கலாம் என்பது சாத்தியப்படாத ஒன்றேயாகும்.

வேலுப்பிள்ளை செல்வநாயகம் வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ் மக்களிடையே மட்டுமே செல்வாக்கு பெற்றிருந்தார். வேலுப்பிள்ளை பிரபாகரன் வடக்கு-கிழக்குக்கு வெளியே உள்ள தமிழர்கள் மத்தியிலும் செல்வாக்கு உள்ளவராக இருக்கிறார். அதன் காரணமாகவே மலையகம் உட்பட வடக்கு-கிழக்குக்கு வெளியே உள்ள தமிழர்களையும் ஆட்சியாளரால் நம்பமுடியாமல் உள்ளது.

மாவீரர் தினத்தை முன்னிட்டு மலையகத்திலும் இளைஞர் யுவதிகள் கைது செய்யப்பட்டிருந்தனர். புலிகளின் செல்வாக்கும், பரம்பலும் முன்பைவிட விரிவாகியுள்ளது என்பதை ஆட்சியாளரே ஒப்புக்கொள்வது போன்றே நிகழ்வுகள் அமைகின்றன.

---

## சந்திக்கு வராத சங்கதிகள்

**நக்கீரன்**

### சந்திக்க மறுத்த மண்டேலா

நெல்சன்மண்டேலாவை சந்திக்க முயன்றும்கூட முடியவில்லையாம். அதனால் வெளிநாட்டமைச்சர் கதிர்காமருக்கு லேசான வருத்தம்தானாம்.

மண்டேலாவையே நேரடியாகச் சந்தித்துவிட்டு வரத்தான் அவசரமாக போயிருந்தாராம். எத்தனையோ முயன்றும் 'நோ' சொல்லப்பட்டுவிட்டதாம்.

ராஜீவ் காந்தி கதையைக் கூறி தென்னாபிரிக்காவில் உள்ள இந்திய வம்சாவளி மக்களின் நெஞ்சைத் தொட எடுத்த முயற்சிகளும் பயன் தரவில்லை.

இந்திய வம்சாவளி மக்களிடம் இலங்கைத் தமிழர்களுக்கு பலத்த அனுதாபம் இருக்கிறது. யார் முயன்றாலும் அதனை தடுக்க முடியாது.

இன்னொரு சங்கதியும் இருக்கிறது. தென்னாபிரிக்காவில் உள்ள இந்திய வம்சாவளி மக்களின் வாக்குகள் தென்னாபிரிக்க காங்கிரசின் வெற்றி தோல்வியை தீர்மானிப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

தென்னாபிரிக்க தேசிய காங்கிரசுக்கு தேவையான நிதியுதவிகளையும் கடந்த காலத்தில் செய்தவர்கள் இந்திய வம்சாவளி மக்கள்தான்.

இலங்கை அரசு என்னதான் தலைகீழாக நின்றாலும் தென்னாபிரிக்காவில் புலிகளுக்கு உள்ள செல்வாக்கை தடுத்து நிறுத்த முடியாது.

இந்திய வம்சாவளி மக்கள் புலிகளுக்கு நிதியுதவி செய்வதை தென்னாபிரிக்க அரசு நினைத்தால்கூட தடுக்க முடியாது.

இலங்கை அரசின் நடவடிக்கைகள் தென்னாபிரிக்காவில் உள்ள இந்திய வம்சாவளி மக்களை மேலும் உசுப்பிவிட்டு புலிகளுக்கு ஆதரவைப் பெருக்கவே பயன்படப்போகின்றன.

***

தமிழர்கள் இந்த நாட்டுக்கு சொந்தமில்லாதவர்கள் என்று கூறியும்கூட இங்கு யாரும் கிளர்ந்தெழவில்லை.

மொரிசியஸ் நாட்டில் பண நோட்டில் தமிழ் மொழிக்கு மூன்றாம் இடம் என்றதும் அங்குள்ள தமிழர்கள் கொதித்துப் போனார்கள்.

இத்தனைக்கும் மொரிசியஸில் தமிழர்கள் பூர்வீகக் குடிகளல்ல. மொரிசியல் பண நோட்டில் முதலில் ஆங்கிலம், இரண்டாவதாக தமிழ், மூன்றாவதாக இந்தி இருக்கும்.

சமீபத்தில் வெளியான நோட்டில் இந்தி இரண்டாம் இடத்திலும் தமிழ் மூன்றாம் இடத்திலும் இடம் பெற்றுவிட்டது.

இத்தனைக்கும் இந்தி பேசும் மக்கள் தொகை 40 இலட்சம். தமிழர்கள் தொகை 12 இலட்சம்தான். இந்தி பேசும் மக்களைவிட தமிழர்கள் முதலில் சென்று குடியேறியதால் முன்னுரிமை ஏற்கப்பட்டிருக்கிறது.

அந்த முன்னுரிமை மறுக்கப்பட்டபோது என்னமாய் கொதித்தனர்! கொந்தளித்தனர்!! மொரிசியஸ் அரசு பணிந்தது. அத்தனை நோட்டுகளும் திரும்பப் பெறப்பட்டன.

நோட்டுக்கள் திரும்பப் பெறப்பட்டதால் அந்நாட்டு அரசுக்கு ஏற்பட்ட செலவு 20 இலட்சம் அமெரிக்க டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. நம் நாட்டு மதிப்பில் 13 கோடியே 40 இலட்சம் ரூபாய்கள்.

எங்கள் தமிழ்க் கட்சிகள் போல் அங்கு இருந்திருந்தால், "ஏதோ கைதவறி மூன்றாவதாக போட்டுவிட்டனர். இதற்கெல்லாம் போராட வேண்டுமா? அடுத்த முறை மாற்றுவதாக உத்தரவாதம் தந்துள்ளனர்" என்று கூறி முடித்திருப்பார்கள் அல்லவோ!

•••

ஜனாதிபதியுடனான சந்திப்பில் ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எஃப், புளொட் ஆகிய கட்சிகள் கலந்துகொண்டன. அச் சந்திப்பில் ஜனாதிபதி வெட்டொன்று துண்டு ரெண்டாக கூறிய விஷயங்களை வெளியே கூற தமிழ்க் கட்சித் தலைவர்கள் வெட்கப்பட்டனராம்.

அதையெல்லாம் கூறினால் அரசை ஆதரித்து வருவதை நியாயப்படுத்த முடியாமல் போகும் என்று உள் கூச்சம்.

பயணிகள் கப்பல் சேவை பற்றிக் கேட்டபோது, "படையினருக்குத்தான் முன்னுரிமை தரப்படும்" என்று அடித்துக்கூறப்பட்டதாம்.

வன்னி நிவாரணம் படையினர் கூறுகிறபடிதான் நடக்கும் என்றும் சொல்லப்பட்டதாம்.

இதெல்லாம் கூறப்படும்போது சீருடை அதிகாரிகளும் சமுகமளித்திருந்தனர். 'அவர்கள் முன்பாக இவரே இப்படிக் கூறும்போது, அவர்கள் மேலும் எத்தனை அடி பாய்வார்களோ?' என்று தமிழ்க் கட்சி பிரமுகர் ஒருவர் மெல்ல முணு முணுத்தாராம்.

சொன்னாலும் வெட்கமடா, சொல்லா விட்டால் துக்கமடா!



படிப்பகம்

www.padippakam.com

# இடி அமீன்

உண்மைத் தொடர்

அதிர் இடி 37

கடந்தவாரம்

ஒரு இலட்சம்பேர்வரை இடி அமீன் படைகளால் கொல்லப்பட்டனர் என்று தகவல் வெளியாகிறது. உள்நாட்டு மக்களும் அமீனை வெறுக்கின்றனர். அவர்களை திசைதிருப்ப வெள்ளையர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை ஆரம்பிக்கிறான். தன் முன்னால் மண்டியிட்டு சத்தியப்பிரமாணம் செய்ய வைக்கிறான்.

இனி....

ஆபிரிக்க நாடுகள் ஒன்றியத்திற்கு அமீன் தலைவராவதைத் தடுக்க பலர் முயன்றனர்.

**"கறுப்பின மக்களின் முடிசூடா மன்னன் நான்தான். ஆபிரிக்காவில் அமீனை விட தலைவராக வேறு யார் இருக்கிறார்கள்?"** என்று கேட்டான் அமீன். கேட்டது சியம்பாவிடம்.

அமீனிடம் முன்னாள் செயலாளரும், கலாசார அமைச்சருமான சியம்பாவுக்கு அமீனின் அதிரடி முயற்சிகள் ஆச்சரியமளித்தன.

சில சமயத்தில் விவேகம் இல்லாதவன் போல முட்டாள்தனமாக முடிவுகள் எடுத்தாலும், தந்திரங்களிலும் அமீன் சளைத்தவனல்ல என்பதை சியம்பா அறிவார்.

"தாங்கள்தான் தலைவர். அதில் என்ன சந்தேகம்! ஆபிரிக்க நாடுகளது தலைவர்களுடன் தொடர்புகொண்டு நீங்களே பேசிவிடுங்கள். மறுக்கமாட்டார்கள்," என்று சியம்பா கூறியதும், அமீன் இடிச் சிரிப்பை உதிர்த்தான்.

அமீன் சிரித்த காரணமும் சியம்பாவுக்கு, புரியவில்லை. புருவங்களை உயர்த்தினார்.

**"தாமதமாக யோசனை கூறுகிறீர். நான் ஏற்கனவே கதைத்துவிட்டேன். 'நீங்கள்தான் தலைவர். எங்களுக்கு பரிபூரண சம்மதம்' என்று கூறிவிட்டார்கள்"** என்ற அமீன் சந்தோசம் பொங்க மறுபடி சிரித்தான்.

விரைவாகத்தான் அமீன் செயற்படுகிறான் என்பதை அறிந்த சியம்பா. "அப்படியானால் மாநாட்டுக்கான ஒழுங்குகளை செய்யட்டுமா?" என்றார்.

**"கேட்க வேண்டாம். செய்யும். இடி அமீன் யார் என்று அகில உலகத்திற்கும் தெரியட்டும். தடபுடலாக மாநாடு நடக்க வேண்டும்"** என்றான் அறையின் குறுக்கும் நெடுக்குமாக நடந்தபடி.

ஆபிரிக்க நாடுகளது ஒன்றிய கூட்டத்திற்கு வரும் நாடுகளின் தலைவர்கள் தங்குவதற்கு கம்பலாவில் சொகுசான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

உணவு பரிமாறுவதற்கும், தேவைகளைக் கவனிக்கவும் அழகான பெண்கள் நியமிக்கப்பட்டனர்.

அப் பெண்களை அமீனே தெரிவு செய்தான். தலைவர்களின் பலவீனங்களை நிறைவு செய்து தம் பக்கம் இழுக்க அமீன் விரித்த வலை அது.

அமீன் எதிர்பார்த்தபடியே ஒரு சில பிரமுகர்கள் நடந்துகொண்டனர். பணிக்காக சென்ற பெண்களின் உடல்வாகு அவர்களை சஞ்சலப்படவைத்தது.

அமீனின் கட்டளை ஞாபகம் இருந்ததால், அந்த கட்டழகிகளும் விருப்பப்பட்டவர்களுக்கு கட்டில் சுகம் கொடுத்தனர்.

இடி அமீன்தான் தலைவர் என்பது மாநாடு தொடங்க முன்னரே உறுதியாகிவிட்டது.

அழகிகளை அனுபவித்த சில பிரமுகர்களுக்கு அமீனே போன் செய்தான். **"என்ன உகண்டாவின் அழகிகள் இனிப்பாக இருக்கிறார்களா?"** என்று அவன் கேட்டதுமே. அவர்கள் கதிகலங்குவதை போனிலேயே புரிந்து கொள்ள முடிந்தது.

அமீனுக்கு தெரிந்து விட்டதே என்று தர்மசங்கடத்தில் அவர்கள் நெளிந்து கொண்டிருக்கும்போது; **"ஏன் தயங்குகிறீர்கள்? இதெல்லாம் சர்வசகஜம். தாகம் எடுத்தால் தண்ணீர் குடிப்பதில் என்ன தப்பு? ஜமாயுங்கள்!"** என்று விட்டு போனை வைத்து விடுவான்.

மறுநாள் மாநாட்டின் போது அமீனால் நலம் விசாரிக்கப்பட்ட சில தலைவர்களும், பிரமுகர்களும் சங்கடத்துடன் நெளிந்தனர்.

எதுவுமே நடக்காததுபோல அமீன் சகஜமாக நடந்துகொண்டான். அமீனுக்கு தங்கள் பலவீனம் தெரிந்து விட்டதே என்று அவர்கள்தான் கூசிப்போய் நின்றனர்.

அமீன் விரும்பியது அதனைத்தான். தன் தந்திரம் பலித்ததை நினைக்க அமீனுக்கு திருப்தி.

மாநாட்டுக்கு அமீன் வரும்போது, அமோகமான வரவேற்புக்கு ஏற்பாடுகள் நடந்திருந்தன.

வரவேற்பு ஏற்பாடுகளை சியம்பா செய்திருந்தார். அவருக்கே தெரியாமல் அமீன் ஒரு ஏற்பாடு செய்திருந்தான்.

அது, அகில உலகையும் ஆச்சரியம், ஆத்திரம், பாராட்டு என்று பல்வேறு உணர்ச்சிகளுக்கு ஆளாக்கக்கூடிய ஏற்பாடு.

**"மாநாட்டுக்கு நான் காரில் வரமாட்டேன்"** என்று சியம்பாவுக்கு கூறியிருந்தான்.

"ஹெலிக்கொப்டரில் வரப்போகிறீர்களா?" என்று கேட்டார் சியம்பா.

**"ஏன், கால்நடை வாகனத்தில் வரக்கூடாதா?"** என்று கேட்டுச் சிரித்தான் அமீன்.

அமீன் கூறியதன் அர்த்தம் அப்போது சியம்பாவுக்கு புரியவில்லை. புரிந்திருந்தால் தடுக்க முயன்றிருப்பார்.

மாநாட்டுக்கு அமீன் வந்த கோலத்தை கண்ட சியம்பா மட்டுமல்ல, ஆபிரிக்க நாட்டுத் தலைவர்கள் மற்றும் பிரமுகர்களும் ஆச்சரியத்தில் உறைந்து போயினர்.

நான்கு வெள்ளைக்காரர்கள் அமீனை தங்கள் தோளில் சுமந்து வர, மற்றொரு வெள்ளைக்காரர் அமீனுக்கு குடை பிடித்தபடி



வந்துகொண்டிருந்தார்.

கைகளை அசைத்து மகிழ்ச்சி தெரிவித்தபடியும், புன்னகைத்தபடியும் அமீன் அவர்கள் தோளில் பவனி வந்தான்.

வீதிகளில் திரண்டிருந்த மக்கள் அமீனின் செய்கைக்காக ஆரவாரம் செய்தனர். சிலர் மட்டுமே முகம் சுளித்தனர்.

தம்மை அடக்கியாண்ட வெள்ளையர்கள், இப்போது கறுப்பு இன அதிபரை தோளில் சுமப்பதைக் காண உகண்டா குடிமக்களுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

மாநாட்டு மண்டபத்தில் இருந்த தலைவர்களுக்கு அமீனின் நடவடிக்கை அறவே பிடிக்கவில்லை. ஆனாலும் அதனை வெளிக்காட்டத் தயங்கினர்.

ஆபிரிக்க ஒன்றியத் தலைவராக இடி அமீன் தேர்வு செய்யப்பட்டான். அத் தெரிவை ஆட்சேபிக்க நினைத்த தலைவர்கள் சிலர் தங்கள் பலவீனம் அமீனுக்கு தெரிந்ததால், எதிர்ப்பு தெரிவிக்காமல் பின்வாங்கினார்கள்.

**"வெள்ளையர்கள் என்முன்னால் மண்டியிட்டு அமர்ந்ததை கண்டித்தனர். இப்போது தோளில் தூக்கி சுமந்ததையும் கண்டிப்பார்கள். கண்டிக்கட்டும். கறுப்பன் மட்டும் அவர்கள் காலுக்கு பூட்சாக இருக்கலாம். வெள்ளையன் கறுப்பன் காலுக்கு பூட்சாக இருக்கக்கூடாதா? ஆதிக்கத் திமிரில் கண்டனம் செய்பவர்களுக்கு அமீன் காது கொடுக்க மாட்டான்! இந்த வெள்ளையர்கள் என் விசுவாசிகள். தாங்களாக முன்வந்து என்னை தூக்கி வந்திருக்கிறார்கள். அதற்கு நான் என்ன செய்வது?"** என்று தன்னிலை விளக்கம் அளித்தான் அமீன்.

அவனது விளக்கத்தைக் கேட்ட சியம்பா, அமீன் உலக மகா குள்ளநரியாக மாறிவருகிறான்' என்று நினைத்துக் கொண்டார்.

அமீனை தூக்கிவந்த வெள்ளையர்களைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. அவர்கள் முச்சிறைத்தனர். கோட், சூட்டெல்லாம் வியர்வையில் நனைந்திருந்தது.

மாநாடு முடிவுற்ற பின்னரும் அவர்கள் அமீனை முன்புபோலவே தங்கள் தோள்களில் சுமந்து சென்றனர்.

சுமந்து வந்த கூலியாக பணம் கொடுத்தான் அமீன். கையில் கொடுக்காமல் தரையில் வீசியெறிந்தான். அவர்கள் பொறுக்கிக் கொண்டு போனார்கள்.

வெள்ளையர்களுக்கு எதிரான உணர்ச்சியை கிளப்பி தன்மேல் உள்ள அதிருப்திகளை திசை திருப்பிய அமீன் தனது அமைச்சர்களுக்கும் பேரிடி ஒன்றைக் கொடுத்தான்.

**"அமைச்சர்கள் அனைவரும் ஒருமாத விடுமுறையில் செல்லுங்கள். உங்கள் பொறுப்புக்களை உங்கள் அமைச்சு செயலாளர்கள் பார்த்துக் கொள்வார்கள்"** என்று உத்தரவிட்டான்.

சியம்பா உட்பட தனக்கு வேண்டிய மிகச் சில அமைச்சர்களுக்கு மட்டும் விதி விலக்கு அளித்தான்.

அமைச்சர்களின் திறமை இன்மைதான் நாட்டின் பசி, பட்டினிக்கும், பொருட்களது தட்டுப்பாடுகளுக்கும் காரணம் என்று மக்களை நம்ப வைக்கவே அந்த ஏற்பாடு.

இதற்கிடையே இன்னொரு பிரசாரமும் அமீனால் கட்டவுழ்த்துவிடப் பட்டிருந்தது.

**"ஆசிய நாட்டவர்கள் போகும்போது நாட்டின் செல்வத்தை சுரண்டிக் கொண்டு போய்விட்டனர். நல்ல வேளை இப்போதாவது துரத்தியடித்தோம். மேலும் விட்டு வைத்திருந்தால் உகண்டாவையே விழுங்கி இருப்பார்கள்!"** என்று கூறினான் அமீன்.

படித்தவர்கள் மத்தியில் அமீனின் ஏமாற்றுக்கள் எடுபடவில்லை. பாமர மக்களிடம் அமீன்மீது வெறித்தனமான பக்தி இருந்தது.

பாமர மக்களை கவரும் விதமாக அவர்கள் மத்தியில் அடிக்கடி கூட்டங்கள் நடத்தியும், ஆட்டங்கள், பாட்டங்கள், விளையாட்டுப் போட்டிகள் நடத்தியும் மகிழ்வித்தான். தானே நேரில் கலந்து கொள்வான்.

பாமர மக்கள் மத்தியில் அழகான பெண்கள் கண்ணில் தென்பட்டால், உடனே அமீன் கை வைக்க மாட்டான். அப்பகுதியில் செல்வாக்கான நபர் மூலம் குறிப்பிட்ட பெண்களை அணுகுவான்.

தன் ஆட்களை அனுப்பிப் பிடித்தால், பாமர மக்களிடமும் கெட்ட பெயர் ஏற்பட்டு விடும் என்று ஜாக்கிரதையாகவே நடந்து கொண்டான்.

ஒரு மாத விடுமுறையில் அமைச்சர்கள் இருந்த போது, செயலாளர்கள் செயற்பட்ட முறை அமீனுக்கு பிடித்திருந்தது.

செயலாளர்களை ஒரு நாள் அழைத்தான். **"நீங்களே அமைச்சர்களாக விரும்பினால் இப்போதே சத்தியப் பிரமாணம் செய்து வைக்கிறேன். தயாராக இருக்கிறீர்களா?"** என்று கேட்டான்.

தாம் அமைச்சர்களானால் என்ன மரியாதை கிடைக்கும் என்பது அதிகாரிகளுக்கு தெரியும்.

"நன்றி! நாம் இப்படியே உங்களுக்கு கீழ்ப்படிந்த அதிகாரிகளாகவே இருக்க விரும்புகிறோம்" என்று கூறிவிட்டனர்.

உடனே இன்னொரு உத்தரவு பிறந்தது அமீனிடம் இருந்து; "ஒரு மாத விடுமுறையில் நிற்கும் அமைச்சர்களுக்கு மேலும் ஒருமாதம் விடுமுறை நீடிக்கப்படுகிறது" என்று அறிவித்தான்.



தோளில் பவனி

அமைச்சு செயலாளர்கள் திறமையாக இயங்கினாலும், நாட்டின் பஞ்சத்தை தீர்க்க முடியவில்லை.

நெருக்கடி மேலும் தீவிரமடைந்தது. கல்விமான்கள் பலர் நாட்டைவிட்டு வெளியேறிக் கொண்டிருந்தனர்.

**"அரச செலவில் கல்வி கற்றுவிட்டு, நாட்டை விட்டு தப்பியோடுவது தேசத் துரோகம். அதனால் அப்படி தப்பியோடுபவர்களை விசாரணையின்றியே சுட்டுக் கொல்லுங்கள்"** என்று உத்தரவு பிறப்பித்தான்.

அமீனின் உத்தரவு கடுமையாக இருந்ததே தவிர, எல்லைப் புறங்களில் காவலுக்கு நின்ற படையினர் பணத்தை வாங்கிக் கொண்டு தப்பியோட அனுமதித்தனர்.

நாட்டைவிட்டு வெளியேற கடும்விதிகள் கடைப்பிடிக்கப்பட்டதால், எல்லைப்புற படைகளும், படை அதிகாரிகளும் இலஞ்சம் வாங்கிக் கொழுத்தனர்.

மேலும் விதிகளை கடுமையாக்கும் படி படை அதிகாரிகள் அமீனுக்கு ஆலோசனை கூறினார்கள்.

அமீனும் அதன்படியே செய்தான்.

திடீரென்று மற்றொரு அதிர்ச்சியான அறிவிப்பு வெளியானது.

(இடி தொடரும்)

# காதால் படிக்கும் சாமியார்



சாமியார்கள், மாந்திரீகர்கள் என்று மக்களை ஏமாற்ற பலர் போட்டி போடுகின்றனர். ஏமாந்தே தீருவோம் என்று அடம்பிடிக்கும் மக்களை யாராலும் தடுக்க முடியாது.

இந்தியாவில் குஜராத் மாநிலத்தில் ஒரு சாமியார் காதால் படிப்பதாகக்கூறி வெகு பிரபலமானார்.

பக்தர்கள் தங்கள் கேள்விகளை எழுதி, சுருட்டி ஒரு பெட்டியில் போட்டுவிட வேண்டும். அப் பெட்டியில் இருந்து சாமியார் ஒவ்வொன்றாக எடுத்து தன் காதில் வைத்துப் படிப்பார். காதில் பேப்பரை வைத்தபடி வாயை படிப்பதுபோல அசைப்பார்.

பிறகு கடிதத்தில் உள்ள பிரச்சனையைக் கூறி, இப் பிரச்சனையுடன் வந்தது யார்? என்று கேட்டுவிட்டு, பின்னர்தான் கடிதத்தை கண்ணால் படிப்பார்.

பக்தர்கள் மெய்சிலிர்த்துப் போவார்கள். அவதார புருஷர், முற்றும் அறிந்த வித்தகர் என்று படித்தவர்கள்கூட ஏமாந்து புகழ்வார்கள்.

இதில் என்ன தந்திரம் தெரியுமா?

முதல் கடிதத்தை பெட்டியிலிருந்து எடுத்து, காதில் வைத்து, "வெளிநாடு போக முடியுமா? என்று கேட்ட வாலிபர் யார்?" என்று கேட்பார். உடனே சாமியாரின் ஆளான அந்த நபர் எழுவார்.

'சரி கடிதம் சரியாக இருக்கிறதா என்று பார்ப்போம்' என்று சாமியார் கண்ணால் படிப்பார். அது வேறொரு பக்தர் எழுதிய கடிதமாக இருக்கும். அதில் தனக்கு திருமணமாகவில்லை என்று குறையை கொட்டியிருப்பார் ஒரு பக்தர். அதை மனதில் பதியவைத்துக் கொள்வார் சாமியார்.

'வெளிநாடு போக முடியுமா?' என்று தன் ஆளுக்கு பலன் கூறி நடித்துவிட்டு, அடுத்த கடிதத்தை காதால் படிப்பார்.

"திருமணமாகவில்லை என்று கூறியது யார்?" என்று கேட்பார். அந்த அப்பாவி பக்தர் ஆச்சரியத்தோடு எழுவார். அவரது கடிதத்தை கண்ணால் சரி பார்ப்பதுபோல வேறொரு பக்தரின் கடிதத்தை சாமியார் படித்து மனதில் பதிய வைத்துக் கொள்வார். இப்படி தொடர்ந்து செய்து அசத்த வேண்டியதுதான்.

இந்தப் போலிச்சாமியாரை நம்பி ஆண்களும், பெண்களும் இவரிடம் பலன் கேட்க அலைகிறார்கள்.

# மனித இறைச்சிப் பிரியர்கள்



இடி அமீன் மனித மாமிசம் சாப்பிட்டு பிரபலமானவன். இப்போதும் சில நாடுகளில் ஆதிவாதிகளிடையே மனித மாமிசம் சாப்பிடும் பழக்கம் இருக்கிறது.

பிலிப்பைன்ஸ் கடற்பகுதியில் உள்ள கொள்ளையர்களுக்கும் மனித மாமிசம் சாப்பிடும் பழக்கம் இருப்பது தெரியவந்துள்ளது.

கடற்கொள்ளையர் அட்டகாசம் பிலிப்பைன்ஸில் அதிகமாகிவிட்டது. சிறு படகுகளில் பயணம் செய்பவர்களையும் வழிமறித்து கொள்ளையடிக்கிறார்கள்.

படகில் இருப்பவர்களை சுட்டுத்தள்ளுகிறார்கள். அல்லது உயிருடன் தீயில் ரோஸ்ட் செய்து கை, காது, மூக்கு என்று பிய்த்துச் சாப்பிடுகின்றனர்.

இக் கொடூர கொள்ளையரை தடுக்கவோ, பிடிக்கவோ முடியாமல் பிலிப்பைன்ஸ் அரசு திணறுகிறது. அங்கு பர்னியோ, சவ்ளவ் என்னும் பகுதிகளில் கடற் கொள்ளையரின் கொடுமை கொடிகட்டிப் பறக்கிறது.

பிலிப்பைன்ஸ்சில் பொருளாதார நெருக்கடி தலைவிரித்தாடுவதால்,கொலை, கொள்ளை போன்ற குற்றச் செயல்களும் பதிலுக்கு தலைவிரித்தாடுகின்றன.

மாபியா எனப்படும் சர்வதேச பயங்கரவாத கும்பலின் பிடியில் பிலிப்பைன்ஸ் அரசு உள்ளது. அதனால் கடற் கொள்ளையரை பிடிக்க போதிய அக்கறை காட்டப்படுவதில்லையாம்.

மாபியா கும்பலின் போதைப் பொருள் கடத்தலுக்கு கடற்கொள்ளையர்தான் உதவி செய்கின்றனர்.

# வயது 74 மனைவிகள் 90

கடந்தவாரம் இந்தியப் பத்திரிகைகளில் முன்பக்க சுவாரசியச் செய்தி இதுதான்.

இந்தியாவில் ஒரிசா மாநிலத்தை சேர்ந்த 74 வயது இளைஞர் உதயானந்ததாகின்ரே

யார் யாரோ எப்படியெல்லாமோ உலக சாதனை படைக்கின்றனர். ஆனால் இவரோ அதிக மனைவியர் மூலம் உலக சாதனை படைக்க துடிப்பாய் இருக்கிறார்

இதுவரை 90 பெண்களை மணந்து கொண்டார். நூறு திருமணம் செய்து சதம் போடுவதுதான் இவரது அசைக்க முடியாத இலட்சியம்.

இவரின் 90 மனைவிகளில் 24 பேர் ஏற்கனவே மண்டையைப் போட்டுவிட்டனர். ஏனைய மனைவிகள் இவரது சாதனை முயற்சிக்கு பக்க பலமாக இருப்பதுதான் ஆச்சரியம்.

இவருக்கு ஏழு மகன்களும், ஐந்து மகள்களும் உள்ளனர். 90வது கல்யாணம் சமீபத்தில்தான் நடந்தது. 90வது இளம் மனைவியுடன் தேனிலவு கண்டுள்ளார். அதனால் வாரிசுகள் எண்ணிக்கை கூடலாம்.



90வது இளம் மனைவியுடன்

இந்த 74 வயது இளைஞரின் மகள் கல்லூரியில் படிக்கிறார். "அப்பா செய்வது தப்பே இல்லை புகழ்வாய்ந்த ஒரு விஷயத்தை செய்ய வேண்டும் என்று நினைக்கிறார். முன்பெல்லாம் அரசர்களுக்கு பல மனைவியர் இருந்திருக்கிறார்களே. என் அப்பாவுக்கு மட்டும் என்ன குறைச்சல்?" என்று கேட்கிறார் மகள்.

நிலபுலன் வசதிகள் தாராளமாக இருப்பதால் 90 கல்யாணம் செய்தும் சொத்துப் பத்து குறையாமல் இருக்கிறதாம்.

# ஜடேஜாவின் காதலி



இளம் நடிகைகள் முதல் பழம் நடிகைகள் வரை ஜடேஜாவின் நண்பிகளாக இருந்தனர். தீராத விளையாட்டுப் பிள்ளையாக கும்மாளமடித்து திரிந்தார் ஜடேஜா.

தற்போது கும்மாளங்களுக்கு விடை கொடுத்துவிட்டு தீவிரமாக ஒருவரை காதலிக்கிறார் ஜடேஜா. காதலியின் பெயர் மதுவந்தி. நடிகை பாக்யஸ்ரீயின் தங்கை. மதுவந்தியும் நடிகைதான் கோவிந்தாவின் ஜோடியாக இந்தியில் தோ ஆன்கேன் பாரா ஹாத் என்ற படத்தில் நடித்தவர்.

'ஜடேஜா திருமணத்தின் பின்னர் ஒழுங்காக இருப்பார். அந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது. எனவே அவர் பற்றிய ஏனைய விவகாரமான செய்திகளையிட்டு கவலைப்படமாட்டேன்" என்கிறார் மதுவந்தி.

விரைவில் திருமணம் நடக்கப்போகிறதாம். மதுவந்தியை எண்ணி பெருமூச்சு விடுகிறார்கள் ஜடேஜாவின் ஏனைய நண்பிகள்.



படிப்பகம்

www.padippakam.com



## குட்டிகள்

↑ வன்னிக் காடுகளில் மலைப்பாம்புகள் தாரா ளம். இப்படம் நெடுங்கேணி மில் கிளிக்கியது.

இப்படம் எடுக்கப்படும்போது இம் மலைப்பாம்பு மொத்தம் 48 குட்டிகள் போட்டது. மீதிக் குட்டிகள் வயிற்றுக்குள் இருக்கின்றன. (படப்பிடிப்பு: பொ. ரமேஸ். முள்ளியவளை.)

## அழு பாப்பா அழு




→ ஜப்பானில் அழும்போட்டி நடத்தப்படுகிறது. (அந்தளவுக்கு அங்கு சந்தோசம் நிலவுகிறதாக்கும்) குழந்தைகள் நன்றாக அழுதால் உடல் நலத்திற்கு நல்லதாம். அதனால் தான் இந்தப் போட்டியாம்

சமீபத்தில் போட்டியில் 64 குழந்தைகள் கலந்து கொண்டன. குழந்தைகளை அழவைக்க ஒரு யுக்தியை கையாண்டனர்.

மாமிச மலைகளான சுமோ மல்யுத்த வீரர்களிடம் ஒவ்வொரு குழந்தையாக கொடுத்தனர். அவர்களது தோற்றத்தை பார்த்ததும் குழந்தைகள் வீறிட்டு அழுதன. அப்படி அழுத குழந்தைகளில் அட்டகாசமாக அழுது முடித்த குழந்தை இதுதான். முதற் பரிசு கிடைத்தது. இப்போட்டி டோக்கியோ வில் உள்ள சென்லஸாளி ஆலயத்தில் நடைபெற்றது.

## பெரும் பூனை



↑ இன்று உலகில் உயிருடன் வாழும் மிகவும் பருமனான பூனை இதுதான். இவ்வாண்டு பெப்ரவரிமாதம் இப்பூனையின் எடை 16.7 கிலோவாக (36 இறாத்தல்) இருந்தது. இதன் கழுத்து 36 சென்டி மீட்டர். நோர்வேயிலுள்ள சங்டல் என்ற இடத்திலுள்ள ஒரு தனவந்தரின் வீட்டு செல்லப்பிராணி இது

இதன் பெயர் கடோ.

இந்தப் பூனையைவிட பெரும் பூனையும் இருந்தது. அவுஸ்திரேலியாவில் குவீன்ஸ் லாந்திலுள்ள கெய்ண்ஸ் என்ற இடத்திலுள்ள தோமஸ் வைஸ், ஹிம்மி என்றொரு பூனையை வளர்த்தார். 10 வருடங்களும் 4மாதங்களும் வாழ்ந்த அந்தப் பூனையின் எடை 21.3 கிலோவாக (46 இறாத்தல்15 1/4 அவுன்ஸ்) இருந்தது. அதனுடைய உடல் சுற்றளவு 84 சென்டி மீட்டர் (33 அங்குலம்) ஹிம்மியை அடக்கம் செய்வதற்கு கொண்டு செல்ல ஒரு தள்ளு வண்டி தேவைப்பட்ட தாம். ஹிம்மியின் இடத்தை கடோ பிடித்துவிடும் போலுள்ளது.

மேலும். சுமார் 10 இறாத்தல் பெருத்தால் போதும். முன்னைய உலக சாதனை டமாலாகி விடும்.

## சாதனை நோட்டு




↑ பிலிப்பைன்ஸ் நாட்டில் நூறாவது சுதந்திரதின விழா கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது.

அதனை முன்னிட்டு ஜெர்மன் அரசாங்கம் உலகிலேயே பெரிய பணநோட்டை அச்சிட்டு பரிசளித்தது. பிலிப்பைன்ஸின் ஒரு இலட்சம் பீசா பெறுமதியான நோட்டுத்தாள் இவ்வாறு பெரிய்ய்ய்யய அளவில் அச்சிடப்பட்டது. இதன் பெறுமதி நம்நாட்டு மதிப்பில் சுமாராக மூன்று இலட்சம் ரூபாய்கள்.

## தகவல் பெட்டி


### மேலதிகமாக ஒன்று



→ இது நம்நாட்டு அபூர்வ சமாச்சாரம். வாழைச்சேனையைச் சேர்ந்த ஆத்மலிங்கம் என்பவரது வீட்டில் பேட்டுக் கோழி ஒன்று இருக்கிறது.

இக் கோழிக்கு மேலதிகமாக ஒரு கால் பின்பகுதியில் இருக்கிறது. படைத்தவன் போனஸ் கொடுத்திருக்கிறான் என்று கேலி செய்தபடி இந்த கோழியை தினமும் பலர் கண்டு வியக்கின்றனர்.

## பிரிட்டனில் புலியபிமானம்



→ பசுத்தோல் போர்த்த புலி என்று உவமைகள் கூறப்படுவதுண்டு. இது புலித்தோல் போர்த்த பூனை.

பிரிட்டனில் ஒரு செல்வந்தர் வீட்டில் வசிக்கும் செல்லப் பூனை இது.

அந்தச் செல்வந்தருக்கு புலி வளர்க்கத்தான் ஆசையோ ஆசை.ஆனால் பயம். எனவே பூனையை வளர்த்து அதற்கு புலித்தோலில் உடை தயாரித்து போட்டுள்ளார்.

பிரிட்டனில் பூனைகளுக்கு மட்டுமன்றி ஏனைய பிராணிகளுக்கும் புலித்தோல் ஆடைகள் அணிவிப்பதில் ஆர்வம் பெருகிவருகிறது. அதனால் புலித்தோல் ஆடைகளுக்கு பலத்த மவுசு



படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் 79

# பிரபு கொடுத்த எச்சரிக்கை

## எண் ராசி பார்த்த நடிகர்

தமிழக சினிமா பத்திரிகையாளர் எஸ்.விஜயன் பல அனுபவங்களை சந்தித்தவர். சினிமா என்ற கனவுத் தொழிற்சாலைக்குள் நடக்கும் நிழலான சமாச்சாரங்கள் பலவற்றை அறிந்தவர்.

குஷ்புவை காதலிக்க முன்னர் அம்பிகாவுடன் நெருக்கமாக இருந்தவர் பிரபு. அச் சந்தர்ப்பத்தில் தனக்கு ஏற்பட்ட அனுபவம் ஒன்றை விபரிக்கிறார் விஜயன்:

"தமிழில் பிரபு, மலையாளத்தில் சங்கர் (ஒருதலை ராகம் புகழ் சங்கர்) கன்னடத்தில் அம்பரிஷ் என்று ஒவ்வொரு மொழியிலும் ஒரு ஹீரோவுடன் நடிகை அம்பிகா 'நெருக்கமாக' கிசுகிசுக்கப்பட்ட நேரம் அது.

'தராசு' படப்பிடிப்பு விஜயா கார்டனில் நடந்தது. அம்பிகா மற்றும் நடனக் குழுவினர் பங்கு கொண்ட பாடல் காட்சியொன்று படமாகியது. படப்பிடிப்பு இடைவேளியில் அம்பிகா மற்றும் நடனப் பெண்களுடன் பிரபு அரட்டை அடித்துப் பேசிக்கொண்டிருந்தார். பலர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அந்த சூழ்நிலையை புகைப்படம் எடுத்ததோடு, பத்திரிகை ஒன்றில் எழுதிவிட்டேன். என்ன பார்த்தேனோ அதைத்தான் எழுதினேன்.

வாகினியில் நடந்த படப்பிடிப்பு ஒன்றில் என்னைப் பார்த்த பிரபு "என்ன இப்படியெல்லாம் எழுதுகிறீர்களே?" என்று வருத்தப்பட்டுக்கொண்டார்.

"நீங்கள் வெறும் பிரபுவாக இருந்தால் பரவாயில்லை. சிவாஜியின் மகனாக இருக்கிறீர்கள். அந்தக் கண்ணோட்டத்துடன்தான் உங்களை எல்லோரும் பார்ப்பார்கள். அதை நீங்கள் உணர வேண்டும் என்பதற்காக எழுதினேன்." என்று சொன்னேன். அதை பிரபு ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை.

ஏ.வி.எம்மில் 'திருப்பம்' படப்பிடிப்பு. பிரபு நடித்துவிட்டு வெளியே மரத்தடியில் அமர்ந்திருந்தார். பேசலாம் என்று அவரோடு அமர்ந்தேன்.

சிறிது நேரத்தில், அப்போதுதான் ஒப்பனை செய்துகொண்ட முகத்தோடு அம்பிகா அங்கே வந்தார்.

என்னை கவனிக்காமலேயே பிரபுவுடன் நெருங்கிப் பேச ஆரம்பித்தார். பிரபுவுக்கு தர்மசங்கடமாகிவிட்டது. அதை நான் கவனிக்காததுபோல முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டேன்.

பிரபு அம்பிகாவிடம், 'பிரஸ் (பத்திரிகை) பிரஸ்...' என்று இரண்டு மூன்று முறை மெதுவாகச் சொல்ல, அம்பிகா வேறொருபுறம் சென்று விட்டார். அதற்கு மேல் இருக்கப்பிடிக்காமல் எழுந்து வந்துவிட்டேன்.

### ராசியில்லை

நடிகர் செந்தாமரையை 'மூன்று முகம்' படத்தில் நடித்து அவர் பிரபலமாக முன்னரே பார்த்துப் பேசியிருக்கிறேன். பிஸியான பின்னரும் தனது சொந்தக் கதை, சோகக் கதையெல்லாம் வெளிப்படையாகச் சொல்வார்.

எண் சாத்திரத்தில் அவருக்கு ஈடுபாடு அதிகம் என்பது திரையுலகமே அறிந்த விஷயம். ஒருமுறை பேச்சுவாக்கில் என்னிடம்: "நடிகை அர்ச்சனாவின் எண் ராசிப்படி அவருக்கு பாலுமகேந்திராவோடு தொடர்பு இருந்தால் ஆபத்து" என்றார்.

விஷயம் சுவாரசியமாக இருந்ததால், அவர் சொன்ன வேறு விஷயங்களையும் இணைத்து யாரோ சொன்னதாக வண்ணத்திரையில் எழுதிவிட்டேன்.

பாலுமகேந்திராவுக்கு செந்தாமரையில் சந்தேகம். அவரிடமே கேட்டிருக்கிறார். பாலுமகேந்திரா இயக்கிய 'உன் கண்ணில் நீர் வழிந்தால்' படத்தில் செந்தாமரை நடித்துக் கொண்டிருந்தார். அதனால் பாலு மகேந்திரா சங்கடப்படக்கூடாது என்பதால், "நான் அப்படிச் சொல்வேனா?" என்று மறுத்துவிட்டார்.

இந்த விஷயங்கள் எனக்கு தெரியவந்தன. "உங்களைக் கேட்காமலேயே இந்த விஷயத்தை எழுதியதால் உங்களுக்கு தர்மசங்கடமா?" என்று செந்தாமரையிடம் கேட்டேன்.

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. நீங்கள் இப்படி எழுதியதால்தான் பாலுமகேந்திரா அர்ச்சனா இருவருமே எச்சரிக்கை அடைந்திருக்கிறார்கள். நல்ல காரியம்தான் செய்திருக்கிறீர்கள்?" என்று பாராட்டினார். இவ்வாறு தன் அனுபவத்தை விபரித்திருக்கிறார் விஜயன்.

## பொழுதுபோக்கு

கதாநாயகியாக குணச்சித்திரம் பல காட்டி நடிப்பவர் அவர். நட்சத்திரம் ஒன்றின் பெயர் கொண்ட நான்கெழுத்து நடிகை.

கமராக்காரர் ஒருவரை மணந்து கொண்டிருக்கிறார். கமராக்காரரின் உறவினரும் ஒரு நடிகர். மறைந்த இந்தியப் பிரதமர் ஒருவரது பெயரை தன் பெயரில் பாதியாக கொண்டவர் அந்த நடிகர்.

அந்த நடிகரும், நடிகையும் தொலைக் காட்சி நாடகம் ஒன்றிலும் இணைந்து நடித்தனர்.

அந்த இளம் நடிகரின்மீது நடிகைக்கு ஈர்ப்பு ஏற்பட்டுவிட்டது. இருவரும் அடிக்கடி சந்திக்கின்றனர். படங்களில் நடிப்பதை குறைத்துக்கொண்டு விட்ட நடிகைக்கு, நடிகரின் நட்பால் பொழுதுபோகிறது.

நடிகைகள், நடிகையர்கள் பற்றிய பின்னணி தகவல் வெளியிட்ட தமிழக பத்திரிகைகள் மீதும் அந்த நடிகை சமீபத்தில் கோபப்பட்டிருக்கிறார்.



ஸ்ரீகாந்த்-செண்பகா
படம்: எங்க மாப்ளே.


மம்தா குல்கர்னி
படம்: சைனா கேட்

## ஜோடி ஆசை

'உன்னைத் தேடி' படத்தில் அஜித் கதாநாயகன். சுவாதியும் நடிக்கிறார். ஆனால் அஜித் ஜோடியாக அல்ல. கரண் ஜோடியாக. அதனால் தயாரிப்பாளருடன் சண்டை போட்டாராம் சுவாதி. அஜித்துடன் மீண்டும் ஒட்டி உறவாட வாய்ப்புக் கிடைக்கும் என்பதால் ஜோடியாக நடிக்க ஆசைப்படுகிறாராம்.

## முகப்பில்

விஜயகாந்த்–ரோஜா

படம்: 'வீரம் வௌஞ்ச மண்ணு'

## அப்பாஸ் ஓ.கே.

'கரிச்சக்காட்டு காதல்' படத்தில் ராஜ்கிரண், நெப்போலியன் ஆகியோருடன் அப்பாஸ் நடிக்கிறார். 'படையப்பா' படத்தில் ரஜினியுடனும் அப்பாஸ் நடிக்கிறார்.

சமகால கதாநாயகர்களுடன் நடிப்பதற்கு தயங்கும் அப்பாஸ், தனக்கு மூத்த கதாநாயகர்களுடன் நடிக்க தயக்கம் காட்டுவதில்லை.

வி.ஐ.பி. படத்தில் பிரபு தேவாவுடன் நடித்து ஏற்பட்ட கசப்பான அனுபவம் காரணமாகவே சமகால கதாநாயகர்களுடன் இணைந்து நடிக்க மறுக்கிறார் அப்பாஸ்.

'கரிச்சக்காட்டு காதல்' படத்தில் சுவலட்சுமி, ரோஜா, ப்ரியாராமன் ஆகியோரும் நடிக்கின்றனர். பாரதிராஜாவின் 'கிழக்கு சீமையிலே' படத்திற்கு கதை வசனம் எழுதிய ரத்னகுமார் இப்படத்தை இயக்குகிறார். இசை: தேவா. பாடல்கள்: வைரமுத்து.

## மீனாவின் ரசிகர்

நடிகர் விஜய் மீனாவின் தீவிர ரசிகர். தனது அறையில் மீனா நடித்த படங்களின் வீடியோ கசட்டுக்களை வைத்திருக்கிறார்.

மனசு சுருங்கினால் மீனா நடித்த படங்களின் கசட்டுக்களை போட்டுப் பார்ப்பாராம்.

நாம் இருவர் நமக்கு இருவரில் மீனா ஓவராக கவர்ச்சி காட்டியது விஜய்க்கு வருத்தமாம்.

## இயக்க வருகிறார்

விரைவில் படம் இயக்க ஆயத்தமாகிறார் அரவிந்தசாமி. அதற்காக தான் நடிக்கும் படங்களில் கற்றுக்கொள்கிறார்.

மகேந்திரன் இயக்கத்தில் அரவிந்தசாமி நடிக்கும் படம் சாசனம். அப்படத்தில் நடிக்கும்போது நிறையக் கற்றுக் கொண்டாராம்.

## காதல் சுந்தரம்

மூத்த ஹீரோக்களும் சிம்ரானை நினைத்து ஜொள்ளு விட்டுக்கொண்டிருக்க, சிம்ரானை வென்றுவிட்டார் ராஜு சுந்தரம்.

பிரபு தேவாவைப் போல ராஜு சுந்தரமும் காதல் வலையில் வீழ்ந்ததை எண்ணி பெற்றோர் புலம்புகின்றனர். ஆனால் ராஜு சுந்தரம் சளைக்காமல் காதலைத் தொடர்கிறார்.

## காதோடு சொல்லுகிறோம்

ஆக்ஷன் கிங்குடன் நடிக்க மணியான நடிகை மறுத்தாராம். பின்னர் இயக்குநரின் பிடிவாதத்தால் ஒப்புக்கொண்டாராம். ஆக்ஷன் கிங் தன்னிடம் வித்தை காட்ட நினைத்தால் மும்பாய்க்கு போய்விடுவேன் என்று இயக்குநரிடம் நிபந்தனை போட்டுள்ளாராம் நடிகை.

முகத்தில் முதிர்ச்சி தெரிவதாக பலர் கூறியதால் வாட்டத்தில் இருக்கிறார் 'சிம்ம' நடிகை. ரசிகர்கள் என்னிடம் முகத்தையா பார்க்கிறார்கள்? என்றும் கடுப்படிக்கிறாராம். வெளிநாட்டில் இருந்து ஒப்பனை சாதனங்கள் தருவிக்கப் போவதாகவும் தகவல்.

நடிப்பில் வல்ல மூன்றெழுத்து 'க' நடிகரை பூவின் பெயர் கொண்ட இரண்டு எழுத்து நடிகை சாடியிருந்தார். எப்படியாவது அந்த நடிகையை தன் படம் ஒன்றில் நடிக்க வைக்க எண்ணியுள்ளாராம் 'க' நடிகர். அதன்மூலம் தனது மன் னிக்கும் மனோபாவத்தை காட்ட எண்ணுகிறாராம்.

## "தனிப்பட... தலையிடுவ...

'பம்பாய்' படம் மூலம் தமிழ்ப்ப... கொள்ளையடித்தவர் மனிஷா கொய்ராலா. 'இந்தியன்' சூப்பர் வெற்றி.

இப்போது ஷங்கரின் இயக்கத்தில் அர்ஜுன் படத்தில் நடிக்கிறார். மனிஷாவின் நெத்தியடியா...

கே: ஆண்கள் பற்றி உங்கள் அபிப்பிராயம் எ...

ம: பெண்களை ஏமாற்றி 'செக்ஸ்' வைத்து... ஆண்களில் பலர் நினைக்கின்றனர்.

கே: இது உங்கள் சொந்த அனுபவமா?

ம: அப்படியும் வைத்துக்கொள்ளலாம். நீங்க... எதற்கும் கண், காது, மூக்கு வைத்துத்தா...

கே: நானாபட்டேகருடன் உங்கள் காத...


படிப்பகம்

www.padippakam.com

## ...ம்மா உபதேசம்

...விரும்புதே உன்னை' படத்தில் பிரபுவின் ...க இரண்டு குழந்தைகளுக்கு தாயாக நடிக் ...ளா. படப்பிடிப்பு இடைநடுவே நிற்கிறது. ...' படத்தில் கவர்ச்சி கொட்டி நவீன ...ாக நடிக்கிறார்.

கதாநாயகனுடன் நடித்தாலும் மிகவும் ...ன தோற்றத்துடன் இருக்கிறீர்களே? எப்படி ...ாகிறது?" என்று கேட்டால், "எல்லாம் என் ...ன் உபதேசம்தான். அவரிடம்தான் கேட்க ...!" என்கிறார்.

## ...ஜினிக்கு முடி

...ணாச்சலம்' படத்தில் முன்பக்க தலை ...முடியை ஒட்டவைத்துக் கொண்டு நடித் ... ரஜினி. 'படையப்பா' படத்தில் விக் ...வைத்து கொண்டு நடிக்கிறார்.

யாருமே கண்டு பிடிக்க முடியாத மாதிரி விக் தயாரிக்கப்பட்டுள்ளதாம். வெளிநாட்டில் இருந்து மூன்று 'விக்'குகளை தருவித்துள்ளார் ரஜினி. அவரது இயற்கை முடி போன்றே தயாராகியுள்ளது. விக் ஒவ்வொன்றும் தலா இரண்டு இலட்ச ரூபாய். மொத்தம் ஆறு இலட்ச ரூபாய்கள் 'விக்' செலவு.

## மார்லின் பாணியில்

நடிகைகள் பலர் போஸ் கொடுக்கும்போது அவர்களின் உதடுகள் சற்று திறந்திருக்கும். இதற்கு முன்னாடி மார்லின் மன்றோ.

உடலின் ஏனைய பாகங்களை வெளிப்படுத்துவதைவிட, உதடுகளால் ஏராளம் கவர்ச்சியை காட்டி கிறங்கடிக்க முடியும். போஸ் கொடுக்கும்போது உதடுகளை கொஞ்சம் திறந்துவைத்திருந்தால்போதும். படு கவர்ச்சி கிடைக்கும். ஆண்கள் கிறங்கிப்போவார்கள் என்றார் மார்லின்.

இங்கே மனிஷா, மம்தா ஆகியோரும் மார்லின் சொன்ன வித்தைப்படிதான் போஸ் கொடுக்கிறார்கள்.

## "எதையோ எதிர்பார்த்து இடையூறு செய்கிறார்கள்"

ரோஜா நடித்து தீபாவளிக்கு வரவிருந்த படங்களுக்கு நீதிமன்றம் தடை போட்டது. அதனால் தீபாவளியன்று அப்படங்கள் வெளியாகவில்லை.

ரோஜா வாங்கிய கடனை திருப்பித்தரவில்லை என்று போத்ரா என்பவர் வழக்குத் தொடுத்தார். அந்த வழக்கின்பேரிலேயே தடை போடப்பட்டது.

இதுபற்றி பத்திரிகையாளர் மாநாடு நடத்திய ரோஜா ஒரு கட்டத்தில் கட்டுப்படுத்த முடியாமல் அழுதேவிட்டார்.

"அடுத்தடுத்து தமிழில் மீண்டும் வாய்ப்புக்கள் வந்திருக்கின்றன. மறுபடி முதலிடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறேன். இக்கட்டத்தில் இப்படியொரு வழக்கு என் வளர்ச்சியில் பயங்கர பாதிப்பை ஏற்படுத்தும்.

எதையோ எதிர்பார்த்து எனக்கு தொல்லை தருகிறார்கள். நான் என்ன பாவம் செய்தேன்?" என்று கூறியபடி அழுதேவிட்டார்.

'அதிரடிப்படை' படத்தை தெலுங்கில் எடுக்க போத்ராவிடம் கடன் வாங்கினாராம் ரோஜா. 50 இலட்சம் ரூபாய் (இந்திய மதிப்பில்) கடன்பட்டிருக்கிறார். படம் படுதோல்வி கண்டதால் கடனை அடைக்க முடியவில்லை.

பணத்தில் பாதியைத் தந்தால் போதும்... மீதியை வேறு மாதிரியாக கேட்டாராம். அதுதான் விவகாரம். அதனை எண்ணித்தான் ரோஜா அழுது விட்டார்.

போத்ரா பெரும் பணக்காரர். அவரை மிரட்ட வேண்டுமானால் அரசியல்வாதிகளின் உதவி தேவைப்படும். அவர்களது உதவியை நாடினால் பின்னர் அவர்களது எதிர்பார்ப்பை நிறைவேற்ற வேண்டி இருக்குமே. அதனால் உதவி கேட்கவும் தயங்குகிறார்.

## சிவாஜி மறுபடி சுறுசுறுப்பு

'மன்னவரு சின்னவரு' படத்தில் மூன்று விதமான மேக்-அப்போடு நடிக்கிறார் சிவாஜி. நடனமும் ஆடியிருக்கிறார். அர்ஜுனின் தந்தையாக நடிக்கிறார்.

படையப்பா படத்தில் ரஜினிக்கு அப்பா. சகல முன்னணி கதாநாயகர்களும் சிவாஜியுடன் நடிக்க ஆசைப்படுகின்றனர். அதிலும் சிவாஜியின் மகனாக நடிக்கவும் பிரியப்படுகின்றனர்.

ஓய்வுக் காலத்தை குடும்பத்தினருடன் கழித்துவந்த சிவாஜி ஒரு சில படங்களில் மட்டும் கெளரவ வேடங்களில் நடித்து வந்தார். தற்போது மறுபடி தொடர்ச்சியாக நடிக்கத் தொடங்கிவிட்டார்.

ஒரே நேரத்தில் மூன்று படங்கள். 'மன்னவரு சின்னவரு', 'படையப்பா' புதுமுக நாயகன் அஜெய் நடிக்கும் 'பூப்பறிக்க வருகிறோம்' ஆகிய படங்களில் நடிக்கிறார்.

சரத்குமார் நடித்த 'மகாபிரபு' படத்தை இயக்கிய ஏ.வெங்கடேசன் 'பூப்பறிக்க வருகிறோம்' படத்தை இயக்குகிறார். இசை: வித்யாசாகர்.

'படையப்பா' படத்துக்காக ரஜினி மட்டுமன்றி சிவாஜியும் தனது தாடியை தியாகம் செய்திருக்கிறார்.



விஜயகாந்த்-குஷ்பு
படம்: வீரம் வெளைஞ்ச மண்ணு

## ஏன் துணிந்தேன்?

'புதுமைப்பித்தன்' படத்தில் சேலைகளை அவிழ்த்து வீசும் காட்சிகளில் துணிந்து நடித்து தூள் கிளப்பியிருக்கிறார் ப்ரியா ராமன்.

"முதல் ரவுண்டில் அடக்க ஒடுக்கமாக நடித்தேன். தோற்றுப்போனேன். ரஜினிசார் அறிமுகம் செய்தும் என்னால் முன்னுக்கு வர முடியவில்லை. இது இரண்டாவது ரவுண்ட். இதிலும் தோற்றுப்போக விரும்பவில்லை. சில விட்டுக் கொடுப்புக்களுக்கு துணிந்து விட்டேன்!" என்கிறார் ப்ரியா ராமன்.

## துணை

நடிகர் கரணுடன் வியாபாரக் கூட்டாளியாக இருப்பவர் லட்சுமி என்ற பெண். அந்த லட்சுமியை கரண் மணந்து கொண்டாராம்.



"சித்திர விழிகளென்ன மீனோ? மானோ? செவ்விதழ் வடித்ததென்ன பாலோ? தேனோ?"



சத்யராஜ்-மந்த்ரா

மனிஷா கொய்ராலா
படம்: முதல்வன்

## ...விவகாரத்தில் ...குற்றம்!"

...கர்களின் மனதை ...பின்னர் கமலுடன் ...

...டியாக 'முதல்வன்' ...பட்டி.

...ள்ளவே தற்கால ...

...திரிகையாளர்கள். ...வளியிடுவீர்கள். ...றிந்தது எப்படி?

ம: காதல் என்று யார் சொன்னது. நண்பர்களாக இருந்தோம். இப்போது அதிகமாக பார்த்துக் கொள்வதில்லை. அவ்வளவுதான்.

**கே: திருமணமான நடிகர்களுடன் மட்டும்தான் நீங்கள் நட்பாக இருப்பதாக ஒரு பேச்சு இருக்கிறதே?**

ம: அவர்கள்தான் பக்குவம் அறிந்தவர்கள். நான் சொல்வதின் அர்த்தம், அவர்கள் நட்பை, காதல், கல்யாணம் என்று கற்பனை செய்ய மாட்டார்கள். நண்பர்களாக மட்டும் நடந்துகொள்வார்கள்.

**கே: செக்ஸ் பற்றி உங்கள் அபிப்பிராயம்?**

ம: அது அந்தரங்க விஷயம். அதில் வேறு யாரும் ஏன் மூக்கை நீட்டுகிறீர்கள். எதைச் சாப்பிட வேண்டும், எப்போது குளிக்க வேண்டும், எவரோடு படுக்கையில் இருக்க வேண்டும் என்பது அவரவர் சொந்த விவகாரம். இதில் எட்டிப்பார்ப்பது குற்றச் செயல். கிரிமினல் குற்றம் என்று கோபமாக கூறி பேட்டியை முடித்துக் கொண்டார் மனிஷா.

## மினி சினி

* 'சின்னத்தம்பி' படத்தைத் தயாரித்த கே.பாலு தயாரிக்கும் புதிய படத்தில் பிரபு கதாநாயகனாக நடிக்கவுள்ளார். இப்படத்தை மு.களஞ்சியம் இயக்குகிறார்.

* 'சங்கமம்' படத்தின் மூலம் அறிமுகமாகும் விந்தியா, அப்படம் வெளிவரு முன்னரே அஜித்குமார் ஜோடியாக 'ஆனந்தப் பூங்காற்றே' படத்தில் நடிக்கிறார்.

* வினீத்திற்கு தெலுங்கில் நல்ல வரவேற்பு இருப்பதால், வினீத் தமிழில் நடித்த 'மே மாதம்' தெலுங்கில் 'ஹிருதயாஞ்சலி' என்ற பெயரில் மொழி மாற்றப்படுகிறது.

* 'காதல் கவிதை' படத்தை இயக்கி வரும் அகத்தியன், அடுத்து கார்த்திக் நடிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார். 'கோகுலத்தில் சீதை' படத்திற்குப் பின் கார்த்திக்-அகத்தியன் மறுபடி இணையும் படமிது.

* சக்கரவர்த்தி-மீனா இணைந்து நடிக்கும் தெலுங்குப்படமொன்று பெயரிடப்படாமல் வெறும் கேள்விக் குறியோடு (?) வெளியாகப் போகிறதாம்.

* மலையாள சூப்பர் ஸ்டாரினி மஞ்சு வாரியாரும், மலையாளத்தில் முன்னணி வரிசைக் கதாநாயகனாக வந்து கொண்டிருக்கும் திலீப்பும் அண்மையில் திருமணம் செய்துள்ளனர்.

* வஸந்த் இயக்கும் 'பூவெல்லாம் கேட்டுப்பார்' படத்தில் இயக்குநர் ஆர்.வி. உதயகுமார் ஒரே ஒரு காட்சியில் நடிக்கிறார். இயக்குநர் படத்திலும் ராகவே.

* அஜித்குமார்- தேவயாணி-ஹீரா நடிக்கும் 'தொடரும்' படம் வெற்றிகரமாக ஓடிய 'மாவிச்சுகுடு' என்ற தெலுங்குப் படத்தின் தமிழ்ப்பதிப்பு.

* ஒளிப்பதிவாளர் சந்தோஷ் சிவன் இயக்கும் 'மல்லி' படத்தின் மூலம் பிரபல பின்னணிப் பாடகர் அஸ்லம் முஸ்தபா இசையமைப்பாளராக அறிமுகமாகிறார்.

* வெள்ளிவிழா நாயகன் என அழைக்கப்பட்ட நடிகர் ரவிச்சந்திரனின் மகன் அம்சவிர்தன் நடிக்கும் படங்கள் எல்லாம் ஏனோ படப்பூஜையுடன் நின்று விடுகின்றன.

## விஜய்க்காக

எஸ்.ஏ. சந்திரசேகரின் உதவியாளராக இருந்து பெரிய இயக்குநரானவர் பவித்ரன். இடையே ஏற்பட்ட சரிவால் விலாசமே இல்லாமல் இருந்தார். தற்போது விஜய்யை வைத்து படம் எடுக்க திட்டமிட்டிருக்கிறார். விஜய்க்காக கதை தயார் செய்கிறாராம்.


படிப்பகம்

## உயிரை விலையாக்கி உச்சரித்த வார்த்தை

ராசாத்தீ...!
பொழுதெல்லாம் நீ
பிரார்த்தித்துக் கொண்டிருந்த
மரணத்தின்
அழைப்பை ஏற்று
ஆனந்தமாய்ப் போகிறாயா?
–o–
ஆகாயம், பூமி,
எங்கேனும் ஒரு காடு,
கொடிய பாலை நிலம்,
மலைகளின் பள்ளத்தாக்குகள்...
எதிலுமே
உனதுயிர் தங்க
இடமின்றிப் போகிறாயா?
–o–
உனது வாழ்க்கையைப் பிடுங்கி
எரிநெருப்பில் இட்ட– அந்த
இரக்கமில்லாதவனிடமிருந்து
விடுதலையான
ஆன்மாவோடு
ஆகாய வெளியினிலே
அஸ்தமனமாகிறாயா?
–o–
மரணத்தின் பிடிக்குள்ளே
போராடிக் கொண்டிருந்த
கடைசி இராத்திரியில்–
கண் வழியே
கண்ணீர் வழிந்தோட
கட்டில் சட்டங்களை
இறுகப் பற்றியிருந்த ராசாத்தீ...!
உனது உயிர் பிரிந்த
வலியின் கொடுமை
பயங்கரமானதோ?
–o–
அந்த இறுதி வேளையில்
யன்னலுக்கு வெளியே
நட்சத்திரக் கூட்டங்களிடையே
யாரையோ பார்த்திருந்தாயே!
நீ தேடித் தோற்றமுகம்
உனதுயிருக்கு நிம்மதியைத்
தந்ததா ராசாத்தி?
–o–
உறவுகள் கதறியழ
இறுதியாக எதையோ
உச்சரிக்க முயன்று
உயிரை உதிர்த்த ராசாத்தீ...!
உயிரை விலையாக்கி நீ
உச்சரிக்க முனைந்த
அந்த வார்த்தைதான்
காதலா?

பஹீமா ஜஹான்,
அட்டாளைச்சேனை.

## புதிரான தொடக்கம்

மணிகாட்டும் முள்ளின்
இயந்திரத் தனமான
நகர்ச்சியால்
என் வாழ்வும்
நகர்கிறது!
•••
சுற்றுகின்ற மின்விசிறி
வெம்மையற்ற தன்மையை
மனதிலும்; உடலிலும்
பேண உதவும் தற்காலிகமாக
•••
கடிகாரச் சத்தமோ
மின்விசிறி சத்தமோ
தொடர்ச்சியான உபாதை
தருவது எமக்கு
சில நிமிடம்தான்!
•••
என் வாழ்வும்
இவை போல்தான்!
•••
வீட்டை விட்டு
வீதியில் இறங்குகையில்
மீள்வோம் என்றுதான்
எண்ணத் தோன்றும்!
•••
அடையாளம் இல்லாத
வாகனங்களை
காணும் வரையும்
மீளும் நம்பிக்கை...
•••
கதவைப் பூட்டியபின்
இருமுறைக்கு பலமுறை
இழுத்துப் பார்ப்பது
நோயின் அறிகுறி!
என்கின்ற என்
சகோதர மொழி
நண்பா!
•••
என் வீட்டில்
குண்டுகள் முளைப்பதை
தடுக்க
வேறென்ன செய்ய
முடியும் என்னால்?

சுபா வரன்–கொழும்பு.

# மக்களே எதிரிகள்



↑ வியட்நாமில் அமெரிக்க டாங்கிகள் ரோந்து சென்ற காட்சி. குடியிருப்புக்கள் மத்தியில் டாங்கிகளைப் பயன்படுத்துவது கொடுமை. குடியிருப்புக்கள் நாசமாகும்! மனித உடல்கள் டாங்கிகளால் நசுக்கப்படும்! வியட்நாம் மக்களை தங்கள் எதிரிகளாகக் கருதிய அமெரிக்கப் படைகளுக்கு நகரங்களையும், மனிதர்களையும் அழிப்பது பொழுது போக்காக இருந்தது.

## தாமதிக்க முடியாமல்...

நான்
உறங்க நினைக்கிறேன்;
முடியவில்லை.
உறங்கினாலும்
விழித்துக் கிடக்கும்
உன் ஞாபகங்கள்
என்னைத்
துணைக் கெழுப்பும்!
**
நான்
நடந்து கொண்டிருக்கிறேன்.
உன் பாதங்கள்
படிந்திருக்குமோ–
என்ற ஒரே ஆசையோடு
அலைந்து கொண்டிருக்கிறேன்!
**
அடிக்கடி–உன்
முகத்தின்
முகவரிகளை
அசை போட்டுக்கொள்கிறேன்.
**
என்
மெல்லிய மனதை
நீ
மிக அவதானமாக
கையாளுவது போல,
உன்
இதமான இதயத்தை
சற்று நீவிவிட
தாமதிக்க முடியாமல்
ஆசைப்படுகிறேன்!

தமிழ்ப்பிரியா– மட்டக்களப்பு.

## யௌவனப்பருவமும் பின்னொரு சோகமும்

இறக்கை கட்டிக் கொண்ட
யௌவனப் பருவம்;
இன்னும் தான் நினைவுக்கு
வருகிறது.
யார் சுட்ட நெருப்பு இது...?
இன்னும் ஆறவில்லை.
•
உன் சுவாசக் காற்றால்
என் இருதயத்தை நிரப்பி
மகிழ்ந்த காலங்கள்....
அது ஒரு முன்பனிக்காலம்!
•
நுனிப்புல் சிதற
ஒரு வயல் வெளியில்
கை கோர்த்து சில்லிட்ட
ஸ்பரிஷங்களின் காலைப்பொழுது!
•
அடங்க மறுத்த வேட்கையின்
ஒரு கணமேனும்
அர்த்தமுள்ளதுதான்.
என் கை தொட்டு
அன் பொழுகிய தாயினும்
என் இதழ் தொட்டு
உணவிட்ட தாயினும்
நினைவகலாதவைகள் தானே?
•
பின்னரேன்தான் ஒரு
சுட்டெரிக்கும்

## தேன்கிண்ணம்

வெயில் காலத்தில் புகுத்தினோம்
உயிரை?
உக்கிரமான 'ஷெல்' அடியிலும்
ஒன்றாய்த் தானே...
அகதியாயும் ஒன்றாய்த் தானே...!
எவன் வந்து எங்களுக்குள்
பிரிவை எழுதினான்?
உயிர் சிதறினும் இன்னும்
மரணம் வரினும் பிரியோம்
என்றனம்?
சந்தேகம் கொண்டா பிரிந்தோம்?
•

உன் சுவாசக் காற்றால்
என் இருதயத்தை நிரப்பி
மகிழ்ந்த காலங்களை
இன்னும் அழிக்க முடியவில்லையே!

ஹீரா அனஸ், இலண்டன்.

## யார் இவர்?







சின்ன ரோஜாவாகவும், கம்பீர இளைஞராகவும் காட்சிதரும் இவர் யார் தெரிகிறதா? 'ரோஜாவின் ராஜா' என்றும் புகழப்பட்டவர். அயல்நாட்டில் பெரும் பதவியில் இருந்தவர். இங்கும் இவர் புகழ் இப்போதும் மணந்து கொண்டிருக்கிறது. என்ன, கண்டுபிடித்து விட்டீர்களா? விடையைச் சரிபார்க்க 18ம் பக்கம்.

## இந்த வாரம் உங்கள் பலன்

(29.11.1998 தொடக்கம் 05.12.1998 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

துலாம் — சூரியன்.
விருட்சிகம் — புதன், சுக்கிரன்.
கும்பம் — குரு, (வக்ரம்), கேது.
சிம்மம் — ராகு.
கன்னி — செவ்வாய்.
மீனம் — சனி.

சந்திரன்– கும்பம், மீனம், மேடம், இடபம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு– பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும். | பிப. | 3 மணி |
| திங்கள்– அந்நியர் பகை, வீண் தொல்லை. | பகல் | 12 மணி |
| செவ்வாய்– பலவித பேறு, காரிய சித்தி. | பிப. | 2 மணி |
| புதன்– தொழில் கஷ்டம், குடும்ப பிரிவு. | பிப. | 4 மணி |
| வியாழன்– முயற்சி பலிதம், பொருள் வரவு. | மு.ப. | 10 மணி |
| வெள்ளி– தொழில் விருத்தி, அந்நியர் உதவி. | பிப. | 2 மணி |
| சனி– முயற்சி மேன்மை, தொழில் சிறப்பு. | பகல் | 11 மணி |

அதிஷ்டநாள்–புதன், அதிஷ்ட இலக்கம்–4

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு– மனக் கலக்கம், தேகசுகம் பாதிப்பு. | பிப. | 4 மணி |
| திங்கள்– உறவினர் நன்மை, பணக் கஷ்டம். | பகல் | 12 மணி |
| செவ்வாய்– வீண் தொல்லை நீங்கும், முயற்சி மேன்மை | பிப. | 3 மணி |
| புதன்– கடன் தொல்லை, மனக் கவலை. | பிப. | 3 மணி |
| வியாழன்– உயர்ந்த நிலை, கௌரவம். | பகல் | 12 மணி |
| வெள்ளி– பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பிப. | 1 மணி |
| சனி– அந்நியர் பகை, வீண் கஷ்டம். | மு.ப. | 9 மணி |

அதிஷ்டநாள்– செவ்வாய், அதிஷ்ட இலக்கம்–3

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு– வெளியிட வாழ்க்கை, முயற்சி மேன்மை. | பிப. | 1 மணி |
| திங்கள்– தொழிலில் பிரச்சனை, மனக் கலக்கம். | பிப. | 2 மணி |
| செவ்வாய்– மனக்குறை நீங்கும், கௌரவ மிகுதி. | பகல் | 12 மணி |
| புதன்– தொழில் சிறப்பு, பண வரவு. | பிப. | 3 மணி |
| வியாழன்– காரிய சித்தி, கடன் தொல்லை நீங்கும். | பிப. | 2 மணி |
| வெள்ளி– பயனுள்ள செயல், பொருள் வரவு. | பிப. | 1 மணி |
| சனி– பெரியோர் பகை, காரியத்தடை. | மு.ப. | 10 மணி |

அதிஷ்டநாள்– வியாழன், அதிஷ்ட இலக்கம்–4

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு– இனசன நன்மை, பொருள் வரவு. | பிப. | 2 மணி |
| திங்கள்– உறவினர் உதவி, தொழில் விருத்தி. | பகல். | 12 மணி |
| செவ்வாய்– அந்நியர் சகவாசம், காரியானுகூலம். | பிப. | 1 மணி |
| புதன்– தொழில் கஷ்டம், பண நெருக்கடி. | பகல் | 12 மணி |
| வியாழன்– பொருள் பேறு, குடும்ப சுகம். | பிப. | 1 மணி |
| வெள்ளி– துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | பிப. | 3 மணி |
| சனி– தொழில் விருத்தி, செலவு மிகுதி. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்–வியாழன், அதிஷ்ட இலக்கம்–4

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு– முயற்சி மேன்மை, மன மகிழ்ச்சி. | பிப. | 11 மணி |
| திங்கள்–தொழில் பலிதம் பொருள் வரவு. | மு.ப. | 10 மணி |
| செவ்வாய்– வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் | 12 மணி |
| புதன்–இனசன நன்மை, கௌரவம். | பிப. | 2 மணி |
| வியாழன்– மன மகிழ்ச்சி, காரியானுகூலம். | மு.ப. | 10 மணி |
| வெள்ளி– வீண்குறை கேட்டல், தொழில் மந்தம். | பிப. | 1 மணி |
| சனி– தொழில் சிறப்பு, காரியசித்தி. | காலை | 7 மணி |

அதிஷ்டநாள்–திங்கள், அதிஷ்ட இலக்கம்–7

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு– பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பிப. | 2 மணி |
| திங்கள்– கடன் தொல்லை நீங்கும், உறவினர் உதவி. | பகல் | 12 மணி |
| செவ்வாய்– தொழில் கஷ்டம் தீரும், மனக் கலக்கம். | பிப. | 3 மணி |
| புதன்– அந்நியர் சகவாசம், காரியானுகூலம். | பிப. | 1 மணி |
| வியாழன்– இனசன நன்மை, பொருள் பேறு. | பகல் | 12 மணி |
| வெள்ளி– வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | மு.ப. | 10 மணி |
| சனி– தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்–புதன், அதிஷ்ட இலக்கம்–5

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு– பிரயாண மிகுதி, செலவதிகம். | பிப. | 3 மணி |
| திங்கள்– அந்நியர் சகவாசம், கௌரவக் குறைவு. | பகல் | 12 மணி |
| செவ்வாய்– பயனற்ற செயல், மனக் கலக்கம். | பிப. | 1 மணி |
| புதன்– தொழில் மந்தம், பிரயாணமிகுதி. | பகல் | 12 மணி |
| வியாழன்– மறைமுக எதிர்ப்பு, காரிய சித்தி. | மு.ப. | 9 மணி |
| வெள்ளி– புதிய முயற்சி, பொருள் வரவு. | பிப. | 2 மணி |
| சனி– துயர் நீங்கும், முயற்சி பலிதம். | | மணி |

அதிஷ்டநாள்–திங்கள், அதிஷ்ட இலக்கம்–7

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு– வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | பிப. | 2 மணி |
| திங்கள்– இனசன நன்மை, பயனுள்ள செயல். | மு.ப. | 10 மணி |
| செவ்வாய்– தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பிப. | 3 மணி |
| புதன்– காரிய சித்தி, பொருள் வரவு. | பிப. | 2 மணி |
| வியாழன்– தொழில் மந்தம், வீண் முயற்சி. | பகல் | 12 மணி |
| வெள்ளி– அந்நியர் சகவாசம், காரியக்கேடு. | பிப. | 4 மணி |
| சனி– உறவினர் உதவி, பொருள் வரவு. | மு.ப. | 10 மணி |

அதிஷ்டநாள்–செவ்வாய், அதிஷ்ட இலக்கம்–4

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு– வீண் மனஸ்தாபம், பொருள் பேறு. | பிப. | 3 மணி |
| திங்கள்– அந்நியர் சகவாசம், மனக் கலக்கம். | பிப. | 1 மணி |
| செவ்வாய்– உயர்ந்த எண்ணம், காரியானுகூலம். | பிப. | 3 மணி |
| புதன்– தொழில் சிறப்பு, இனசன நன்மை. | மு.ப. | 9 மணி |
| வியாழன்– பயனுள்ள செயல், மன மகிழ்ச்சி. | பிப. | 2 மணி |
| வெள்ளி– உறவினர் பகை, பணக் கஷ்டம். | பிப. | 1 மணி |
| சனி– செலவு மிகுதி, பிரயாண மிகுதி. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்–செவ்வாய், அதிஷ்ட இலக்கம்–8

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு– மன மகிழ்ச்சி, பெரியோர் உதவி. | பகல் | 12 மணி |
| திங்கள்– உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | பி.மு. | 1 மணி |
| செவ்வாய்– தொழில் மந்தம், மனக் கலக்கம். | பிப. | 2 மணி |
| புதன்– கௌரவ மிகுதி, மனப் போராட்டம். | பிப. | 3 மணி |
| வியாழன்– அந்நியர் சகவாசம், பொருள் நஷ்டம். | பகல் | 12 மணி |
| வெள்ளி– இனசன நன்மை, வீண்குறை கேட்டல். | பிப. | 1 மணி |
| சனி– பொருள்பேறு, முயற்சி மேன்மை. | பிப. | 2 மணி |

அதிஷ்டநாள்–திங்கள், அதிஷ்ட இலக்கம்–1

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு– முயற்சி மேன்மை, பணக் கஷ்டம். | பிப. | 2 மணி |
| திங்கள்– பலவித பேறு, உயர்ந்த நிலை. | மு.ப. | 10 மணி |
| செவ்வாய்– தொழில் நன்மை, பண வரவு. | பிப. | 3 மணி |
| புதன்– கடன் தொல்லை நீங்கும், காரியானுகூலம். | பகல் | 12 மணி |
| வியாழன்– வெளியிட வாழ்க்கை, இனசன நன்மை. | பிப. | 2 மணி |
| வெள்ளி– பெரியோர் மகிழ்ச்சி, உறவினர் உதவி. | பிப. | 3 மணி |
| சனி– காரிய சித்தி, செலவு மிகுதி. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்–வெள்ளி, அதிஷ்ட இலக்கம்–6

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு– பணக் கஷ்டம், செலவு அதிகம். | பிப. | 2 மணி |
| திங்கள்– மனக் கலக்கம், தொழில் மந்தம். | பிப. | 4 மணி |
| செவ்வாய்– பெரியோர் உதவி, காரியானுகூலம். | பிப. | 1 மணி |
| புதன்– வீண் மனஸ்தாபம், அந்நியர் பகை. | மு.ப. | 10 மணி |
| வியாழன்– இனசன நன்மை, மனக்குறைநீங்கும். | பிப. | 3 மணி |
| வெள்ளி– தொழில் மந்தம், பயனுள்ள செயல். | பிப. | 1 மணி |
| சனி– முயற்சி பலிதம், பண வரவு. | மு.ப. | 10 மணி |

அதிஷ்டநாள்–திங்கள், அதிஷ்ட இலக்கம்–7

# லேடீஸ் ஸ்பெஷல்

## கர்ப்பகால சத்துணவு

பெண்கள் கர்ப்ப காலத்தில் உண்ணும் உணவுகள் முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும். அப்போது வயிற்றில் இருக்கும் சிசுவுக்கும் சேர்த்து இரண்டு பேருக்குரிய உணவுகள் உண்ண வேண்டும் என்பதை விட, சத்துணவு உண்ண வேண்டும் என்பதே முக்கியம்.



குறிப்பாக சிசுவின் வளர்ச்சி, ஆரோக்கியம், அழகுக்கு ஏற்ற விதத்தில் தாய் உண்ணும் உணவு அமைந்திருக்க வேண்டும்.

❀ இரும்பு, கல்சியம், புரதம் போன்றவை உடல் வளர்ச்சிக்கு ஏற்றது. பால் மற்றும் பாற்பொருட்களில் இச்சத்துக்கள் அதிகம் உள்ளன.

❀ முட்டை, பயறு வகைகள், கோதுமை, அரிசி போன்றவைகளில் புரதம் உள்ளது.

❀ இரும்புச் சத்தைப் பெறுவதற்கு கீரை, மீன் வகைகளை உண்ண வேண்டும்.

❀ தானியம், காய்கறி அடங்கிய முழுமையான உணவு தேவை. இட்லி, தோசை, சட்னி போன்றவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

❀ முளைவிட்ட பயறு வகைகள் மிக நல்லது.

❀ எண்ணெயில் பொரித்த உணவு வகைகளைத் தவிர்ப்பது நல்லது.

❀ ஒரேஞ்ச், வாழை, திராட்சை, மாம்பழம், அன்னாசி போன்ற பழவகைகள் உடலுக்கு ஏற்றவை.

❀ செயற்கைக் குளிர்பானங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். இனிப்பு வகைகளை அதிகமாக உண்ண வேண்டாம்.

❀ தேனீர், கோப்பி, வாசனை உணவுகளைக் குறைப்பது அல்லது தவிர்ப்பது சிறந்தது.

❀ உப்பைக் குறைந்தளவில் பயன்படுத்துங்கள். ●

## கண்ணே கண்ணே



கண் அழகைப் பாதுகாத்திட என்ன செய்யலாம்?

✳ குளிர்ந்த நீரில் கண்களை அடிக்கடி கழுவுங்கள்.

✳ விட்டமின் 'பி' நிறைந்துள்ள காய்கறி வகைகளைச் சாப்பிட வேண்டும்.

✳ பஞ்சை நீரில் நனைத்து, மூடிய கண்களின் மேல்பகுதியில் வைத்துக் கண்களைக் குளிர்விக்கலாம்.

✳ வெள்ளரிக்காயை வட்டமாக வெட்டி கண்களில் வைத்திருந்தால், கண்ணைச் சுற்றியிருக்கும் கருவளையம் நீங்கும். தினமும் 15 நிமிடமளவு 2 வாரங்கள் தொடர்ந்து இவ்வாறு செய்தால் கண்களுக்கு வசீகரம் கிடைக்கும்.

✳ உருளைக்கிழங்கை அவித்து ஆற வைத்து, அதனைப் பிசைந்து இரண்டு துணிகளில் சுற்றி இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு அதன் மேல் வையுங்கள். தொடர்ந்து 2 வாரங்கள் இப்படிச் செய்தால் கண்களுக்கு ஆரோக்கியம் கிடைக்கும்.

✳ கால் தேக்கரண்டி போரிக் பவுடரை லேசான சுடுநீரில் கலக்கி, கண்களைக் கழுவினால் கண்சோர்வு நீங்கும். ●

## பேப்பரும் உதவும்

பழைய பேப்பர்களும் பல்வேறு விதங்களில் பயன்படுகின்றன. எப்படி என்கிறீர்களா? இதைப்படியுங்கள் முதலில்.



● சப்பாத்து, மழைநீரில் நன்றாக நனைந்து, சப்பாத்தின் உள்ளேயும் மழைநீர் போய்விட்டால், சப்பாத்தின் உள்ளே நிறைய பழைய பேப்பர்களைத் திணித்து, வெளியேயும் சப்பாத்தைச் சுற்றிப் பொதித்து வைத்து விடுங்கள். ஈரத்தை பேப்பர் உறிஞ்சி எடுத்துவிடும்.

● சப்பாத்துக்களில் இருந்து துர்வாடை வீசினாலும் மேற்கண்டவாறு செய்யுங்கள். துர்வாடை நீங்கி விடும்.

● அடைத்து வைத்துப் பாவிக்கும் பிளாஸ்டிக் பாத்திரங்களில் கெட்ட வாடை வீசினால், பழைய பேப்பரை உள்ளே போட்டு இரண்டு நாட்கள் மூடி வைத்து விடுங்கள் கெட்ட வாடை நீங்கிவிடும். இதற்கு வர்ணப்பேப்பர்களையோ, வர்ணப்படங்கள் நிறைந்த பேப்பர்களையோ பயன் படுத்தக் கூடாது.

● முகம் பார்க்கும் கண்ணாடி அழுக்காக இருந்தால், அதில் சிறிதளவு தண்ணீர் தெளித்துவிட்டு, பேப்பரால் துடைத்து விடுங்கள். கண்ணாடி பளிச்சென்றிருக்கும்.

● அதிக நாட்கள் பாவிக்காமல் இருக்கும் சூட்கேஸை மீண்டும் பாவிக்க எடுப்பதற்கு முன், அதற்குள் நிறைய பழைய பேப்பர் களை குப்பை போலாக்கி நிறைத்து வைத்து விடுங்கள். அழுக்குகள் பேப்பரில் ஒட்டிக் கொள்ளும். ●


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** EU

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

தொழில்:..............................

கையொப்பம்:..............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 05-12-1998**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள் 63

புவனா

ஜேம்ஸ் ஹெவிற்றின் காதலி அன்னா, ஹெவிற்றின் டயரிக்குள் கிடந்த கடிதங்களைப் பார்க்கிறார். அவை டயானா ஹெவிற்றுக்கு எழுதிய கடிதங்கள் என்பது தெரிந்துவிடுகிறது.

அச்சமயம் தூக்கம் கலைந்து கட்டிலில் புரண்டான் ஹெவிற். கைகளை வீசி கட்டிலில் அன்னாவைத் தேடினான்.

ஹெவிற்றின் தூக்கம் கலைந்து விட்டதைக் கண்டதும் டயறியை மூடி வைத்துவிட்டு, கட்டிலை நெருங்கி "இங்கிருக்கிறேன்!" என்றாள்.

ஹெவிற் அவள் கையைப் பற்றி இழுத்து தன்மேல் போட்டுக் கொண்டு; கால்களை சங்கிலிபோல் கோர்த்து அவளை இறுக்கிக் கொண்டான்.

ஹெவிற்றின் இஷ்டப்படி இணங்கிக் கொண்டிருந்த அன்னாவின் மனதை அக்கடிதங்கள் ஆக்கிரமித்திருந்தன.

மறுநாளே தன் சகோதரியிடம் கலந்தாலோசித்தாள். "ஒவ்வொரு கடிதமும் ஏராளம் பணம் தரும். ஹெவிற் டயானாவுக்கு துரோகம் செய்கிறான். நாம் அவனுக்கு துரோகம் செய்தால் என்ன?" என்றாள் அன்னா.

"தப்பே இல்லை! பெரிய பத்திரிகையாகப் பார்த்து பேரம் பேசலாம்." என்றாள் சகோதரி.

அன்றிரவும் அன்னா தானாகவே ஹெவிற்றின் அறைக்குச் சென்றாள்.

அன்று வழக்கத்துக்கு மாறாக அன்னா ஹெவிற்றை பாடாய்படுத்தினாள். ஹெவிற்றுக்கு எல்லாம் முடிந்ததும் களைப்பாக இருந்தது. அசதியில் அப்படியே தூங்கிப்போனான்.

அதைத்தான் அன்னா எதிர்பார்த்தாள். அவனை களைப்படையச் செய்வதற்காகவே அவள் தன்னால் முடிந்தமட்டும் அவனை சந்தோசப்படுத்தினாள்.

ஆனால், அன்னாவுக்கு ஏமாற்றம் காத்திருந்தது. டயறிக்குள். கடிதங்களைச் காணவில்லை.

தேடிப்பார்க்கலாம். ஹெவிற் விழித்துக் கொண்டால் சந்தேகப்படுவான் என்று நினைத்து, தன் அறைக்குச் சென்றுவிட்டாள். கடிதங்களைக் கைப்பற்ற சுலபமான வழி ஒன்று அவள் மனதில் தோன்றிவிட்டது.

மறுநாள் ஹெவிற் வெளியே சென்ற பின்னர், அன்னாவும், அவள் சகோதரியும் ஹெவிற்றின் அறைக்குச் சென்றனர்.

அறை மூடியிருந்தது. சாவியைக் கேட்டாள் அன்னா. பணிப்பெண்தான் இருந்தாள்.

அன்னாவும், ஹெவிற்றும் கட்டிப்புரள்வதை பலமுறை கண்டிருக்கிறாள் அவள். ஆகவே சந்தேகப்படாமல் சாவியைக் கொடுத்தாள்.

அன்னாவும், அவள் சகோதரியும் அறைக்குள் சல்லடை போட்டுத் தேடினார்கள்.

அவர்களுக்கு அதிஷ்டம் இருந்தது. கடிதங்கள் கையில் கிடைத்தன. அன்னா மகிழ்ச்சியில் தன் சகோதரியை கட்டியணைத்துக் கொண்டாள்.

### விற்பனை

கடிதங்களுடன் அன்னாவும், அவளது சகோதரியும் 'மிரர்' பத்திரிகை அலுவலகத்திற்கு சென்றனர்.

சில கடிதங்களை நிருபர்கள் வாசித்துப் பார்க்கக் கொடுத்தாள். எல்லாமே காதல் ரசம் சொட்டும் கடிதங்கள்.

"மேலும் பல சுவையான கடிதங்கள் உள்ளன. இவற்றுக்கு கணிசமான பணம் தந்தால் அக் கடிதங்களையும் உங்களுக்கே தந்து விடுகிறேன்!" என்று கூறினாள்.

'மிரர்' பத்திரிகை நிறுவனத்தினருக்கு சந்தேகம். ஹெவிற்றுடன் அன்னாவுக்கு நெருக்கம் உண்டா, என்று அறிய விரும்பினார்கள்.

ஹெவிற்றுடன் தொலைபேசியில் அன்னாவைத் தொடர்பு கொள்ளச் சொல்லிவிட்டு, அந்த உரையாடலைப் பதிவு செய்தனர்.

அன்னா எதற்காக போன் செய்கிறாள் என்பது தெரியாமல். காதலோடு உரையாடினார் ஹெவிற்.

"இன்றிரவு என்ன ஸ்பெஷல்?" என்று கேட்டான் ஹெவிற்.

"நீங்கள் சுத்த மோசம்!" என்றாள் அன்னா.

மிரர் பத்திரிகை நிர்வாகத்திற்கு திருப்தி ஏற்பட்டது. பெரும் தொகையான பணம் கைமாறியது கடிதங்களை ஒப்படைத்தாள் அன்னா.



அன்னா

### நாடகம்

'மிரர்' பத்திரிகை நிர்வாகம் அக்கடிதங்களை பத்திரிகையில் வெளியிடாமல், வேறொரு காரியம் செய்தது.

கடிதங்களை அரச குடும்பத்திடம் ஒப்படைக்க முன்வந்தது. "அரச குடும்ப இரகசியங்கள் அம்பலமாகக்கூடாது," என்று தாம் விரும்புவதாகக் கூறினார்கள்.

அதுவே பரபரப்பான செய்தியாகியது. அன்னாவை பேட்டி எடுத்தும் வெளியிட்டனர்.

"ஹெவிற்தான் நல்ல விலைக்கு விற்றுத் தரும்படி கடிதங்களை என்னிடம் தந்தார். அவர் டயானாவை காதலித்ததே கிடையாது," என்று கூறியிருந்தாள் அன்னா.

'மிரர்' பத்திரிகையில் வெளியான செய்திகளைப் பார்த்ததும் உச்சியில் இடி விழுந்தது போலாகிவிட்டது ஹெவிற்றுக்கு.

ஓடிப்போய் தான் வைத்த இடங்களில் கடிதங்களைத் தேடினார். எல்லாம் போய் விட்டது.

அன்னா துரோகம் செய்து விட்டாள். திட்டமிட்ட கச்சிதமான துரோகம். ஹெவிற்றுக்கு பொறுக்க முடியவில்லை.



ஜேம்ஸ் ஹெவிற்

அத்தனையும் மாசு மறுவற்ற பொய்கள். அல்பேட்டா என்னும் பெருடைய ஆடை வடிவமைப்பாளர் இப்போதும் உயிருடன்தான் இருக்கிறார்.

அவருக்கும் இந்த அன்னாவுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. பொய் கூறி என்னோடு பழகியிருக்கிறாள். வஞ்சித்துவிட்டாள்!" என்று

## நம்பிக்கைத் துரோகம்



பத்திரிகையாளர்கள் ஹெவிற்றை தொடர்பு கொண்டனர். அவனது வீட்டுத் தொலைபேசி ஓயாமல் அலறியது.

"அவளை பரிபூரணமாக நம்பி நான் ஏமாந்து போனேன். எனக்கு அவள் மீது சந்தேகமாக இருக்கிறது. பத்திரிகையாளர்கள்தான் அவளை என்னோடு பழக வைத்து கழுத்தறுத்து விட்டனர்!" என்றார் ஹெவிற்.

"அவளுடைய கடந்த கால வாழ்க்கையைப் பற்றி நான் ஆராயவில்லை. அவள் அழகில் மயங்கிவிட்டேன். அவளையே மணம் முடிக்கவும் நினைத்திருந்தேன்.

இத்தாலியைச் சேர்ந்த காலம் சென்ற கோடீஸ்வரரான அல்பேட்டோ என்பவரது விதவை என்று தன்னை அறிமுகம் செய்து கொண்டாள். தனது முன்னாள் கணவர் ஆடை வடிவமைப்பாளர் என்றும் அவள் கூறினாள்.

தன் மன ஆதங்கம் அனைத்தையும் கொட்டித் தீர்த்தார் ஹெவிற்.

### டயானா மகிழ்ச்சி

ஹெவிற்றின் புலம்பல் உட்பட சகல விவரங்களையும் பத்திரிகைகள் வாயிலாக அறிந்தார் டயானா.

'அன்னாவும் ஹெவிற்றும் சேர்ந்து நடிக்கிறார்கள். தன்னை நல்லவன்போல காட்டுகிறான் ஹெவிற்!' என்று முதலில் சந்தேகப் பட்டார் டயானா.

பின்னர் சந்தேகம் ஓரளவு தீர்ந்த நிலையில்; "பாவத்தின் சம்பளம் அவனுக்கு கிடைத்து வருகிறது. என் நம்பிக்கைக்கு அவன் துரோகம் செய்தான். அவன் இப்போது துரோகத்தின் விளைவையும், வலியையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறான்!" என்று தன் சிநேகிதியிடம் கூறிச் சந்தோசப்பட்டார் டயானா.

அன்னாவிடம் ஸ்கொத்லாண்ட் பொலிசார் விசாரணை நடத்தினார்கள்.

அவள் ஒரு பண ஆசை கொண்ட பெண் என்பது தெரியவந்தது.

பிரபலமான புள்ளிகளை கட்டிலில் மயக்கி பணம் கறப்பதில் கைதேர்ந்தவள் என்பதற்கு பல ஆதாரங்கள் கிடைத்தன.

ஹெவிற்றுக்கு ஏற்ற ஜோடிதான். ஹெவிற் பெண்களை ஏமாற்றினான். அவன் ஆண்களை ஏமாற்றும் ஒருத்தியிடம் மாட்டிக்கொண்டான்.

**(அடுத்த வாரமும் வரும்)**


**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**
**திருகோணமலை வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி


இவர்தான் **லூயிஸ் சில்வியா,**
3ம் வட்டாரம், நிலாவெளி, திருகோணமலை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.




படிப்பகம்





கூட்டத்திற் கூடிநின்று
கூவிப் பிதற்ற லன்றி,
நாட்டத்திற் கொள்ளா ரடீ!
-கிளியே!
நாளில் மறப்பா ரடீ!
-சுப்பிரமணிய பாரதியார்.

# வாழ்க்கையில் வெற்றிபெற...

## பாப்பா முரசு சிறுகதை

முன்னொரு காலத்தில் ஓர் ஆற்றங்கரையில் முனிவர், தன்னை நாடிவந்த மாணவர்களுக்கு கல்விபோதித்து வந்தார். அவர் கல்விமாத்திரமன்றி வாழ்க்கைக்குப் பயன்படும் பலவித தொழில்களையும் கலைகளையும் கற்றுக்கொடுத்து வந்தார்.

ஒருநாள் முனிவர் மாணவர்களுக்கு நீச்சல் கற்றுக்கொடுத்தார்.

"மாணவர்களே! நீந்துவது மிகவும் கடினமான வேலை. நீங்கள் முதலில் தண்ணீரில் மிதக்கும் பொருள் ஒன்றின் உதவியுடன் நீந்திப் பழக வேண்டும். அல்லது நன்றாக நீந்தத் தெரிந்தவர்கள் யாராவது ஒருவரின் உதவியுடன்தான் ஆற்றில் இறங்க வேண்டும்!" என்று அறிவுறுத்தினார்.

மறுநாள் முனிவர் தனது குடிலில் இருந்த போது "ஐயோ...ஐயோ.... என்னைக் காப்பாற்றுங்கள்...." என்று ஆற்றுப் பக்கமிருந்து கூக்குரல் கேட்டது.

முனிவர் ஓடிச்சென்று ஆற்றைப் பார்த்தார். மாணவர்களில் ஒருவன் ஆற்று நீரில் தத்தளித்துக் கொண்டிருந்தான்.

முனிவர் ஆற்றில் இறங்கி அவனைக் காப்பாற்றிக் கரைக்குக்கொண்டு வந்தார். கரைக்கு வந்ததும் அவனிடம்,

"நீ ஏன் ஆற்றில் இறங்கினாய்? உனக்குத் தான் நீந்தத் தெரியாதே?" என்று கேட்டார்.

"ஐயா! நேற்று எனக்கு நீந்தக் கற்றுக் கொடுத்தீர்கள், இனி நானாக நீந்தவேண்டும் என நினைத்து ஆற்றில் குதித்தேன்," என்றான் மாணவன்.

"நீ நீந்திப் பழக நன்கு நீச்சல் தெரிந்த ஒருவரைத் துணைக்கு வைத்திருந்திருக்கலாமல்லவா? உன்கூடப் படிக்கும் குமரனுக்கு நன்றாக நீந்தத் தெரியும். நீ அவனைத் துணைக்கு அழைத்து வந்திருக்கலாம் அல்லவா?" என்று கேட்டார் முனிவர்.



அதற்கு அந்த மாணவன் முனிவரிடம்,


"ஐயா! குமரன் என் கூடப்படிப்பவன். அவனிடம் நீச்சலைக் கற்றுக் கொள்ள எனக்கு வெட்கமாக இருந்தது. அதனால் தான் அவன் உதவியை நாடவில்லை," என்று சொன்னான்.

இதைக் கேட்டுச் சிரித்த முனிவர் அவனைப் பார்த்து,


"ஒருவர் வாழ்க்கையில் வெற்றி பெறவேண்டுமானால், மற்றவர்களின் ஆலோசனைகளையோ, அவர்களின் உதவிகளையோ பெறுவதில் கேவலமில்லை. தெரியாத ஒரு விஷயத்தைத் தெரிந்தவர்களிடமிருந்து கற்றுக் கொள்ள நாம் ஒருபோதும் வெட்கப்படக்கூடாது!" என்று சொன்னார்.

முனிவர் கூறியது மிகவும் சரியாகப்பட்டது அந்த மாணவனுக்கு.

# அதிசயம் – ஆனால் உண்மை!



← நாடாப்புழு என்னும் ஒரு வகைப்புழு தனது உடலையே உணவாக்கிக் கொள்ளும். எப்படி? இதற்கு உணவு கிடைக்காத சமயத்தில் தமது உடலைச் சாப்பிடும். போதிய உணவு கிடைத்ததும் மறுபடி அவை வளரும்.



↑ முதலைகளின் பல்லிடுக்குகளில் சிக்கியிருக்கும் இறைச்சித் துண்டுகளை, முதலைகள் எப்படிச் சுத்தப் படுத்துகின்றன தெரியுமா? முதலைகள் வாயைத் திறந்து வைத்திருக்கும் போது, புளோவர் எனப்படும் பறவை வந்து முதலைகளின் வாய்க்குள்ளிருந்து எடுத்து அவைகளைத் தானே உன்பதன் மூலம் சுத்தப் படுத்துகிறது.



← இங்கிலாந்தைச் சேர்ந்த கேத்தரின் என்ற 74 வயதுப் பெண்மணி தன் வீட்டையும், பிற சொத்துக்களையும், தான் பிரியமாய் வளர்த்து வந்த 5 பூனைகளுக்கும், ஒரு நாய்க்கும் எழுதி வைத்தார்.



← சிறுத்தைகளின் பார்வை சக்தி மிகவும் கூர்மையானது. இவை மங்கலான அரையிருட்டில்கூட 100 அடிக்கப்பால் வரும் நபரைக் கண்டு கொள்ளும்.

# வாரம் ஒரு நாடு

## அவுஸ்திரேலியா

தலைநகர் - கான்பெரா
பரப்பு - 76,82,300 சதுரகிலோமீட்டர்
மக்கள் தொகை - 1.81 கோடி
மொழி - ஆங்கிலம்
எழுத்தறிவு - 99%
சமயம் - கிறிஸ்தவம்
நாணயம் - அவுஸ்திரேலிய டொலர்
தனிநபர் வருமானம் - 19,320 டொலர்

**அமைவிடம்:**

தென் மேற்குப் பசிபிக் கடலில் அமைந்துள்ள ஒரு தீவுக் கண்டம். கிழக்கே பசிபிக் பெருங்கடலும், மேற்கே இந்தியப் பெருங்கடலும், இதன் எல்லைகள். இதன் தென் கிழக்கே 1800 கிலோமீட்டர் தூரத்தில் நியூஸிலாந்து அமைந்துள்ளது.

**வரலாறு:**

1901ல் பிரிட்டன் காலனிகள் 6 (நியூசவுத் வேல்ஸ் விக்டோரியா, குவீன்ஸ்லாந்து, தெற்கு அவுஸ்திரேலியா, மேற்கு அவுஸ்திரேலியா, தஸ்மானியா) ஒன்றாகச் சேர்ந்து அவுஸ்திரேலியா உருவானது. பிரிட்டிஷ் மகாராணியின் பிரதிநிதியே கவர்னர் ஜெனரல். 1986



மார்ச்சில் பிரிட்டனுடனான அனைத்து அரசியல் தொடர்புகளும் விலக்கிக் கொள்ளப்பட்டன.

**பொருளாதாரம்:**

விவசாயம் மற்றும் அதிகமான கனிம வளங்களால் அவுஸ்திரேலியா மிக வேகமாகத் தொழில்வளர்ச்சி கண்டுள்ளது. கம்பளி, கோதுமை, பால் உணவுப் பொருட்கள் இறைச்சி போன்றவை அதிகளவு ஏற்றுமதியாகின்றன.

* உலகில் எங்கும் காணமுடியாத தாவர, விலங்கினங்கள் இங்கு இருக்கின்றன. 1,60,000 பழங்குடி மக்கள் இங்கு வசிக்கின்றனர்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 05.12.1998.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 273**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 270

**பரிசுக்குரியவர்:**
ச.சர்வவிக்னோபன்
வெஸ்லி கல்லூரி, கொழும்பு.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| கருணாகரம் சந்திரமோகன், விபுலானந்த மத்திய கல்லூரி, காரைதீவு-01. | த.பாபுஜி, தமிழ் மத்திய மகாவித்தியாலயம், வவுனியா. |
| பி.உமேஸ்வரன், பேர்குசன் பாடசாலை, இரத்தினபுரி. | நஸ்மிலா உவைஸ், பாபுல் ஹசன் மத்திய கல்லூரி, வறக்காபொலை. |
| செல்வி லக்ஷ்மீ பார்கவி கல்பொட தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி. | வி. கினோஷன், சென் மேரிஸ் பாடசாலை, மட்டக்களப்பு. |
| ஜே.சஞ்ஜீவ், மருத்துவமனை வீதி, ஹட்டன். | த.ஆனந்த் பாபு, கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயம், கொட்டகலை. |
| ரி.திவாகர், விகார இடம், ஸ்ரேஸ் வீதி, கொழும்பு.14. | செல்வன் த.சுமித்திரன், சொய்சாபுர, மொறட்டுவ. |

# சில புதினங்கள்

### அதிக உற்பத்தி

உலகிலேயே அரிசி உற்பத்தியில் முதலிடத்தில் உள்ள நாடு சீனா. இரண்டாவது இடத்தில் இந்தியா உள்ளது.

இதேபோல் உலகில் கோதுமை உற்பத்தியிலும் சீனாவே முதலிடத்தில் இருக்கிறது. இரண்டாவது இடத்தில் அமெரிக்கா உள்ளது.

* * *

### அதிக கடன்

உலகிலேயே அதிகமான வெளிநாட்டுக் கடன் வைத்துள்ள நாடு பிரேஸில். இது வெளிநாடுகளிடமிருந்து 1,51,104 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் வாங்கியுள்ளது. (ஒரு மில்லியன்=10 இலட்சம். ஒரு டொலரின் எமது நாட்டு மதிப்பு 67 ரூபாய்.)

***

### அதிக அழிப்பு

வீடுகள் கட்டுவதற்காக காடுகளை அழிப்பதில் உலகளவில் முதலிடத்தில் உள்ள நாடு பிரேஸில். இங்கு ஒவ்வொரு வருடமும் 36,500 சதுர கிலோமீட்டர் காடுகள் அழிக்கப் படுகின்றன.

***

### தண்ணீர்த் தட்டுப்பாடு

உலகில் 200 கோடிப் பேருக்கு போதுமான குடிநீர் கிடைப்பதில்லை. தினமும் சராசரியாக ஒரு மனிதன் தேவைக்கு ஆகக்குறைந்தது 200லீட்டர் தண்ணீர் வேண்டும். ஆனால் இது கூட பல நாடுகளில் கிடைப்பதில்லை.

உலகில் மிகக் குறைந்தளவான தண்ணீரைப் பெறுபவர்கள் இவர்கள்:

1. டுனீஷியா 2. சவுதி அரேபியா
3. மெக்சிக்கோ 4. ஈரான்
5. பாகிஸ்தான் 6. மாலி
7. ஸிம்பாப்வே 8. எத்தியோப்பியா
9. வியட்னாம் 10. ஆப்கானிஸ்தான்
11. உகண்டா.

***

### 400 ஆண்டுகள்...

ஞாயிற்றுக்கிழமையில் தொடங்கி ஞாயிற்றுக்கிழமையில் முடிவடைந்த ஆண்டு எது தெரியுமா? 1978ம் ஆண்டுதான். மீண்டும் 400 ஆண்டுகளுக்குப் பின்னர்தான் ஞாயிற்றுக் கிழமையில் தொடங்கி ஞாயிற்றுக்கிழமையில் முடிவடையும் ஆண்டுவரும். அதாவது 2379ம் ஆண்டுதான்.

***

### புல்லியன்

தங்கம் அல்லது வெள்ளி நகையாகவோ, நாணயங்களாகவோ இல்லாமல் கட்டியான பாளங்களாக இருப்பதற்கு 'புல்லியன்' (BULLIAN) என்று பெயர்.

# மிகப்பெரிய மணி



உலகிலேயே மிகப்பெரிய மணி ரஷ்யாவிலுள்ள 'ஸார்காலோகல்' என்னும் மணியாகும். இது ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவில் இருக்கிறது.

1733ம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இந்த மணி கிட்டத்தட்ட 100 ஆண்டுகள் வரையில் தொங்கவிடப்படாமல் தரையிலேயே இருந்தது.

பின்னர் 1836ம் ஆண்டு நிக்கலஸ் என்ற மன்னனின் காலத்தில் ஒரு கட்டடத்தில் தொங்கவிடப்பட்டது. தொங்கவிடப்பட்ட சில ஆண்டுகளில் அந்தக் கட்டடம் தீப்பிடித்து எரிந்ததால் மணி கீழே விழுந்தது. இதனால் இதன் விளிம்பின் ஒரு பாகம் தெறித்துவிட்டது.

இதன் நிறை 193 தொன். உயரம் 6 மீட்டர். இதன் வாயின் சுற்றளவு 18.7மீட்டர். மணிச்சுவரின் கனம் 75 சென்ரி மீட்டர். இதன் ஒவ்வொரு பக்கத்திலும் 25 பேர்கள் நின்றுகொண்டு இதன் நாக்கை இழுத்து மணியின் விளிம்பில் மோதும்படி செய்ய வேண்டும். அப்போதுதான் மணியடிக்கும்.


இதற்கு அடுத்ததாக பர்மாவில் உள்ள ஒரு கோயிலின் மணி 80 தொன் நிறையுள்ளது.

# பிரமிட்கள்

பிரமிட்கள் சதுரமான அடிப்பாகமும், முக்கோண வடிவமான பக்கங்களும், கூம்பிய முனையும் உடையவை.

எகிப்தில் கெய்ரோ நகரத்திற்கு 6.4 கிலோமீட்டர் தூரத்தில் கீஸ் என்னுமிடத்தில் மூன்று பிரமிட்கள் இருக்கின்றன. இவற்றில் 'கூபா' எனப்படுவதுதான் மிகப்பெரியது. எகிப்தில் சிறியதும் பெரியதுமாக 80 பிரமிட்கள் உள்ளன.

'கூபா' பிரமிட்டின் உயரம் 144 மீட்டர். கீயாப்ஸ் என்ற மன்னன் இந்த பிரமிட்டைக் கட்டினார்.



அரசன், அரசி போன்றவர்களின் சமாதிகளான இந்த பிரமிட்கள் கி.மு. 4,500-3,750க்கும் இடையில் கட்டப்பட்டவை.

# திமிங்கலத்தின் சிறப்பு

ஸ்பேர்ம்வே என்ற திமிங்கலத்திற்கு ஒருவகையான விசேட சக்தி உள்ளது. இந்தத் திமிங்கலத்தினுடைய கண்களில் ஒருவித சவ்வுத்தோல் உள்ளது.



இந்தச் சவ்வுத் தோலின் உதவியால் இத் திமிங்கலம் கடலின் ஆழத்தை அறிந்துகொள்ளக்கூடிய இயல்பு படைத்தது.

இதன் விளைவாக, கடலில் எங்காவது அபாயமான ஆழமுடைய இடத்தை அடைந்ததும், அது பற்றிய செய்தியைக் கண்ணிலுள்ள சவ்வுகள் உடனடியாக மூளைக்கு அனுப்பிவிடும்.

மூளை உடனே செயற்பட்டு, ஆழமான பகுதியைவிட்டு திமிங்கலம் அகன்றுவிடக் கட்டளையிடுகிறது.

www.padippakam.com

நித்தியனின் இரத்த ஓட்டத்தில் சின்னதாய் ஒரு டிராஃபிக் ஜாம். நெற்றி அவசரமாய் ஒரு வியர்வை கோட்டிற்கு உட்பட்டு தொண்டையில் ஆதாம் ஆப்பிள் அவஸ்தையில் விம்மியது.

"நா....நான் ஜெயிலுக்குப் போ... போனது உங்களுக்கெல்லாம் தெ... தெரியுமா?"

"தெரியும்"

"எ...எப்படி?"

விஜயராகவன் புன்னகைத்தார். "மாப்ளே! பொண்ணைப் பெத்தவங்க அவ்வளவு சுலபத்துல ஒருத்தர்கிட்ட தன்னோட பொண்ணை தாரை வார்த்துக் கொடுத்துடமாட்டாங்க. விசாலி எங்களுக்கு ஒரே பொண்ணு. ஒரு ராஜகுமாரி மாதிரி அவளை பொத்தி பொத்தி வளர்த்துட்டு வந்திருக்கோம். அவ எந்தப் பொருள்மேல ஆசப்பட்டாலும் சரி, அடுத்த ஒரு மணி நேரத்துக்குள்ள அந்தப் பொருள் அவளுக்கு முன்னாடி இருக்கும். இப்படி அவளோட ஆசைகளை புரிஞ்சுக்கிட்டு செயல்படற நாங்க அவளுக்கு கணவரா வர்ற உங்களைப் பத்தி சரியான முறையில் விசாரிக்காம இருப்போமா?"

இப்ப நீங்களே வீட்டுக்கு வந்து வாய் திறந்து 'நான் ஜெயிலுக்குப் போயிருக்கேன்னு சொன்னதால நாங்களும் உண்மையை சொல்ல வேண்டியதாயிடுச்சு."

நித்தியன் இயல்புக்கு வந்து ஒரு சின்னப் புன்னகையோடு விஜயராகவனை ஏறிட்டான்.

"அங்கிள்! ஐ யாம் ஹார்ம்லஸ், எந்தத் தப்பும் பண்ணலை. இருந்தாலும் ஜெயிலுக்குள்ளே ஒரு வருஷம் இருந்துட்டு வந்திருக்கேன். இது எனக்கு ஒரு பிளாக் மார்க்தானே?"

"நாங்க யாருமே அப்படி நினைக்கலை. முக்கியமா விசாலி ஒரு பர்செண்ட் கூட நினைக்கலை. விசாலி உங்கமேல வெச்சிருக்கிற அன்புக்கு ஒரு எல்லையே இல்லை. அவளோட ஃப்ரண்ட்ஸ் சர்க்கிளில் இப்போ அவள் விசாலி விஜயராகவன் கிடையாது. அவங்க கூப்பிடறதெல்லாம் விசாலி நித்தியன்தான்!"

நித்தியனுக்குள் இப்போது லேசாய் சுவாசத் திணறல் ஏற்பட்டது.

'இவர்கள் எல்லை மீறிப்போய்க் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கல்யாணம் நடக்காது என்று சொல்லி விடலாமா?'

'வேண்டாம். இங்கே வேண்டாம். வீட்டுக்குப் போய் அங்கேயிருந்து டெலிஃபோன் செய்து பட்டுத்துணியை கத்தரிப்பதுபோல் விஷயத்தைச் சொல்லிவிட வேண்டியதுதான்!'

**இதுவரை**

பிரபல தொழிலதிபர் ருத்ரமூர்த்தியின் ஒரே மகன் நித்தியன். பம்பாயில் சிறையிலிருந்து விடுதலையாகி வருபவனை வெளிநாட்டில் இருந்து வருபவனாகக் கூறி விசாலிக்கு மணம்முடிக்க திட்டமிடுகிறார். நித்தியனோ சாந்தாவைக் காதலிக்கிறான். நித்தியன் சிறையில் இருந்து வந்தவன் என்ற விடயம் விசாலி வீட்டுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது.

**இனி......**

"என்னம்மா?"

"அவர் எந்திரிச்சு ஓடாமப் பார்த்துக்குங்க. நான் போய் ஒரு பெரிய டம்ளர் நிறைய பாதாம்கீர் கொண்டு வர்றேன்."

விசாலி எழுந்து உள்ளே இருந்த ஃபிரிஜை நோக்கிப்போக, புவனேஸ்வரியும் விஜயராகவனும் சிரித்தார்கள்.

"தப்பா நினைச்சுக்காதீங்க மாப்ளே...! விசாலிக்கு கொஞ்சம் விளையாட்டுத்தனமும், துடுக்குத் தனமும் ஜாஸ்தி."

நித்தியன் அவஸ்தையாய் சிரித்து வைத்தான். ரெண்டே நிமிஷம். விசாலி ஒரு பெரிய கண்ணாடி டம்ளர் வழிய வழிய பதாம் கீரோடு வந்தாள். டம்ளரின் உச்சியில் ஸ்ட்ரா தள்ளாடியது.

"ம்...குடிங்க."

டம்ளரை கையில் எடுத்தான் நித்தியன்.

அவர் கையில் இருந்த ரிஸீவர் பறிக்கப்பட்டது. நிமிர்ந்தார். விசாலி ரிசீவரை காதுக்குப் பொருத்தி உற்சாகக் குரல் கொடுத்தாள்.

"மாமா! நான் உங்க மருமக..."

"என்னம்மா? நித்தியன் அங்கே வந்திருக்கிறானாமே?"

"ஆமா மாமா! திருட்டுத்தனமா என்னைப் பார்த்து சைட் அடிக்கிறதுக்காக எங்க வீட்டுப்பக்கம் வந்தார். மடக்கிட்டோம். என்னைப் பார்க்காமே ஒரு நிமிஷம்கூட அவரால இருக்க முடியாதாம். சீக்கிரமா முகூர்த்த தேதியை ஃபிக்ஸ் பண்ணுங்க மாமா."

ருத்ரமூர்த்தி சிரித்தார்.

"நீ இப்படி சொல்றேம்மா! அவன் இங்கே வீட்ல என்ன சொன்னான் தெரியுமா?"

"என்ன சொன்னார்?"

"கல்யாணத்துக்கு இப்ப என்ன அவசரம்? ரெண்டு வருஷம் போகட்டும்னு சொன்னான்."

"என்னது! ரெண்டு வருஷம் போகட்டும்னு சொன்னாரா?"

"ஆமா"

"நான் அவரைப் பேசிக்கிறேன். மாமா! விஷயம் விசாலியோட குடும்பத்துக்கு தெரிஞ்சிருந்தாலும், அதை ஒரு பொருட்டா எடுத்துக்க மாட்டாங்கன்னு!"

**மர்மம், காதல் குடும்ப நயம் கலந்த விறு விறு தொடர்**

நித்தியன் பெருமூச்சு விட்டான்.

"இப்ப என்ன செய்யறதுன்னு தெரியலை. இந்நேரம் வீட்ல முகூர்த்த தேதியை ஃபிக்ஸ் பண்ணியிருப்பாங்க."

"இந்தப் பிரச்சனை தீர ஒரே வழிதாங்க இருக்கு."

"என்ன வழி சொல்லு?"

"எனக்கு டாட்டா சொல்லிட்டு விசாலி கழுத்துல தாலியைக் கட்டிட வேண்டியதுதான்."

நித்தியன் முறைத்தான். கண்களில் சட்டென்று நீர் திரண்டு பளபளத்தது.

"அய்யய்யோ... என்னங்க இது! நான் சும்மா விளையாட்டுக்கு."

# டிசம்பர் பௌர்ணமி

## 05



"ஒரு சொட்டு மீதம் வைக்காம குடிச்சு டம்ளரை கீழே வைக்கணும்."

புவனேஸ்வரி மகளைக் கண்டித்தாள்.

"விசாலி! அவரை ரொம்பவும் படுத்தாதே! இன்னொரு டம்ளரைக் கொண்டு வந்து நீ பாதி வாங்கிக்க...!"

"இப்ப சொன்னியே... இது கரெக்ட்... நான் ஃபிப்டி அவர் ஃபிப்டி."

"சரியா பாதி ஊத்தணும்! அப்பா! நீங்கதான் ரெஃப்ரி பார்த்துக்குங்க."

நித்தியன் வேண்டா வெறுப்பாய் பாதி பாதாம்கீரை டம்ளரில் ஊற்றிக்கொண்டிருக்கும்போதே ஹாலின் மூலையில் இருந்த டெலிஃபோன் முணுமுணுப்பாய் கூப்பிட்டது.

விஜயராகவன் போய் ரிஸீவரை எடுத்துக் காதுக்கு கொடுத்து முகம் பூராவும் மலர்ந்தார். மறுமுனையில் ருத்ரமூர்த்தி.

"வணக்கம் சம்பந்தி"

**க்ரைம் சக்கரவர்த்தி**
**ராஜேஸ்குமார்**

"வணக்கம்! எங்க ஃபேமிலி ஜோஸியர் வந்து வெயிட் பண்ணிட்டிருக்கார். நீங்களும் உங்க வொய்ப்பும் ஒரு அரைமணி நேரம் ஒதுக்கிட்டு வந்தா முகூர்த்த தேதியை ஃபிக்ஸ் பண்ணிடலாம். வந்துட்டுப் போக முடியுமா?"

"என்ன சம்பந்தி... இப்படி கேட்டுட்டீங்க? இது நம்ம காரியம். உடனே புறப்பட்டுவர்றோம். அப்புறம் இன்னொரு விஷயம். உங்க மகனும் இப்போ நம்ம வீட்லதான் இருக்கார்"

"என்னது! நித்தியன் அங்கே இருக்கானா? எதுக்காக வந்தான்?"

விஜயராகவன் பதில் சொல்வதற்குள்

இப்போது விசாலி தொடர்ந்தாள்.

"ரெண்டு வருஷத்துக்கு முந்தி, நீங்க பம்பாய் ஏர்போர்ட்ல மெட்ராஸ் ஃபிளைட்டுக்காக காத்திட்டிருந்தபோது அறிமுகம் இல்லாத பெண்ணொருத்தி தன்னோட சூட்கேஸை உங்க பக்கத்துல வெச்சுட்டு பார்த்துக்கும்படி சொல்லி, டாய்லெட் போனதும், அந்த நேரத்துல பொலிஸ் வந்து பாசஞ்சர்ஸோட லக்கேஜையெல்லாம் சோதனை போட்டதும், அப்படி சோதனை போட்டதால அந்தப் பெண்ணோட சூட்கேஸ் கவருக்குள் போதை மருந்து இருந்தது கண்டுபிடிக்கப் பட்டதும், அந்தப் பொண்ணு தப்பிச்சுக்கிட்டு போயிட்டதால நீங்க மாட்டிக்கிட்டதும், உங்களுக்கும் அவளுக்கும் தொடர்பு இருக்குன்னு பொலிஸ் சந்தேகப்பட்டு கைது செய்து வழக்கு தொடர்ந்ததும் அதுல ப்ராஸிக்யூஷன் தரப்பு ஸ்ட்ராங்கா இருந்ததால உங்களுக்கு ஒரு வருஷ சிறைத் தண்டனை தீர்ப்பானதும், இப்படி எல்லாமே எங்களுக்குத் தெரியும்!"

இப்போது விசாலியின் அம்மா புவனேஸ்வரி தன் பங்குக்கு வாயைத் திறந்தாள்.

"நீங்க ஜெயிலுக்குப் போயிருக்கிற விஷயம் எங்களுக்கெல்லாம் தெரியக்கூடாதுன்னு உங்கப்பா நினைச்சார். நீங்க பிஸினஸ் நுணுக்கங்களை கத்துக்கிட்டு வர்றதுக்காக ஃபாரின் போயிருக்கிறதா எல்லார்க்கிட்டேயும் சொல்ற மாதிரியே எங்ககிட்டேயும் சொன்னார். நாங்களும் உண்மை தெரிஞ்சதா காட்டிக்கலை.

விஜயராகவன் நித்தியனின் தோளில் கை வைத்து கேட்டார்.

"என்னை மாப்ளே யோசனை?"

"ஒண்ணுமில்லே அங்கிள்."

"கல்யாணப்பேச்சு பேசினா முகத்துல ஒரு தேஜஸ் வர வேண்டாமா?"

விசாலி சிரித்தாள்.

"அப்பா! அவருக்கு ஜெயிலுக்கு போயிட்டு வந்த அந்த கில்ட்டி கான்ஷியஸ் போகலை. அது சாயம் போக கொஞ்சம் நாளாகும். அதுவரைக்கும் இவரோட ஃபேஸ்ல இப்படியொரு உம்மணா மூஞ்சித்தனம் இருக்கத்தான் செய்யும்."

"சரி! மாப்பிள்ளைக்கு ஏதாவது சாப்பிடக் கொண்டுவந்து கொடுமா."

"எதுவும் வேண்டாம். இப்பத்தான் ரெஸ்டாரெண்ட்ல காபி சாப்பிட்டுட்டு வந்தேன்."

"சரி, கூலா ஏதாவது சாப்பிடுங்க. விசாலியே ப்ரிப்பேர் பண்ணின ஐஸ்கிரீம் இருக்கு. பாதாம்கீர் இருக்கு."

"ப்ளீஸ்! ஒண்ணும் வேண்டாம்.. கண்டதை வயித்துக்குள் போட்டா மத்தியானம் லஞ்ச் ஸ்பாயிலாயிடும்."

விசாலி தன் அழகான கண்களை விரித்து முறைத்தாள். "நான் ப்ரிப்பேர் பண்ணின ஐஸ்கிரீமும் பதாம்கீரும் கண்டதா? எவ்வளவு தைரியம் இருந்தா அந்த வார்த்தையை யூஸ் பண்ணுவீங்க?"

"ஸாரி..."

விசாலி தன் பொய்க் கோபத்தைத் தொடர்ந்தாள்.

"ஐ டோண்ட் வாண்ட் யுவர் ஸாரி. நீங்க அப்படி பேசினதுக்கு தண்டனையா நான் ப்ரிப்பேர் பண்ணின பதாம் கீரை நீங்க சாப்பிட்டே ஆகணும்! அப்பா!"

நீங்க இந்த மாசத்துல எந்தத் தேதியில முதல் முகூர்த்தம் வருதோ அந்தத் தேதியையே ஃபிக்ஸ் பண்ணிடுங்க. ரொம்பவும் தள்ளிக்கிட்டுப் போக வேண்டாம். ஜோஸ்யர் உங்க வீட்ல வெயிட் பண்றாரா?"

"ஆமாம்மா"

"எங்கப்பாவையும் அம்மாவையும் இப்பவே அனுப்பி வைக்கிறேன்."

மனதில் அடக்கி வைத்திருக்கும் ஆசைகளை வார்த்தைகளுக்கு கொடுத்து டெலிஃபோனில் உரிமையோடு பேசிக்கொண்டிருந்த விசாலியை சோபாவில் உட்கார்ந்திருந்த நித்தியன் பயத்தோடு பார்த்தான்.

'சாந்தாவுக்கும் எனக்கும் உள்ள காதல் விஷயம் தெரிய வரும்போது இந்த விசாலி அதை எப்படி ஏற்றுக் கொண்டு ஜீரணித்துக்கொள்ளப் போகிறாள்?' நித்தியனின் இருதய மையத்தில் ஒரு பூகம்பம் பதிவாயிற்று.

★★★

**மா**லை ஆறு மணி. கபாலீசுவரர் கோயிலின் உட்பிரகாரத்தில் ஒரு தூணின் மறைவுக்குப் பின்னே உட்கார்ந்திருந்தார்கள் சாந்தாவும் நித்தியனும்.

"நான் ஆரம்பத்திலேயே நினைச்சேன்?" என்றாள் சாந்தா.

"என்ன நினைச்சே?"

"நீங்க ஜெயிலுக்குப் போயிட்டு வந்த

"கோயில்ல வந்து உட்கார்ந்துக்கிட்டு விளையாட்டுக்குக் கூட அப்படி பேசாதே சாந்தா. நீ எனக்கு இல்லேன்னா இந்த உலகத்துல நானே இல்லைன்னுதான் அர்த்தம்."

சாந்தா கன்னத்தில் போட்டுக் கொண்டாள்.

"இனிமே அப்படி பேசமாட்டேன். இந்த சாந்தா உங்களுக்குத்தான். நீங்க எனக்குத்தான் போதுமா?"

"இன்னொரு வாட்டி சொல்லு!"

"இந்த சாந்தா உங்களுக்குதான் நீங்க எனக்குதான்!"

"இன்னொரு வாட்டி"

"என்னங்க இது, இம்போஷிஷனா?"

"இம்போஷிஷன்தான்...ம்... சொல்லு. இன்னொரு வாட்டி"

சொன்னாள்.

"சாந்தா"

"ம்..."

"இன்னிக்கு என்ன தேதி?"

"பதினேழு"

"வர்ற இருபத்திமூணாம் தேதி பௌர்ணமி. அன்னிக்கு நாள் நல்லாயிருக்கு. வடபழனி கோயிலுக்குப் போய்..."

"போய்..?"

"கல்யாணம் பண்ணிக்கலாமா?"

(பௌர்ணமி தொடரும்)

**அமெரிக்க வல்லாதிக்கத்துக்கு பணியாத இரும்பு மனிதர் ஈராக் அதிபர் சதாமின் உண்மைக் கதை**

# சதாம் உசேன்

## 17

**வி**ழா நிகழ்ச்சிகளில் புதிய ஜனாதிபதி பக்கர் உற்சாகத்துடன் கலந்து கொண்டார்.

இச்சந்தடிகளிலிருந்து ஒதுங்கி சதாம் அமைதியாக இருந்தார்.

ஆட்சியைப் பிடிக்க ஒத்துழைத்த நயீஃபுக்கு பிரதமர் பதவியும், தாவூத்துக்கு பாதுகாப்பு அமைச்சர் பதவியும் கொடுத்தார் பக்கர்.

அவர் சதாமை அழைத்து "உனக்கு என்ன பதவி வேணும்? கேள்!" என்றார்.

"இப்ப நான் வச்சிருக்கிற கட்சிப் பதவியே எனக்குப் போதும். இப்போதைக்கு எனக்கு மந்திரிப்பதவி வேணாம்!"

"ஏன்...?"

"முக்கியமான வேலை இருக்கு!"

"அப்படி என்ன முக்கியமான வேலை...?"

"ஆட்சியைப் பிடிக்கிறதோட புரட்சி முடிஞ்சு போயிடுறதில்ல. பிடிச்ச ஆட்சியை யாரும் கவிழ்த்திடாம காப்பாத்தவும் வேணும். நம் ஆட்சியைக் கவிழ்க்க அதுக்குள்ள வேலை ஆரம்பமாயிடுச்சு...!"

"நெஜந்தானா? அப்படி முயற்சி பண்றது யார்...?"

"பிரதமர் நயீஃபும், பாதுகாப்பு மந்திரி தாவூத்தும்...!"

பிரதமர் நயீஃப் வீட்டுக்கு வந்தார்- பாதுகாப்பு மந்திரி தாவூத்.

பக்கர் ஆட்சிக்கு ஆதரவு திரட்டவும் ஈராக்கின் பாதுகாப்புக்கு ஆயுதங்கள் வாங்கவும் வெளிநாடுகளுக்குப் போய்வருமாறு தாவூத்துக்கு கட்டளையிட்டிருந்தார் ஜனாதிபதி பக்கர். தாவூத் வெளிநாடு கிளம்பும்முன் விடைபெறும் சாக்கில் பிரதமர் நயீஃப் வீட்டுக்கு வந்திருந்தார்.

இருவரும் மனம் விட்டுப்பேசினார்கள்...

"பக்கரும், சதாமும் என்னை ஏமாத்திட்டாங்க..." என்றார் நயீஃப் வருத்தத்துடன். "புரட்சி நடந்ததுமே எனக்குத்தான் ஜனாதிபதி பதவி கிடைக்கும்னு நெனச்சுட்டிருந்தேன். ஆனா, பக்கர் அதை வாரிச்சுருட்டி எடுத்துக்கிட்டு போயிட்டார். சரி... துணை ஜனாதிபதி பதவியாவது தருவார்னு பார்த்தேன். வாய்விட்டு கேட்டும் விட்டேன். குடுக்கல. புரட்சியில் நம்ம பங்கு குறைவானதா? நம்ம உதவியில்லாம அவங்க ஆட்சியைப் பிடிச்சிருக்க முடியுமா? நம்மில் ஒருத்தருக்கு துணை ஜனாதிபதி பதவி குடுத்திருக்கக்கூடாதா? அதிகாரமில்லாத பிரதமர் பதவி யாருக்கு வேணும்?"

நயீஃபின் ஆதங்கத்தை தாவூத் ஆமோதித்தார்.

"இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போகல. அடுத்த ஜனாதிபதி நான்தான்!" என்று நம்பிக்கையுடன் சொன்னார் நயீஃப்.

புரியாமல் தாவூத் விழித்தார்.

"பக்கரை கவிழ்ப்போம். ஆட்சியைப் பிடிப்போம். அதுக்கான வேலைகளை இப்பவே ரகசியமா ஆரம்பிச்சுட்டேன்!" என்றார்.

தாவூத்தை கட்டித் தழுவி விடை கொடுத்து அனுப்பிவைத்தார்.

**ம**றுமலர்ச்சிக் கட்சியின் ரகசிய உளவுப் பிரிவை தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் சதாமுக்கு- நயீஃப் தாவூத் கூட்டுச்சதி பற்றிய தகவல் கிடைத்தது. அதிர்ந்தார்.

விஷயத்தை பக்கரிடம் சொல்லி அவரை உஷார்ப்படுத்தினார்.

"நாட்டு மக்களுக்கு நாம ஏதாவது நல்லது செய்யணும்னா அதுக்கு முதல்ல நிலையான ஆட்சியும், அமைதியான சூழலும் வேணும். சுதந்திரம் வாங்கின நாளிலிருந்து இதுவரைக்கும் இராணுவம் 13 தடவை ஆட்சியைக் கவிழ்க்க முயற்சி பண்ணியிருக்கு. இதுக்கு முற்றுப் புள்ளி வைக்கணும். இனிமே எந்த இராணுவ அதிகாரியும் பத்து மிஷின் கன்னையும், நாலு டாங்குகளையும் வச்சுக்கிட்டு நம்ம ஆட்சியைத் தூக்கி எறிஞ்சிட முடியும்னு கனவுலயும் நினைக்கக்கூடாது. அதுக்கான ஏற்பாடுகளை இப்பவே செய்ய ஆரம்பிக்கணும். நயீஃப்- தாவூத் கூட்டுச்சதியை முளையிலேயே கிள்ளி எறியணும்...!"



ராஜையா

பக்கர் விரல்களால் நெற்றியை அழுத்தித் தேய்த்தார். சிந்தனையில் ஆழ்ந்தார்.

★★

**பு**திய ஆட்சி பொறுப்பேற்ற 13வது நாள்.

பிரதமர் நயீஃப் வீட்டு டெலிஃபோன் மணி அடித்தது. நயீஃப் எடுத்து 'ஹலோ' சொன்னார். எதிர் முனையில் ஜனாதிபதி பக்கரின் குரல் கேட்டது.

"இன்னிக்கு மதியம் உங்களுக்கு புரோகிராம் எதுவும் இருக்கா...?"

நயீஃப் யோசித்துவிட்டுச் சொன்னார் "இல்லையே...!"

"அப்ப மதியச் சாப்பாட்டுக்கு என் வீட்டுக்கு வந்துருங்க! என் வீட்ல விருந்து..!"

மதியம் ஜனாதிபதி மாளிகைக்கு காரில் வந்திறங்கினார் நயீஃப். பக்கர் அவரை வரவேற்று டைனிங் ஹாலுக்கு அழைத்துச் சென்றார்.

விருந்து பரிமாறப்பட்டது. இருவரும் பொதுப்படையான விஷங்கள் பற்றி சாதாரணமாக பேசிக்கொண்டே சாப்பிட்டு முடித்தனர். (தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

**இதுவரை**

அரவிந்த்
ஒரு பைலட்.
அவனது மனைவி ஜ்யோதி.
அவர்களது நண்பன் விக்ரம்.
அவனுக்கு ஜ்யோதி மீது ஆசை.
இதற்கிடையே அரவிந்த்,
அமைச்சர் பிரகாஷ் குப்தாவுடன்
பைலட்டாக ஓடக்கரை
கிராமத்திற்கு செல்கிறான்.
அக்கிராமத்தை வளைத்துப்போட
அமைச்சர் திட்டமிட
அதை எதிர்க்கிறார்கள்
கிராம இளைஞர்கள்.
பொலிஸ் சுடுகிறது.
சீனு காயமடைகிறான்.

**இனி....**

# 06

# உதட்டில் ஒரு மச்சம்

## சுபா



புழுதி பறந்தது.

தென்னை மரங்கள், பனை மரங்களின் உச்சிகளைத் தொடும் அளவு புழுதி எழுந்தது.

கர்ர கர்ர என்று தகரம் மடங்கித் திமிறி நசுங்கி அடங்கும் ஒலி. பொல பொலவென்று செங்கல்கள் உதிரும் சத்தம். மளக் மளக் என்று மரக்கதவுகள் முறியும் ஓசை.

ஷிவா இடுப்பில் கையூன்றி அந்தக் காட்சியைக் குத்துவது போல் பார்த்துக் கொண்டிருந்தான். இரும்பு ராட்சஸனாய் அந்த புல்டோசர். எதிர்படுவதையெல்லாம் இடித்து நொறுக்கும் அதன் ஆவேச முன் மூக்கு. மூடியிருந்த அவனுடைய முஷ்டியில் எலும்புகள் துருத்தின. பற்களைக் கடித்த வேகத்தில் முகத்துத் தசைகள் இறுகின. கண்கள் சிவந்தன.

அவன் கண்ணெதிரே ஒவ்வொன்றாக மண்ணோடு கலந்தன. புல்டோசர் பசியுடன் அடுத்த இரை நோக்கி நகர்ந்தது.

'நாலுகால் மண்டபம் இங்கே தானே...'

'நர்மதா...'

'ம்?'

'எனக்கொரு ஆசை'

'சொல்ல வேண்டாம்'.

'இந்த மண்டபத்தில் தானே நாம் முதலில் சந்தித்தோம்? இங்கேதான் நம்முடைய முதல்...'

'அபத்தம்! ஊரையெல்லாம் கூட்டி தெருக்கூத்து நடத்தலாம் என்கிறீர்களா?'

'முட்டாள். நாலு தூணுக்கும் இழுத்து ஒரு துணி கட்டி விட்டு ஒரே ஒரு லாந்தர், நீ, நான், மல்லிகைப்பூ...'

'ஐயோ!'

'முகத்தை மூடாதே. உன் வெட்கத்தை நான் பார்க்க வேண்டும்.'

புல்டோசர் மண்டபத்தின் அடிப் பகுதியை முட்டியது. மோதியது. இடித்தது. மண்டபம் முதலில் மசியவில்லை.

இரண்டாவது மோதல்.

இரண்டு தூண்கள் நொண்டியாகி, கூரை சரிந்து மற்ற தூண்களையும் தன்னுடன் இழுத்தது.

நர்மதாவும், அதுவும், லாந்தர் விளக்கும், மல்லிகைப்பூவும் காற்றில் தூசாகிப் போயினர். ஷிவாவின் தொண்டை நரம்புகள் புடைத்துக் கொண்டன.

புல்டோசர் சாவதானமாக, சரித்திர கால ராட்சச மிருகம்போல, இடம் நகர்ந்து அடுத்த கட்டத்தை அணுகியது.

கடவுள் தன் ரசனையையெல்லாம் குழைத்து நிர்மாணித்த அந்தப் பச்சைக் கிராமத்தை ஒரு பைத்தியக்கார மனிதனின் தனிப்பட்ட ஆசை சீரழித்துக் கொண்டிருந்தது.

பச்சையும், மஞ்சளும் கலந்த பின்னணி மலைகள், கால்களைப் பரப்பிய மலைகளின் கூந்தலைத் தடவும் மேகங்கள். வகிடு எடுத்து வெட்டிக்கொண்டு வெள்ளையாய்ச் சிதறும் நீர்வீழ்ச்சி. மடக்கப்பட்ட விரல் முட்டிகள்போல அங்கங்கே வழுக்குப் பாறைகள். எல்லாவற்றையுமே இடித்துத் தள்ளப் போகிறதா இந்த இரக்கமற்ற இரும்பு இயந்திரம்?

அவனுடைய ஓடக்கரை வெறும் கிராமமில்லை. நாற்பது குடும்பங்களின் உயிர்மூச்சு கலந்திருந்த ஒரு தனிப்பிரபஞ்சம். ஒரு மாபெரும் குடும்பத்தை அரவணைத்திருந்த கூரை என்பதெல்லாம் அந்த முட்டாள் இயந்திரத்திற்கோ, அதன் சக்கரத்திற்குப் பின் உட்கார்ந்திருக்கும் அந்தக் கூலிக்காரனுக்கோ தெரியுமா?

"ஷிவா"

நர்மதாவின் நீளமான விரல்கள் அவன் தோளில் விழுந்து அழுத்தின." எத்தனை நேரம் அதையே பார்த்துக் கொண்டிருப்பீர்கள்?"

"நம் முதலிரவு ரூம் போய் விட்டது நர்மதா...."

"ஆண்பிள்ளை அழலாமா?"

"ஆண்பிள்ளைக்கு இதயம் கிடையாதா? அதில் உணர்ச்சிகள் இருக்காதா?"

"நமக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் இடத்தில் இதைவிட அழகாக ஒரு மண்டபம் கட்டிக் கொள்வோம், ஷிவா."

"ஏன்? ஏன் என்று கேட்கிறேன்? வாழ்ந்து கொண்டிருப்பவர்களை நாம் ஏன் நகர்த்த வேண்டும். நமக்கு வேறு இடம் ஒதுக்கியிருக்கிறார்களே, அங்கே கட்டிக் கொள்ள வேண்டியது தானே அவர்களுடைய தொழிற்சாலையை? நம்மைத் துரத்தி விட்டு, இந்த ஊரை அழித்துத்தான் அதில் அஸ்திவாரம் போட்டுக் கொள்ள வேண்டுமா அவர்கள்?"

"கேட்டுப் பார்த்துத் தோற்றுப் போன கேள்வி, ஷிவா.."

"தோற்கவில்லை, நர்மதா... அடக்கப் பட்டிருக்கிறோமே தவிர, தோற்கவில்லை. ஜெயிக்கப்போகிறோம். நாம்தான் ஜெயிக்கப் போகிறோம்."

"கொஞ்ச நேரம் அந்த நிழலில் உட்காரலாம் ஷிவா!"

அவன் கைவிரல்களோடு அவளுடைய விரல்கள் கோர்த்தன. இறுக்கின. இழுத்தன.

ஷிவா தயங்கி விட்டு, மெல்லிய எதிர்ப்புக் காட்டி விட்டு, அவள் பின்னே நகர்ந்தான்.

மலையடிவாரத்தில் அடர்ந்த மரங்கள். மரங்களில் தொங்கும் தேன் கூடுகள். கிளைகளில் அமைந்த பட்சி வீடுகள். இடதும் வலதும் அவசரமாகப் பார்த்துவிட்டுத் தாவும் பிரஷன் குரங்குகள். தோகை விரிக்கும் மயில்கள்.

அவர்கள் உட்கார்ந்திருந்த இடத்தில் அருவி நீர் முழு வேகத்துடன் பள்ளத்தில் சேகரமாகி, பின் இயற்கை வரைந்த ஒரு கண்ணீர் கோடாக, ஓடையாக வளைந்து நீண்டிருந்தது. அந்த ஓடை ஊரின் ரத்துக் குழாய்களாக கிளை பிரிந்திருந்ததால்தான் ஊருக்கே ஓடைக்கரை என்று பெயர் வந்தது.

"ஷிவா"

"ம்?"

"இதை நானோ நீங்களோ தடுத்து நிறுத்த முடியாது. மலையோடு கூழாங்கல் மோத முடியாது. நடந்ததை நினைத்து, பொங்கிப் பொங்கி அழுவதாலோ, ஆவேசமாகக் கத்தியைத் தூக்குவதாலோ ஆகப் போவது ஒன்றுமில்லை. எல்லோருமாக சேர்ந்து புதிய இடத்தை இன்னும் திட்டமிட்டு அமைத்துக் கொள்ளலாம்."

"படுப்பதற்கு ஒரு இடம் கிடைத்தால் போதும் என்று என்னால் சமாதானப்படுத்திக் கொள்ள முடியாது. நர்மதா? இங்கே ஒவ்வொரு வீட்டிலிருந்தும் தேசத்திற்காக நாம் ஆள் கொடுத்திருக்கிறோம். அதற்கு தேசம் காட்டும் நன்றி இதுதானா? போரில் செத்துப்போன ஓடக்கரை, இளைஞர்களுக்காக ஸ்கூல் பக்கத்தில் ஒரு நினைவுச் சின்னம் வைத்திருந்தோமே, அதையாவது விட்டு வைத்தார்களா? இடித்து நொறுக்கி விட்டார்கள். தேவ் நேற்றைக்குச் சொன்னது நூற்றுக்கு நூறு உண்மை."

"தேவேந்திரனா? என்ன சொன்னார்?"

"உணர்வுகளுக்கு இந்த தேசத்தில் மதிப்பில்லை என்றான். சென்டிமென்ட்களை மதிக்கத் தெரியாது ஆட்சியில் இருப்பவனுக்கு, அதிகாரம் இருக்கிறது. தட்டிக் கேட்காத மந்தைக் கூட்டம் என்று மக்களை முடிவு செய்யும் அகந்தை இருக்கிறது. அடங்கிப் போகிறவர்களால்தான், அவர்களின் அகம்பாவம் அதிகமாகிறது நர்மதா."

"ஷிவா ஆவேசப்படாதீர்கள். உடம்புக்கு ஒத்துக்கொள்ளாது"

நர்மதா ஷிவாவின் நெஞ்சைத் தட்டினாள்.

ஷிவா கண்களை மூடிக்கொண்டான். நர்மதா சொன்னது உண்மைதான். அவன் மூளைக்குள் நூறாயிரம் மின்னல்கள் வெட்டிக் கிழித்து ஒரே பிரகாசமாக்கி திடீரென்று எல்லா விளக்குகளையும் அணைத்து இருட்டாக்கியது போல் ஒரு வெறுமை. மண்டை சூடாகி விரிவடைந்து பெரிதாகி, பளீர் என்று உடைவதற்குத் தயாராய்....

இரு கைகளாலும் நெற்றிப் பொட்டைப் பிடித்துக் கொண்டான். சரேலென நர்மதாவின் மடியில் குப்புறடித்து விழுந்தான்.

"ஷிவா... ஷிவா..." நர்மதா அவன் தோள்களைக் குலுக்கினாள். பதறி எழுந்தாள். இலைச் சருகுகளை மிதித்துக் கொண்டு, ஓடைக்கு ஓடினாள். முந்தானையைத் தண்ணீரில் செலுத்தி நனைத்தாள். ஈரத்தைப் பந்தாகச் சுருட்டி சுமந்து ஓடி வந்தாள்.

அவள் விட்டுப்போன நிலையிலிருந்து ஷிவா நகர்ந்திருந்தான் சற்றே அசைந்து இமைகளைக் கண்கொட்டித் திறந்தான்.

"ஷிவா"-நர்மதா பதட்டத்துடன் ஈரத் துணியால் அவன் கண்களையும், கன்னங்களையும் அழுந்தத் துடைத்தாள்.

ஷிவா உலர்ந்த புன்னகையை விரித்தான். "பயந்து விட்டாயா நர்மதா?"

"என்னாயிற்று ஷிவா?"

"பிளாக் அவுட்" - ஷிவா சிரித்துக் கொண்டான்.

"என்னது?"

"பிளாக் அவுட். ஏற்கனவே இரண்டு மூன்று தடவை வந்ததுதானே, நர்மதா? இதற்குப் பயப்படலாமா?"

"சுத்தமாக மூச்சுப் பேச்சில்லாமல் கிடந்தால் பயமாயிருக்காதா? டாக்டரிடம் காட்டச் சொல்லி, போன தடவையே நான் சொன்னேன்."

"டாக்டரிடம் போனால் உடனே எக்ஸ்ரே, ஸ்கேன், தாட்பூட் என்று செலவு வைப்பான். ஆஸ்பத்திரியில் மூன்று மாசம் படுத்திரு என்பான்."

"எனக்கு பயமாயிருக்கிறது ஷிவா... டாக்டரிடம் காட்டி விடலாம். அம்மாவிடம் சொன்னீர்களா?"

ஷிவா பதறி அவள் வாயை மூடினான்.

"இதோ பார் அந்தப் பைத்தியக்காரத் தனத்தை மட்டும் செய்து விடாதே... அம்மா தாங்கமாட்டாள். அண்ணன் ஆஸ்பத்திரியில் கிடப்பது போதாதா? அதுவே அவளை உருக்கி விட்டது. நான் வேறு அவளுக்குப் புதிதாக ஒரு பிரச்சனை கொடுக்க வேண்டுமா?"

ஷிவாவின் பார்வையில் ஒரு கெஞ்சுதல் இருந்தது. நினைத்துக் கொண்டாற் போல உள்ளங்கையை அவளிடம் விரித்து நீட்டினான்.

"எனக்கு சத்தியம் பண்ணிக்கொடு நர்மதா"

"என்னவென்று?"

"தலையே போனாலும் என் அம்மாவிடம் இதுபற்றி நீ பேசக்கூடாது"

"பதிலுக்கு சீக்கிரமே டாக்டரிடம் போவதாக நீங்கள் சத்தியம் செய்து தர வேண்டும். ஷிவா அரைக்கணம் அவளை ஊடுருவிப்பார்த்துவிட்டு, வறட்டுப் புன்னகையுடன் "சத்தியம்" என்றான்.

"நானும் சத்தியம்" என்றாள் நர்மதா.

"போகலாமா?"

எழுந்து பின்புறம் ஒட்டிக்கொண்டிருந்த புல் துணுக்குகளைத் தட்டி விட்டார்கள்.

மரத்தடியில் சாய்ந்திருந்த சைக்கிளை நிமிர்த்தினான் ஷிவா.

ஷிவா நல்ல உயரம். பளிங்குக் கண்கள். அகல நெற்றி, அடர்ந்த புருவங்கள். வெண்ணெய் சருமம். அமைப்பான நாசி. வடிவமான உதடுகள்.

அவனை நிமிர்ந்து முத்தமிட வேண்டும் போலிருந்தது நர்மதாவுக்கு. அதற்குப் பதிலாக அவன் இடுப்பை அணைத்து இழைந்து நடந்தாள்.

சைக்கிளில் ஏறினான் ஷிவா.

முன்புறம் இருந்த பார் கம்பியில் நர்மதா தொற்றி உட்கார்ந்தாள்.

பெடல் மிதிக்கும் போது, அவளுடைய மெத்தென்ற தொடைகளை அவன் முழங்கால்கள் ஸ்பரிஸித்தன. ஹேண்டில் பாரைப் பிடித்த நிலையில் ஒரு முழங்கை அவள் இடுப்பையும், இன்னொன்று அவள் முதுகையும் வருடியிருந்தது. இதயத்தில் கிளுகிளுப்புடன் ஷிவா, ஒற்றையடிப்பாதையில் சைக்கிளைச் செலுத்தினான். திடீரென்று பிரேக் அடிக்க வேண்டியிருந்தது.

வழியை மறித்து மூன்று பேர் கையில் ஆயுதங்களுடன்.

(○—வரும்—○)

---

# கவியரசுவின் சுயசரிதை

## 25

கவியரசு கண்ணதாசன் எழுதிய—அவரது சுயசரிதத்தின் முக்கிய பக்கங்கள் உங்கள் முன் விரிகின்றன. 'எப்படி வாழ வேண்டும் என்பதற்காக அல்ல; எப்படி வாழக்கூடாது என்பதற்கான வழிகாட்டிகள்' இவை....

ஆகவே- கட்சி வாழ்க்கையைப் பற்றி அணு அணுவாகச் சொல்வதற்கு அவனிடம் ஒன்றுமே இல்லை. கட்சியில் எந்தவித அந்தஸ்தையும் அவன் தேடவில்லை. அதற்கான முயற்சிகளில் ஈடுபடவில்லை. அவனுக்கு ராஜதந்திரம் தெரியாது. தனக்கென்று ஒரு கூட்டத்தைச் சேர்த்துக்கொள்ளத் தெரியாது. தானாக வரும் கூட்டத்தையும் காப்பாற்றிக் கொள்ளத் தெரியாது.

அவன் எப்படி அரசியலுக்கு லாயக்காவான்? ஆத்திரப் போக்கிலேயே காலம் தள்ளினான். இன்னார்-இனியார் என்ற வேறுபாடில்லாமல்- எல்லாரையுமே கண் மண் தெரியாமல் தாக்கினான்.

ஆட்களை அடையாளம் கண்டு கொள்ளக்கூடிய சாதாரண அறிவுகூட, அன்று அவனுக்கு இல்லையென்பதை ஒப்புக்கொள்வதில் தவறென்ன?

நியாயங்களை மதித்து அநியாயத்தை எதிர்த்து, தாழவேண்டிய நேரத்தில் தாழ்ந்து, எழ வேண்டிய நேரத்தில் எழுந்து, கொஞ்ச வேண்டிய நேரத்தில் கொஞ்சி, கோபிக்க வேண்டிய நேரத்தில் கோபித்து, அஞ்ச



வேண்டிய நேரத்தில் அஞ்சி, ஆர்பரிப்பு தேவைப்படும் நேரத்தில் ஆர்ப்பரித்து வளைந்தும் குழைந்தும் நிமிர்ந்தும் வாழவேண்டிய பூமியில் அவன் கல்லிலும் மோதினான்; காற்றிலும் மோதினான்.

ஆனால் அந்த நிலையிலும் பனித்துளியைத் தேடிப்பிடிக்கும் சக்கரவாகப் பட்சிபோல்- பயனுள்ள இலக்கியங்களைப் படிக்கத் தவறவில்லை.

துன்பத்தில் இன்பம் இது. தீமையில் நன்மை இது. நஷ்டத்தில் லாபம் இது. தென்றலில் பணம் போனது. அறிவு வந்தது. கட்சியில் அறிவு போனது. தெளிவு வந்தது. அவன் சொல்வதெல்லாம் உண்மையைத் தவிர வேறில்லை. அன்றையக் கட்சி வாழ்க்கையில் ஒவ்வொரு படியாகத் தனித்தனியாக அவன் விவரிக்கத் தொடங்கினான். ஒரே மாதிரியான அருவருக்கத் தகுந்த அம்சங்களாகவே அவை இருக்கும் ஆகவே அவற்றை அவன் விவரிக்க விரும்பவில்லை. அதில் பயனுமில்லை. சுவையுமில்லை. அது தேவையுமில்லை!

1957ல் நடைபெற்ற திருச்சி மாநில மாநாடு அவன் குறிப்பிட வேண்டிய ஒன்றாகும். ஏனென்றால் கட்சியின் சமுதாய சீர்திருத்தக் கருத்துக்கள் சரியத் தொடங்கிய கட்டம் அதுதான்.

1952ல் சென்னையில் நடந்த மாநில மாநாட்டைவிட திருச்சி மாநாடு அளவிலே பெரியது: கூட்டமும் அதிகம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு தலைப்பில் பேசினார்கள். சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களையும் உதிர்த்தார்கள். அந்த மாநாட்டிலேதான்- தான் பார்ப்பனர்களுக்கு எதிரி அல்லவென்றும்- பார்ப்பனீயத்துக்கே எதிரியென்றும் அண்ணாத்துரை பேசினார்.

அந்தப் பேச்சுக்குக் காரணம் உண்டு. முன்னாலெல்லாம் பதவி தேடுவோர்- பட்டுப் பூச்சிகள்- வெட்டுக் கிளிகள் என்று பேசி வந்த அவர்- அந்த மாநாட்டில் தேர்தலில் கலந்துகொள்வது பற்றி ஒட்டெடுப்பு நடத்தினார். 'கலந்து கொள்ள வேண்டும்' என்பதற்குச் சாதகமாக ஒட்டுகள் கிடைத்தன. அது எதிர்பார்த்ததுதான். அந்த நம்பிக்கையோடுதான் அவர் வாக்கெடுப்பு நடத்தினார். ஆகவே மாநாட்டில் தனது இறுதிப் பேச்சை வாங்கப்போகிற ஒட்டுக்குச் சாதகமாகத் திருப்பினார்.

பாப்பனர்கள் என்னதான் ஆதிக்க வெறியர்களாய் இருந்தாலும்- அவர்களுக்கு ஒட்டுரிமை இருக்கிறதல்லவா? அந்த ஒட்டும் அவருக்குத் தேவை அல்லவா? அதுவும் அது கூட்டமாக வந்து விழுகிற ஒட்டு அல்லவா? அதோடு அந்த நேரத்தில் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் காங்கிரசோடு முரண்டிக் கொண்டிருந்தார் அல்லவா?

விடுதலை வீரர் அண்ணாத்துரை ராஜதந்திரியாகத் தொடங்கினார். சமுதாயக் கருத்துக்கள், நாத்திகக் கருத்துக்கள் மெல்ல அவரிடம் இருந்து விடைபெறத் தொடங்கின. கொள்கையின் முதற்கட்டச் சரிவைத் துவக்கி வைத்தது திருச்சி மாநில மாநாடு.

அந்த மாநாட்டில்தான் திரு. சம்பத் கட்சியை விட்டு விலகிவிட்டதாக ஒரு புரளி கிளம்பியது. சம்பத் அதை மறுத்துப் பேசினார். ஒருமணி நேரம் பேசினார். 'கொள்கைக் குழப்பங்கள்' என்பது அவர் பேசிய தலைப்பு. அவரது பேச்சின் பாணி அவனை ஈர்த்தது. எப்போதோ சில சந்தர்ப்பங்களில் அவன் சம்பத்தைச் சந்தித்துப் பேசியிருக்கிறான். ஆனால் திருச்சி மாநாட்டில் இருந்து பல விஷயங்களையும் அவரிடமே கலந்துபேச வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான்.

(சரிதம் தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com

# பயிரை மேயும் வேலிகள்

நெடுந்தீவு மகேஷ்



பால் வடியும் முகம்.

அவளது பார்வையில் ஓர் ஏக்கம்.

பாடசாலை வாழ்வை அவள் என்றோ இழந்துவிட்டாள்.

அந்த முகாமில் அவள் ஒரு மனிசியாக மாறி நிற்பதைக் கண்டபோது, மாஸ்ரர் வேதநாயகத்தின் சிந்தனை சிதைந்தது.

சில நிமிட நேரங்கள்- எதனை- எப்படி யாரிடம்- கேட்பது என்று புரியாத கலக்கம்.

நெருப்பைத் தொட்டுவிட்ட உணர்வோடு கண்கள், அந்த அகதி முகாமைச் சுற்றி மேய, மாஸ்ரர் திகைத்து நின்றார்.

மாட்டுப்பட்டி போன்ற முகாமினுள், கம்பங்களின் அருகில், மாடுகளாகிக் கிடக்கும் மனிதர்கள்.

மூலைக்கு மூலை குவிந்து கிடக்கும் பொருட்கள் துறைமுகத்தில் இறக்கிப் பரவப்பட்ட சுமைகள் போல ஒழுங்கின்றிக் கிடந்தன.

மாஸ்ரர் தேடி வந்த- விசாரிக்க வந்த, விடயங்களை- விபரங்களை ஒருகணம் மறந்து போனார்.

பள்ளிப் பருவத்துப் பாலகர்கள் அந்த முகாமின் உள்ளேயும், வெளியேயும் அம்மணமாகவும், அரைகுறை ஆடைகளுடனும் சோம்பிக் கிடந்தனர்.

உலகம் ஏதேதோ எதிர்பார்ப்புக்களுடன், நாளும் சுற்றிச் சுழன்று காலத்தை ஓட்டுகிறது.

எதிர்கால மன்னர்களின் இளமைக் காலம்- இருள் நிறைய- நிகழ்காலத்தின் வேதனைகளைச் சீரணிக்க முடியாமல் நொந்து மடிகிறது.

வேதநாயகம் மாஸ்ரரின் கண்கள் காட்சிகளை விழுங்க, மனம் கேள்விகளை எழுப்பியது.

மனத்தில் எழுந்த கேள்விகள் வெளிவரத் திராணியற்று அங்கேயே படுத்துக் கொள்ளுகின்றன.

அவரது சிந்தனை விழித்துக் கொள்ளுகிறது.

ஒரு சமுதாயம் தான் வாழும் வளரும் திசைகளை ஒடுக்கித் துயரக் கூட்டுக்குள் சிறைப்பட்டுச் சிதைகிறது.

'சிறுவர் பாதுகாப்பு'

'கட்டாயக் கல்வி'

'அனைவருக்கும் கல்வி' என்றெல்லாம் திட்டங்களும், சட்டங்களும்.

மனித உரிமை மீறல்களுக்காக உயரும் குரல்களோடு இங்கே மௌனமாகப் போராடும் உள்ளங்கள்.

மாஸ்ரருக்குத் தலை சுற்றியது.

பாடசாலைக்குச் செல்லாத மாணவர்களைக் கணக்கெடுக்கும் நோக்கோடு அந்த முகாமிற்குள் காலடி வைத்தவருக்கு ஒரே குழப்பம்.

அந்தச் சின்ன மனிசியைப் பார்த்தவர், வயதைக் கேட்டதும் மயங்கிப் போனார்.

இத்தனை சிறிய வயதில் ஒரு குழந்தைக்குத் தாயாகி நிற்கும் அவளது மழலையைப் பார்த்தார்.

அது நிலத்தில் ஊர்ந்து கிடந்து அழுதது.

முகாமின் சீரற்ற அமைப்பிற்குள் சிக்குண்டு அவள் தாயானதில் ஆச்சரியம் எதுவுமே இல்லை.

முகாமின் சூழல் அதனை உணர்த்தியது.

'எத்தனை சிறுவர்கள் பாடசாலைக்குப் போகாமல் இருக்கிறார்கள்?'

தான் கொண்டுவந்த அந்த விபரங்கள் சேகரிக்கும் பெரிய படிவத்தை மாஸ்ரர் எடுத்து விரித்தார்.

அது அவரது பாடசாலை மைதானம் போல விரிந்து கிடந்தது.

படிவத்தை விரித்தபோது, நாறிய மீனில் மொய்த்த ஈக்களாய் அவரைச் சூழ்ந்த மக்கள் கூட்டம்,

அரிசி, பருப்பு, சீனி என்றும்,

பாய், விரிப்பு, பாத்திரம் என்றும் ஏதாவது உடனடித் தேவையை நிவர்த்திக்கும், விபரச் சேகரிப்பாய் அது அமைந்திருக்கும் என்ற ஆவல் மேலோங்க நெருக்கியடித்தனர்.

மாஸ்ரருக்கோ, எப்படித் தன் பணியைத் தொடங்குவதென்று புரியவில்லை.

"என்ன விசயமாய் வந்திருக்கிறியள்?" ஒரு பெரியவர் கேட்டார்.

"ஒண்ணுமில்லை இந்தப் பள்ளிக்கூடம் போகாத பிள்ளையளைக் கணக்கெடுக்க வந்தனான்." ஒருவாறு மாஸ்ரர் வார்த்தைகளை மென்று துப்பினார்.

"ஏன் கணக்கெடுப்பு?" பெரியவர் கேட்டார்.

கல்வியின் தேவை பற்றியும், கட்டாயக் கல்வி பற்றியும் மாஸ்ரர் ஒரு நீண்ட பிரசங்கமே செய்து முடித்தார். சூழ்ந்திருந்த கூட்டத்தில் அநேகர் காணாமற் போயினர்.

அங்கே எஞ்சி நின்றவர் கேள்வி கேட்ட அப்பு மாத்திரந்தான்.

மாஸ்ரருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. தனது தேவைக்கான கேள்விகளை அப்புவிடம் கேட்டு வைத்தார்.

"அப்பு உங்கட பிள்ளையள் எல்லாம் பள்ளிக்கூடம் போறாங்களா?"

"மூத்தவங்களுக்குப் படிக்கும் வயது கடந்து போச்சு. ஒருத்தி கலியாணம் முடிச்சிட்டாள். மூத்தவன் படிப்பை முடிச்சுப் போட்டு ஒரு கடையில வேலை செய்யிறான். இளையவன் இங்கதான் நிண்டான்...!" என்று இழுத்தபடி சுற்று முற்றும் பார்த்தார். அவனைக் காணவே இல்லை.

"அவனைப் பள்ளிக்கூடம் அனுப்புங்கோவன்." மாஸ்ரர் கேட்டார்.

"எனக்கு அனுப்ப விருப்பந்தான். ஆனால் அவன்தான்...!"

ஏதோ ஆழ்ந்த உணர்வுகளின் உறுத்தல்களால் முதியவரின் பார்வை மாஸ்ரரைக் கூர்ந்து நோக்கியது.

மாஸ்ரருக்கு முதியவரின் பார்வையும், அவரது மகன் பாடசாலைக்குச் செல்ல விரும்பாமைக்கான காரணமும் உடனடியாகப் புரியவில்லை.

நீண்ட சிந்தனைக்குப் பின் அப்புதான் பேசினார்.

"பள்ளிக்கூடம் போய்வந்த என்ட மகன் ஒருத்தன் காணாமற்போய் இப்ப அஞ்சு மாதமாப்போச்சு. எங்க போனானெண்டு தெரியாது!"

அவரது கண்கள் கலங்கின.

வேதநாயகம் மாஸ்ரர் சுற்று முற்றும் பார்த்தார். தான் கொண்டுவந்த அந்தப்படிவத்தில் எதனைப் பதிந்து கொள்வதென்று அங்கலாய்த்தார்.

பள்ளிக்குப் போகாமல் நிற்கும்- இருக்கும் விளையாடும் இவர்களைத் தவிர, எப்போதோ காணாமற் போனவர்களையும் சேர்த்துக் கணக்கெடுக்க வேண்டும் என்றும் மாஸ்ரர் எண்ணிக் கொண்டார்.

சிறுவர்களைத் துன்புறுத்தல்,

சிறுவர்களை வேலைக்கமர்த்தல்,

சிறுவர்களைப் பாலியலில் ஈடுபடுத்தல்,


எல்லாமே தவறுதான். தண்டனைக்குரிய குற்றந்தான்.

முகாமின் இறுகிய எல்லைகள், சிறைச்சாலையாகத் தோன்ற மாஸ்ரர் மிகமிக விரைவாக முகாமை விட்டு வெளியேறினார்.

எங்கோ வேட்டுச் சத்தங்கள் கேட்டுக் கொண்டு இருந்தன.

# குரல்

த.தியாகராஜன் -ஜப்பான்



அலுவலகம் முடிய இன்னும் ஒரு மணித்தியாலம் இருக்க ரவிச்சந்திரன் மேசையில் உள்ள கோப்புகளை பார்ப்பதில் ஈடுபட்டிருந்தான். பக்கத்து மேசை மாணிக்கவாசகன் கடிகாரத்தைப் பார்த்துவிட்டு, மனதுக்குள், "இன்னும் ஒரு மணிநேரம் கிடக்கு" என்றபடி அவனது மேசை வலதுப்புற இழுப்பறையிலிருந்து 'தினமுரசு' பத்திரிகையை எடுத்து அரசியல் தொடரை விட்ட இடத்திலிருந்து வாசிக்கத் தொடங்கினான்.

ரவிச்சந்திரனின் செல்லூலர் மணியடித்தது. யாழ்கோட்டைத் தாக்குதலில் மூழ்கியிருந்த மாணிக்கவாசகன் ஒருமுறை தலையை நிமிர்த்தி பார்த்துவிட்டு மீண்டும் பத்திரிகை வாசிக்கத் தொடங்கினான்.

"ஹலோ... ரவி ஹியர்...!" இது ரவிச்சந்திரன். மறுமுனையில் இனிமையான பெண் குரல் ஒன்று, "ஹலோ நான் கோமதி பேசுறன். மிஸ்டர் நீலன் இருக்காரே?" என்றது.

ரவிக்கு கோபம் வந்தாலும், அந்தக் குரலின் இனிமையில், 'சரி இவளுடன் கொஞ்சம் பேசிப்பாப்பம்' என்றெண்ணியவனாக,

"ஹலோ கோமதி! மிஸ்டர் நீலன் பார்லிமெண்ட் கேன்டினில் டீ குடித்துக் கொண்டிருப்பார். இங்கு இல்லை," என்றான். கொஞ்சமாக சிரித்து.

மறுமுனையில் கோமதி கலகலவென சிரித்துவிட்டு, "மிஸ்டர் ரவி நான் ஒண்டும் எம்.பி நீலனைக் கேட்கல்ல; நீங்கள் சொன்னாலும் இல்லாவிட்டாலும் அவைக்கு இப்ப அதான் வேலை. நான்கேட்டது மிஸ்டர் நீலன் சுந்தரலிங்கத்தை!" என்றாள்.

"ஓ... அப்படி யாரும் இங்கில்ல ஐ யாம் சொறி." என்றான்.

"மிஸ்டர் ரவி நீங்கள் நல்லா ஜோக்கடிக்கிறியள். யாழ்ப்பாணமே ஊர்?" என்றாள்.

"ஏன் இப்ப யாழ்ப்பாணத்து சனங்கள் ஜோக்கடிக்கிற நிலமையிலேயே இருக்கிறவயள்? நான் மட்டக்களப்பு!" என்றான் ரவி. பக்கத்து மேசை மாணிக்கவாசகன் ரவியின் பக்கம் திரும்பி பார்த்துக் கொண்டிருந்தான். ரவி அவனைப் பார்ப்பதை அவதானித்துவிட்டு, திரும்பவும் பத்திரிகை வாசிக்கலானான். மாணிக்கவாசகன்.

அவள் "ஓம் மிஸ்டர் ரவி. அங்கு பிரச்சினையால்தான் நாங்களும் கொழும்பு வந்தவை. இங்கு வந்ததும் அப்பாவும் இறந்துட்டார். நான் மட்டும்தான் வீட்டில இருக்கிறன். எங்க சனங்களெல்லாம் வெளிநாட்டில இருக்கினம். அதான் இந்த வீட்டை வித்துப்போட்டு வெளிநாடு போகலாம் என்று யோசிக்கிறன். மிஸ்டர் நீலன்தான் எல்லா ஒழுங்கும் செய்யுறன் என்றார். அவர் கொடுத்த நம்பருக்குத்தான் நான் எடுத்தனான். சரி உங்களுடன் கதைத்ததில் ரொம்ப சந்தோஷம். நான் வைக்கிறன்!" என்று வைத்துவிட்டாள்.

ரவிக்கு, நடந்தவை கனவா நனவா என்ற வியப்பில் அவனது செல்லூலரை பார்த்துக்கொண்டிருந்துவிட்டு 'ப்ச்... என்று மேசையின் மேல் ஃபோனை வைத்தான்.

மணியை அவன் அறையில் இறக்கி விட்டு தன் அறைக்கு வந்த ரவிக்கு அதே குரல் நினைவுதான். குளிக்கும்பொழுது, சாப்பிடும் பொழுது, படுக்கைக்கு வந்த பொழுதும் ஒரே நினைவுதான். 'அவள் முகம் தெரியாது, அந்தக் குரலை மட்டும்தான் கேட்டிருக்கிறோம். நாம் ஏன் அவளை இவ்வளவு நினைக்க வேண்டும்?' என்று மனதுக்குள் கேட்டுக்கொண்டாலும் 'ச்சா... என்ன இனிமையான குரல்' என்று நினைத்தபடி தூங்கிவிட்டான். ஆயிரமாயிரம் வண்ணத்துப் பூச்சிகளுடன் பறப்பதுபோல் கனவு கண்டு காலையில் எழுந்து வழமை போல் அலுவலகம் புறப்பட்டான்.

வழியில் கொஞ்சம் அழகான பெண்களைக் கண்டாலும் கோமதி இவள்போல் இருப்பாளா? அல்லது அவள்போல் இருப்பாளோ? என்று எண்ணியப்படியே பத்து நிமிடம் தாமதமாக வந்து அவனது கதிரையில் அமர்ந்தான்.

சரியாக நாலரை மணி. செல்லூலர் அழைத்தது. ஒரு பதற்றத்துடன் செல்லூலரை எடுத்து காதில் வைத்த ரவிக்கு தன் காதுகளையே நம்பமுடியவில்லை. கோமதியின் குரல், அதன் பின்னர் பல நாட்களாக அடிக்கடி செல்லூலர் சிணுங்கியது.

அன்று படு சந்தோஷமாக விசிலடித்துக் கொண்டு அலுவலகம் வந்து, காலால்தன் கதிரையை இழுத்துவிட்டு ஸ்டைலாக அமர்ந்த ரவி மணியின் பக்கம் திரும்பி "ஹலோ மச்சான் மணி! வெரி வெரி குட் மோணிங்" பதிலுக்கு சொன்ன மணி "என்ன படு குஷியாய் இருக்கிறீர்? என்ன விஷயம்?" என்றான் "சஸ்பென்ஸ் நான் ஈவினிங் செல்லுறன்!" என்றப்படி ரவி வேலையில் கவனம் செலுத்தினான்.

மாலை இருவரும் அலுவலகம் முடிந்து வெளியில் வரும்பொழுது மணி, "என்ன சஸ்பென்ஸ் சொல்லுமன்?" எனக் கேட்டதும். ரவி "சொல்லுறன். சரி உன்னிட்ட புதுச் சட்டை ஏதும் இருக்கே?" என நக்கலாக கேட்டான். பிறகு அவனே "மச்சான் மணி, நாளைக்கு உன்னையும் கூட்டி வாறன் என்று சொல்லியிருக்கிறன். அதான் சஸ்பென்ஸ். தினமும் உடுத்துற பழையத உடுக்காம புதிதா உடுத்திவா- என்ன!" என்று ஜோக்கடித்தான்.

விடுமுறை நாட்களில் பத்து மணிவரை தூங்கும் ரவி, அன்று அதிகாலையில் எழுந்து இரண்டுமுறை முகச்சவரம் செய்து வாசனை பூச்சுக்கள் எல்லாம் முடிந்து, சலவையிலிருந்து எடுத்துவந்திருந்த் துணிகளை உடுத்தி, ஒருவாறு ஒன்பது மணிக்கு கிளம்பினான். அவன் சொன்ன இடத்தில் மணி காத்திருந்தான். அவனையும் ஏற்றிக்கொண்டு புறப்படுகையில் "எங்க மச்சான் வீடு?" என்றான் மணி. "கிருலப்பனையில" என்று சொன்ன ரவி அடுத்த முப்பதாவது நிமிடம் அந்த விசாலமான வீட்டின் முன் தனது பைக்கை நிறுத்தினான்.

பெரிய கேட்பூட்டியிருந்தது. பைக்கை விட்டு இருவரும் இறங்கினார்கள். "எப்படி மச்சான் கோமதியின் வீடு?" என்றப்படி தனது சட்டை மடிப்புக்களை சரிசெய்துக் கொண்டான் ரவி.

பிறகு கேற்றுக்கு பக்கத்திலிருந்த அழைப்பு மணியை அழுத்திவிட்டு மணியின் பக்கம் திரும்பி "மணி ஹீரோ போல இருக்கிறனா? எப்படி மச்சான் என்ட கெட்அப்?" என்று கேட்டான்.

"உனக்கென்ன மச்சான்- புடிச்சாலும் புளியங் கொம்பொன்றத்தான் பிடிச்சிருக்கிற!" என்று சொல்லவும், கேற்றின் பக்கத்திலிருக்கும் சிறிய கதவு திறக்கவும் சரியாக இருந்தது.

வெளியில் வந்த பெண். என்னவென்பதுப்போல் இருவரையும் ஏறிட்டாள்.

"நான் ரவிச்சந்திரன்!" என்றதும்

"இருங்க கேற்ற திறந்து விடுறேன்," என்று சின்னக் கதவை பூட்டிக்கொண்டு கேற்றை திறந்தாள்.

மோட்டார் சைக்கிளை உள்ளே எடுத்து நிறுத்திவிட்டு இருவரும் கதவருகில் சென்றார்கள். கதவை தொடுமுன்பே கதவு திறந்தது.

திறந்த பெண்ணுக்கு சுமார் ஐம்பது ஐம்பத்தைந்து வயதிருக்கும்.

"வாங்க வாங்க மிஸ்டர் ரவி!" என்றாள்.

'அதே குரல்!'

ரவிக்கு பூமி நழுவுவது போலிருந்தது.

"நான் தான் தம்பி கோமதி- உள்ள வந்து இருங்கோ!" என்றபடி "சரசு இரண்டு கூல் ரிங்ஸ் எடுத்துவா!" உள்பக்கம் திரும்பி கட்டளையிட்டாள்.

ரவிக்கு ஒன்றும் விளங்கவில்லை. முகப்பில் இருந்த கதிரையில் அமர்ந்தபடி அவளை ஏறிட்டான். அவள் "ஓம் தம்பி ரவி அவர் போனதிலிருந்து நான் மட்டும்தான் இங்க இருக்கிறன். மகனும், மருமகளும் அவையோட கனடாவில் வந்து இருக்கச் சொல்லி சொல்லுகினம். அதான் இதையெல்லாம் வித்துப்போட்டு போகலாமென்றிருக்கிறன்," என்று பேசிக்கொண்டே போனாள்.

கன்னியைப் பார்க்கவந்து கண்ணிவெடியில் கால்வைத்தவன்போல் ரவி அமர்ந்திருக்க, கவுண்டமணி செந்திலைப் பார்ப்பது போல் மாணிக்கவாசகன் ரவிச்சந்திரனைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

# செய்தி

வெண்ணிலா சூரியகுமாரன் -வன்னி



தான் வாசிக்கப்போகும் செய்தி கையில் தரப்படுவதற்காய் அவன் காத்துக்கொண்டிருந்தான்.

அவன் - வசந்தரூபன். வயது முப்பத்தியொன்று. மெலிந்த உயரமான தோற்றம். மலர்ச்சியான முகம். இவை தவிர இன்னொரு அடையாளமும் அவனுக்கு இருக்கிறது.

வானொலியைத் திருப்பினால்-

"செய்திகள்... வாசிப்பது- வேலாயுதம்- வசந்தரூபன்..." என்ற குரலை அடிக்கடி கேட்டிருப்பீர்கள். இதயத்தை வருடும் இதமான குரல் அவனுடையது. தேன் தடவிய மென்மையான அவனுடைய குரலைக் கேட்டு கிறங்கிப்போய் தினமும் அவனுக்கு கடிதம் போடும் வானொலி நேயர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள்.

அவன் அந்தக் கூடத்தில் நிரஞ்சனை எதிர்பார்த்துக்கொண்டு நின்றான். அவனைக் கடந்து நடந்து போகிறவர்கள் புன்னகையோடு காலை வணக்கம் சொல்லிப் போனார்கள்- கண்ணாடிக் கதவுகளுக்கு அப்பால் கடமையில் இருக்கும் தொழில்நுட்பவியலாளர்கள்...

அந்த வழுவழுத்த தரை... அந்தக் கூடம்... அதில் அவன் இருப்பு... இது நம்ப முடியாத கனவாகவே இருந்தது. ஆனால் இன்று அந்தக் கனவு நனவாக மாறிவிட்டிருந்தது.

இந்த நிலைக்கு வர அவன் எத்தனை பாடுபட்டிருக்கிறான். அவனுடைய எத்தனை வருடகால கனவு இந்த அறிவிப்பாளர் பதவி... அன்றைய சரா இமானுவேல், பி.எச். அப்துல் ஹமீட்டில் தொடங்கி இன்றைய சிவகுமார், தயானந்தா வரை எத்தனை விதமான வசீகரக் குரல்கள்... இன்றைக்கு அவர்களில் ஒருவனாக அவனும்...

வசந்தரூபன் தட்டுத்தடங்கல் இல்லாமல் ஏற்ற இறக்கத்துடன் செய்தி வாசிப்பது காற்றில் மிதந்து பரவி எத்தனை பேரின் காதுகளை இதமாக வருடுகிறது.

புதுக்குடியிருப்பிலிருந்து தங்கை துஷி கடிதம் எழுதுவாள். "உன் குரலுக்கே இங்கே பயங்கர விசிறிகள் இருக்கினம். உன் குரலில் அத்தனை மயக்கமாம்."

அதை வாசிக்கும்போது சிரிப்பு வரும். கொஞ்சம் கர்வம் ஏற்படும்.

அக்காகூட எழுதும் கடிதங்களில், "ரேடியோவில் உன் குரலை கேட்பதால் நீ எங்களைவிட்டு அவ்வளவு தூரம் போய் இருப்பது ஒரு குறையாகவே தெரியவில்லை!" என்று குறிப்பிடுவாள்.

"இந்தா வசந்தன். செய்தியில் கடைசி நேரம் ஏதோ சேர்க்க வேண்டி வந்ததாம். இப்பதான் டைப் அடிச்சு தந்தினம்."

நிரஞ்சன் தந்துவிட்டுப் போன காகிதத்தைப் பார்த்தான். இரண்டு தடவை படித்துப் பார்க்க வேண்டும். அந்தச் செய்தி அறிக்கையில் தன் ஊரின் பெயரைப் பார்த்ததும் வீட்டு ஞாபகம் வந்து நெஞ்சில் நிறைந்து கொண்டது.

வசந்தரூபன் சொந்த இடம் புதுக்குடியிருப்பு. அவனின் அன்பான உறவுகள் இன்னமும் அங்குதான் இருக்கிறார்கள். இந்த அறிவிப்பாளர் பதவி அவனுடைய இலட்சியம். அதனால்தான் அந்த வீட்டை விட்டு வெளியே வர நேர்ந்தது.

அவன் இந்த வேலைக்கு வருவதில் அம்மாவுக்குச் சிறிது மனவருத்தம். கொழும்பில் போய் தனிய எப்படி இருப்பாய்? என்று ஆரம்பத்தில் மறுத்துவிட்டாள். அம்மாவை எத்தனையோ சொல்லி சமாதானப்படுத்த வேண்டியதாயிற்று. அவனுக்காக அம்மாவிடம் துஷிதான் அதிகம் வாதாடினாள். எப்போதும் துஷி அண்ணாவின் பக்கம்தான்.

"அண்ணாவின்ர ஆசையை தடுக்காதேங்கோம்மா. எல்லாராலும் அந்த இடத்துக்குப் போக ஏலாது. அதுக்கு ஒரு தனித்திறமை வேணும்.." அப்பாகூட அவனுக்கு பரிந்து கொண்டு வந்தார்.

"எங்களைவிட்டு அவன் தூரப்போனாலும் அவன்ர குரலை ரேடியோவில கேட்டுக் கொண்டிருக்கலாம்தானே? அவன் போகட்டும் விடு." எல்லோரும் அவன் சார்பாக பேசி பேசியே அம்மாவை கரைய வைத்துவிட்டார்கள்.

அவனுடைய அதிஷ்டம் அவன் ஆசைப்பட்ட பதவி கிடைத்தது. இடையே எத்தனை வருட முயற்சி.

அவனுடைய நிழ்ச்சியையும் பற்றி துஷி விமர்சித்து கடிதம் எழுதுவாள். அவளின் கடிதம் வந்தால் எத்தனை சந்தோஷமாய் இருக்கும். ஒவ்வொரு நிகழ்ச்சிகளையும் அக்கறையாய் இன்னும் சிறப்புடன் தயாரிக்க வேண்டும் என்ற வேகம் வரும்.

பணி தவிர்ந்த நேரங்கள் அவனுக்கு சோதனை தருபவை. வீட்டு நினைவை மனம் முழுவதும் உள்வாங்கிக்கொள்ளும் கணங்கள். ஒவ்வொருவரையும் நினைத்து மனம் ஏங்கும்.

கொழும்பில் தனியே இருப்பது சிரமம்தான். இந்த ஐந்தாறு வருடங்களில் அம்மா, அப்பா, துஷியை தன்னுடன் கூட்டி வந்து வைத்திருக்கவே மிகவும் விரும்பினான். ஊரில் துஷிக்கு மும்முரமாய் கல்யாணம் பேசுகிறார்கள். சிலவேளை இந்த தைக்கு முற்றாகி விடக்கூடும். துஷியின் கல்யாணத்துக்கு அவனால் ஊருக்கு போக முடியுமோ என்னவோ! ஆனாலும் கல்யாணத்துக்கு கட்டாயம் போக வேண்டும். அந்த கல கலப்பான சந்தோஷத்தை இழந்துவிட மனம் வராது.

அவன் ஊருக்குப்போய் மூன்று வருடங்களுக்கு மேலாகிறது. கொழும்பிலிருந்து புதுக்குடியிருப்புக்கு போய் வரும் பிரயாணம் சுலபமானது அல்ல. தவிரவும் நீண்டநாள் லீவு எடுத்துக்கொள்ள முடியாது.

போன தீபாவளியின்போது அம்மா வவுனியாக்கு வந்திருந்தாள். அவன் நான்கு நாட்கள் அம்மாவுடன் போய் நின்றுவிட்டு வந்தான். அம்மாவுடன் நின்றவரை ஒரே வீட்டுக்கதைதான்.

அப்பாவை...அக்கா, அத்தான் குழந்தைகளை... துஷியை... பார்க்க எத்தனை ஆசை... துஷியாவது அம்மாவுடன் வந்திருக்கக் கூடாதா என்று மனம் ஏங்கியது.

வீட்டு நினைவு வந்தாலே இதே ஏக்கம் தான். நினைத்தவுடன் போக முடிகிறதா... வரமுடிகிறதா....நினைவில் மட்டும்தான் எல்லா உணர்வுகளும்...சொந்த ஊர்...வீடு வாசல்....சொந்த உறவுகள்...நட்பு....சுற்றம்... எல்லா நேசமும் நினைவுகளில் மட்டுமே...

ஒரு வினாடி அவன் மனது கனத்துப் பாரமாகியது. சொல்லத் தெரியாத ஒரு கவலை நெஞ்சுக்குள் சூழ்ந்து கொண்டது. இந்த பிரிவு மிகவும் வேதனை தருவது. அனுபவிப்பவர்களால் மட்டுமே புரிந்து கொள்ளக் கூடிய நுட்பமான உணர்வு...

அவன் மீண்டும் அந்த செய்தியில் பார்வையைப் பதித்தான். ஐந்து நிமிடங்களின் பின் அவன் செய்தி வாசிக்க அழைக்கப்பட்டான். அறைக்குள் போனதும் அத்தனையும் மறந்து போயிற்று.

வசந்தரூபனின் குரல் பிசிறின்றி இழைந்து இழைந்து ஒலித்தது. செய்தியின் ஒரு பகுதி வாசிக்கும்போது மட்டும் குரலில் சிறிது தழும்பல் இருந்தது.

"நேற்று மதியம் புதுக்குடியிருப்புக்கு ஒரு மைல் தூரத்தில் இரணைப்பாலை வீதியில் உள்ள புலிகளின் பிரதான முகாம் விமானப்படையின் உதவியுடன் குண்டுவீசி தாக்கி அழிக்கப்பட்டது. இதில் ஆறு புலிகள் கொல்லப்பட்டார்கள்."

வசந்தரூபன் செய்தி வாசித்துவிட்டு அறைக்கு வெளியே வந்தான். இன்று மத்தியானம் ஒரு நிகழ்ச்சித் தயாரிப்பு தொடர்பாய் ஒலிப்பதிவுக் கூடத்தில் வேலை இருக்கிறது. அவன் ஒலிப்பதிவுக் கூடத்தின் கண்ணாடிக் கதவு திறந்து உள்ளே போனான்.

★★

நேற்று மதியம் புதுக்குடியிருப்புக்கு ஒரு மைல் தூரத்தில் இரணைப்பாலை வீதியில் உள்ள அவன் வீட்டில் குண்டு விழுந்ததில் அவனின் அம்மாவும், அக்காவும் அந்த இடத்திலேயே இறந்துபோனதாகவும் அவனுடைய அருமையான துஷி படுகாயமடைந்து புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் இன்னும் மூன்று நாட்களில் அவனுக்கு ஒரு செய்தி கிடைக்கப்போகிறது. அது இப்போது அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை.


படிப்பகம்

www.padippakam.com

# அடையாளம்

## இலக்கிய நயம்

## தருவது ரசிகன்



"யாழ்ப்பாண இராச்சியம்
தாழ் பணிய வேண்டும்!"
அந்நியத் தளபதி
ஆணையிட்டான்!
"வாள் ஏந்தும் தமிழர்
தாழ் பணியமாட்டார்!"
யாழ்ப்பாண மன்னன்
சங்கிலியன்
சூளுரைத்தான்!
"வாள், அம்பு, வில்
உங்களிடம்!
துப்பாக்கிகள்
பீரங்கிகள்
எங்களிடம்!"
அந்நியத் தளபதி
கொக்கரித்தான்!
"தாயகப் பற்றும்
தளராத மனதும்
எங்களிடம்!"
சங்கிலியன்
தோள்கள் பூரித்தன!
"யாழ்ப்பாணத்தின்
கடைசி மன்னன்
நீயாகத்தான்
இருக்கப்போகிறாய்!"
சங்கிலியன் விழிகள்
சிவந்தன!
"கடைசி மன்னன்
நானாக இருக்கலாம்!
கடைசி வீரன்
நானாக இருக்க முடியாது!
இன்று வித்தாக
விழுபவர்கள்-நாளை
வீர முத்துக்களாக
எழுவார்கள்!".
"எச்சரிக்கிறாயா
மன்னா?"
"இல்லையடா!
எதிர்கால சரித்திரம்
எப்படியிருக்கும்
என்பதை இப்போதே
கூறிவைக்கிறேன்!"
"பணிந்து நடந்தால்
ராச்சியத்தை
நீ வைத்திருக்கலாம்!
நாம் சொல்கிறபடி
நிர்வாகத்தை நடத்தலாம்!"
அந்நியத் தளபதி
ஆசை வலை விரித்தான்.
"மக்கள் அடிமைகள்
மன்னன் பொம்மை!
என்முதுகில் ஏறியே
என் மக்களை
மேய்க்க நினைக்கிறாய்!"
சங்கிலியனின்
இரத்தம் கொதித்தது!
பேச்சுவார்த்தை என்பதால்
போத்துக்கேய தளபதியின்
மூச்சு நிறுத்தப்படவில்லை!
பொறுமை காத்தான்
சங்கிலி மன்னன்!
"பொங்காதே மன்னா,
மங்காத செல்வம்
உனக்கு தரப்படும்!
உன் மக்களுக்கும்
உகந்த சலுகைகள்
காத்துக் கிடக்கின்றன!
"என் மக்களை
விற்கச் சொல்லுகிறாய்!
சுதந்திரத்தை தாருங்கள்
எலும்புத் துண்டுகள்
தருகிறேன் என்கிறாய்!
ஆடைகளை துறவுங்கள்
அமுது தருகிறேன்
என்று கூறுகிறாய்!
நிர்வாணமாய் நிற்க
நாங்கள் சம்மதித்தால்
எங்கள் நகரங்களை
நிர்மாணித்து தருகிறேன்
என்று கூறுகிறாய்!
கோவணத்தையும்
துறந்துவிட்டு
குனிந்து நின்றால்
கூட்டாளியாக
இருக்கலாம் என்கிறாய்!"
சங்கிலியன்
உதடுகள் துடித்தன!
அவன் வார்த்தைகள்
நெருப்புத் துண்டங்களாக
வந்து விழுந்தன!
அந்நியத் தளபதியிடம்
அலட்சியப் புன்னகை.
"நீ மறுத்தால் என்ன
உன்னவர்கள் உள்ளனர்.
தங்கள் உள்ளங்கைகளால்
எங்கள் கால்களை
தாங்குவர்!"
போத்துக்கேய தளபதி
போய்விட்டான்!
அக்டோபர் 28, 1591
ஆக்கிரமிப்பதற்காக
அந்நிய மரக் கலங்கள்
யாழ் கடலோரியில்
அணிவகுத்து வந்தன!
43 மரக்கலங்கள்
250 வள்ளங்கள்
பெரிய பீரங்கிகள்
துப்பாக்கி ஏந்திய
போத்துக்கேய சிப்பாய்கள்!
தகவல் வந்தது
சங்கிலியன்
கலங்கவில்லை!
எதிர்த்து நின்றது
மறவர் படை!....
கொதித்து நின்றது
அவர் தம் வீரம்!
"சரணடைந்தேன்
உன்னை!"
குரல் கேட்டு
நிமிர்ந்தான் சங்கிலி!
"போத்துக்கேயனுடன்
பேரம் பேசிய
காட்டிக் கொடுக்கும்
கயவனல்லவா நீ"
என்று கேட்டான்
வந்தவனை நோக்கி!
"மன்னித்துக் கொள்
மன்னா!
எண்ணித் திருந்தி
உன்னிடம் வந்தேன்!"
என்றான்!"
தாழம்பூவுக்குள்தான்
பாம்பு இருக்கும்
வாய் ஜாலத்துக்குள்
விஷம் இருக்கும்
என்பதை மறந்து
சங்கிலி மகிழ்ந்தான்!
"வா நண்பா!
ஒன்றாகி நிற்போம்!"
மார்புறத் தழுவினான்!
தழுவியவன் பிடி
இறுகியது!
வாஞ்சைப்பிடி என்று
நினைத்தான் சங்கிலி!
வஞ்சகப் பிடி என்று
உணர்ந்து விழித்தபோது
வஞ்சகனுடன் வந்தவர்கள்
வளைத்துக் கொண்டனர்!
"மன்னன் உயிர்
தேவையானால்
விலகிப் போங்கள்"
சங்கிலியனின் காவலர்களை
வஞ்சகப்படை எச்சரித்தது!
சங்கிலியன் என்ற
அடங்காத வீரன்
சிறைப்பட்டான்!
எதிரியால்
நெருங்க முடியாதவன்
தன் இனத்தானால்
நொருங்கிப் போனான்!
போர்த்துக்கேய தளபதி
சங்கிலியனை
சிரச் சேதம் செய்தான்!
தலை வணங்காத
உன் தலையை
கொய்ய வருத்தம்தான்!
ஆனால் நீயிருந்தால்
எங்களுக்கு நல்ல
அடிமைகள்
இருக்கமாட்டார்கள்!
மன்னா! உன்போன்ற
வீரர்கள் பிறந்த
மண்ணில் எப்படி
பதர்கள் முளைத்தன?
எப்படி மன்னா
ஏமாந்து போனாய்?"
சங்கிலி என்னும்
புவிராச பண்டாரம்
பரராசசேகரன்
சாவு முனையிலும்
முறுவலித்தான்!
"மக்களே போலிருப்பர்
மக்களே அல்ல!
நம்மவர் போலிருப்பர்
நம்மவர் அல்ல!
கண்ணிருக்கும், காதிருக்கும்
கையிருக்கும், காலிருக்கும்
மூக்கிருக்கும், முகமிருக்கும்
வாயிருக்கும், வயிறிருக்கும்
ஆனால் மனிதரேயல்ல!
அவர்கள்தான் கயவர்கள்!
அடையாளம் காண
தவறியதால்
ஏமாந்து போனேன்!"
சங்கிலியன் மட்டுமா
திருவள்ளுவரும் கூறுகிறார்.
"மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாங் கண்டது இல்"
அதிகாரம்: 108: குறள் 1071

## சிந்தியாள் பதில்கள்

◆❑

★ இடமறியாமல் பேசுபவர்களை என்ன செய்யலாம்? பலர் முகம் சுளிப்பதைக் கூட பொருட்படுத்தவும் மாட்டாதவர்களாக இருக்கிறார்களே?

வி. தியாகு, மன்னார்.

*தர்ம அடி வாங்க ஆசைப்படுகிறார்கள் என்று அர்த்தம்! சிலரது தவறுகள் சுவாரசியமாகச் சிரிக்கவும் வைக்கும்.*

*ஒரு சிறுவன் அடிக்கடி சாக்லெட்கேட்டு அம்மாவைத் தொல்லைப்படுத்துவான்.*

*அம்மா அவனிடம் கோபமாக,*

*"நிறைய சாக்லேட் சாப்பிட்டால் வயிறு வீங்கிப் பெரிதாகிவிடும். ஜாக்கிதை!" என்று கூறினார்.*

*அன்று பின்னேரம் அம்மாவும் பிள்ளையும் வீடொன்றுக்கு விருந்துக்காகப் போனார்கள்.*

*விருந்துக்கு வந்திருந்தவர்களில் ஒரு நிறைமாதக் கர்ப்பிணியும் இருந்தார்.*

*சிறுவன் நேராக அந்தக் கர்ப்பிணியிடம் போய், "உன் வயிறு எதனால் இப்படி இவ்வளவு பெரிதாகியது என்று எனக்குத் தெரியுமே!" என்று சிரித்தபடி கூறினான்.*

◆❑

★ விஜயகாந்தின் 'வீரம் வெளஞ்ச மண்' எப்படி இருக்கிறது?

பாத்திமா ருஸ்தா, மொரட்டுவ.

*எதிர்பார்த்தளவு சாரம் இல்லை.*

★ ஐ.தே.கட்சி ஆதரவு வழங்காவிட்டாலும் தீர்வு காணப்படும் என்கிறாரே ஜனாதிபதி?

செ. தனபாலசிங்கம், கொழும்பு-10.

*எப்போது? எந்த முறையில்? என்பது தானே பிரச்சனையே!*

◆❑

★ சிங்கள இனவாதிகளும், தமிழ் இனவாதிகளும் தீர்வு யோசனைகளை எதிர்ப்பதாக அமைச்சர் மங்கள கூறியிருக்கிறாரே, அது தவிர அம்மையார் 'வந்தேறு குடிகள்' என்று கூறியதையும் தமிழ் இனவாதிகள்தான் பெரிதாக்குகிறார்களாமே?

உ. ராமேஸ்வரன், திருமலை.

*வந்தேறுகுடிகள் என்றோ, இந்த நாட்டுக்குச் சொந்தமில்லாதவர்கள் என்றோ தமிழர்கள் பற்றி கூறியது சரியா தவறா என்பதைக் கூறாமலேயே, அக்கூற்றைக் கண்டிப்பதை மட்டும் கண்டித்திருக்கிறார் அமைச்சர். இதுவரை வருத்தம் தெரிவிக்காமல் இருக்கிறார் ஜனாதிபதி. இப்படியான இலட்சணத்தில் தகுந்த தீர்வைத் தருவர் என்று நம்பச் சொல்கிறார்கள். நம்பாதவர்களை தமிழ் இனவாதிகள் என்கிறார்கள். அமைச்சர் அஷ்ரப்கூட தீர்வுப் பொதியை சாடியுள்ளாரே! அவரை எப்படி அழைப்பதாம்?!*

◆❑

★ சிந்தியா! கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடிக்காமல் இருந்திருந்தால்?

பா. சிவசுப்பிரமணியம், வவுனியா.

*ஒரு ஜோக் கதை:*

*கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தபோது, அங்கு வாழ்ந்துவந்த செவ்விந்தியர்களைச் சந்தித்தார்.*

*"மனித நாகரிகம் எவ்வளவோ முன்னேறிவிட்டது. நீங்கள் அதை அறியாமல் இருப்பதை நினைத்து வேதனைப்படுகிறேன்," என்று கொலம்பஸ் கூறினார்.*

*உடனே செவ்விந்தியர்கள்: "நாகரிகமில்லாமல் இருப்பதற்காக நாங்கள் வருத்தப்படவில்லை. நீங்கள் எங்களைக் கண்டுபிடித்து விட்டதை நினைத்துத்தான் கவலைப் படுகிறோம்!" என்று சொன்னார்களாம்.*

*கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்ததுக்காக இன்று நாங்களும் தான் கவலைப்படவேண்டியுள்ளது!*



★ ரோஜா மீண்டும் கவர்ச்சியாக நடிப்பாரா?

சஹீனா பேகம், புத்தளம்.

*பார்!*

◆❑

★ தணிக்கையையும் மீறி கவர்ச்சிக் காட்சிகள் படங்களில் எப்படி நுழைகின்றன?

எம். சர்த்தார், தெகிவளை.

*சுந்தரிகளின் அழகைக் கண்டு கத்தரிகளும் மெய்மறக்கும்!*

◆❑

★ டியர் சிந்தியா! மருத்துவர், வழக்கறிஞர் என்ன ஒற்றுமை?

பி. மாதவன், மட்டக்களப்பு.

*ஒற்றுமையைச் சொன்னால் உதைக்க வருவார்கள். எங்கோ படித்த கருத்தைத் தருகிறேன். கப்பென்று பற்றிக்கொள்க.*

*'ஒரு வழக்கறிஞர்*
*தவறு செய்தால்*
*ஒரு முழம்*
*கயிறு நஷ்டம்!*
*ஒரு மருத்துவர் தவறு செய்தால்*
*ஆறடி*
*நிலம் நஷ்டம்!*
*ஓர் ஆசிரியர் தவறு செய்தால்*
*ஒரு தலைமுறையே*
*நஷ்டம்!'*

◆❑

★ எதிரியையும் புகழ்வதுதானே வீரம்! அந்தப் பண்பு இங்கில்லையே?

செ. சித்திரநேசன், திருமலை.

*எதிரியிடம் திறமை இருந்தால் புகழ்வது வீரம். திறமையே இல்லாவிட்டாலும் புகழ வேண்டும் என்று அர்த்தமில்லை.*

*அமெரிக்க ஜனாதிபதி ஐஸன்ஹோவர் சிறந்த இராணுவத் தளபதியாக இருந்து பின்னர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஜனாதிபதியானவர்.*

*அவர் பதவி ஏற்றதும் நிருபர்கள் பேட்டி கண்டனர்.*

*"உலக வரலாற்றில் மிகச் சிறந்த வீராதி வீரர் என்று நீங்கள் யாரைக் கருதுகிறீர்கள்?" என்று கேட்டனர்.*

*அதற்கு அவர் சொன்னார்: "இதுவரை உலகில் தோன்றிய வீராதி வீரன் என்றால் அது நெப்போலியன் மட்டும் தான்!" என்றவர் முகத்தில் ஆதங்கத்துடன்,*

*"என் துரதிஷ்டம்- அவர் எனக்கு முந்தைய காலத்தவராக இருந்துவிட்டார். அவரை எதிர்த்துப் போரிட எனக்கொரு வாய்ப்பு கிடைத்திருக்க வேண்டும் என்று இன்றும் ஏங்குகிறேன்!" என்று கூறினாராம்.*

◆❑



சிவாஜி

★ 'படையப்பா' படத்தில் சிவாஜி சொந்தக் குரலில் பாடுவாரா? 'தேவர்மகனி'ல் பாடினார் அல்லவா?

எஸ். நிலாம், மாத்தளை.

*பாடமாட்டார்! பாவம் தாடியைத் தான் 'படையப்பா'வுக்குப் படையலாக்கிவிட்டார்!*

◆❑

★ வன்னிக்கு நிவாரணம் வழங்குமாறு இலண்டனில் விழிப்புப் போராட்டம் நடத்துகிறார்கள். இங்கே தமிழ்க் கட்சிகள்...??

எஸ். சர்வானந்தன், வவுனியா.

*விழித்தபடி தூங்கும் போராட்டம்!*

◆❑

★ 'ஆ' என்று சொல்லத்தக்க கதை ஒன்று சொல்ல முடியுமா?

எம். சுஹைமிர், பலாங்கொட.

*சொத்தைப் பல்லைப் பிடுங்க டாக்டரிடம் சென்றார் ஒருவர்.*

*அவருடைய ஒரு பல்லைப் பிடுங்கி விட்டு முன்னூறு ரூபாய்க்கு 'பில்' எழுதினார் டாக்டர்.*

*"ஒரு பல் பிடுங்குவதற்கு நூறு ரூபாய் என்றுதானே போர்டில் எழுதி வைத்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார் நோயாளி.*

*அதற்கு டாக்டர் சொன்னார்:*

*"பல்லைப் பிடுங்கும்போது நீ போட்ட அலறலில் வெளியே அமர்ந்திருந்த இரண்டு பேர் பயந்து ஓடிவிட்டார்கள். அவர்கள் தரவேண்டியதையும் சேர்த்து நீதான் தர வேணும்!"*

*டாக்டர் சொல்லாமலேயே இப்போது 'ஆ' என்று திறந்தது நோயாளியின் வாய்.*

## ஸ்போர்ட்ஸ்

### 100 டெஸ்ட்

அவுஸ்திரேலியா கிரிக்கெட் அணியின் கேப்டன் மார்க் டெய்லர் இங்கிலாந்துக்கெதிராக ஆஷஸ் டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் விளையாடியதன் மூலம் 100 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றிய பெருமையைப் பெற்றுள்ளார்.

100வது டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய 5வது அவுஸ்திரேலிய வீரரும், உலகில் 100 டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொண்ட 19வது வீரருமாவார் மார்க் டெய்லர். டெய்லருக்கு முன் அவுஸ்திரேலிய அணி சார்பாக அலன் போர்டர், டேவிட் பூன், ஸ்டீவ் வோவ், இயன் ஹீலி ஆகியோர் மட்டுமே 100 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியவர்கள்.

மேற்கிந்தியத்தீவு அணிக்கெதிராக 1988–89ல் தனது முதல் டெஸ்ட் போட்டியை விளையாடிய டெய்லர் 1994ல் அவுஸ்திரேலிய அணிக்குத் தலைமையேற்றார். ●

### மக்மில்லன் ஓய்வு



தென்னாபிரிக்க அணியின் சகலதுறை ஆட்டக்காரர் பிரையன் மக்மில்லன் சர்வதேசக் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

35 வயதான மக்மில்லன் 38 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 1968 ஓட்டங்களை எடுத்துள்ளார். சராசரியாக ஒரு போட்டிக்கு 39.83 ஓட்டங்களைச் சேர்த்துள்ளார். இவற்றில் 3 சதங்களும் 13 அரைச்சதங்களும் அடித்துள்ளார்.

பந்துவீச்சில் 75 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். 49 கேட்ச்களைப் பிடித்துள்ளார்.

துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு போன்ற சகலதுறைகளிலும் சிறந்து விளங்கும் மக்மில்லனைப்பற்றி, இங்கிலாந்து அணியின் முன்னாள் கேப்டன் மைக் ஆதர்ட்டன் கூறும்போது,

"தென்னாபிரிக்க அணியிலேயே நாங்கள் அதிகம் பயப்படுவது மக்மில்லனைப் பார்த்துத்தான். தனது சகலதுறை ஆட்டத்தால் போட்டியின் போக்கையே மாற்றக்கூடியவர்," என்று தெரிவித்துள்ளார்.

கடந்த சில தொடர்களில் மக்மில்லன் தென்னாபிரிக்க அணியில் சேர்க்கப்படாமல் இருந்தார். இதுவே அவர் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற வழிவகுத்தது. தனது ஓய்வுபற்றி மக்மில்லன பதில் கூறும்போது,

"தென்னாபிரிக்க கிரிக்கெட் தேர்வுக்குழு என்னைத் தொடர்ந்து புறக்கணித்து வந்தது. இதனால்தான் ஓய்வுபெறும் முடிவை எடுத்தேன்," என்றார்.

### உலக சாதனை

உலகிலேயே டெஸ்ட் போட்டிகளில் எல்லா நிலைகளிலும்-அதாவது முதலாவது பேட்ஸ்மனில் இருந்து பதினோராவது பேட்ஸ்மன்வரை விளையாடி உலக சாதனை புரிந்தவர் வினு மன்கட். உலகின் வேறெந்த வீரரும் இப்படி விளையாடியதில்லை.

### இவர் தான் அவர்



ஜவகர்லால் நேரு

### என்னால் முடியும்!

இந்திய அணியில் ஸ்ரீகாந்துடன் சேர்ந்து விளையாடிய தமிழக வீரர் லக்ஷ்மன் சிவராம கிருஷ்ணன். மிகச் சிறந்த சுழற்பந்து வீச்சாளரான இவரது பந்துவீச்சு சிலகாலம் எடுபடவில்லை.

இதனால் இவர் இந்திய அணியில் இருந்து நீக்கப்பட்டார். ஆனால் மறுபடி சேர்க்கப்படவில்லை. மாநில அளவில மட்டும் விளையாடி வருகிறார்.

34 வயதான இவர் இந்த வருட ஆரம்பத்தில், சென்னையில் பயிற்சி பெறவந்த இந்திய அணிக்குப் பந்து வீசினார். குறிப்பாக இவரது பந்து வீச்சை எதிர்கொண்ட டெண்டுல்கர் அசந்து விட்டாராம்.

"சச்சினுக்கு பந்து வீசித் திணறடித்த நான் உலக அளவில் எந்த பேட்ஸ்மனுக்கும் பந்துவீசித் திணறடிக்க முடியும்!" என்று கூறும் சிவராம கிருஷ்ணன் மறுபடி இந்திய அணியில் இடம் பிடிக்க முயன்று வருகிறார்.


படிப்பகம்


www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 37

ஆண்டவரின் மக்கள் என்ற அந்தஸ்தினைப் பெற்றிருந்தபோதும் இஸ்ரயேல் மக்கள் துன்பச் சூழலில் சிக்கித் தவித்தனர். ஆண்டவர் இட்ட கட்டளைகளைக் கடைப்பிடிக்காமல், பல தவறுகளை விடுவதனாலேயே அவர்கள் தண்டனை அடைகின்றனர்.

தாவீது சிக்லாகில் தனது மனைவியர் இருவரையும் உறவினர்களையும் தங்க வைத்திருந்தார். அதேபோல் அவருடைய தோழர்களின் குடும்பங்களும் அங்கேயே இருந்தனர்.

காத்து மன்னன் ஆக்கீசின் அரவணைப்பில் தாவீது இருந்தார். இதேகால கட்டத்தில் பெலிஸ்தியர்கள் இஸ்ரயேலர் மீது படையெடுக்கத் திட்டமிட்டனர். படைத்தலைவர்கள் ஒன்றுகூடியபோது ஆக்கீசுடன் தாவீதும் அவர்தம் தோழர்களும் இருப்பதைக் கண்டனர். தாவீது ஒரு இஸ்ரயேலர் என்பதனை அவர்கள் அறிந்திருந்தனர். இஸ்ரயேலர்மீது போர் தொடுக்கும்போது தங்களுடன் தங்கள் எதிரிகளுள் ஒருவரான தாவீது இருப்பது அவர்களுக்கு உடன்பாடாகத் தென்படவில்லை. ஆகவே தாவீதையும் தோழர்களையும் வெளியேற்றிவிடுமாறு ஆக்கீசைக் கேட்டனர். அவரும் அதற்கு இசைந்தார்.



ஆக்கீசிடமிருந்து புறப்பட்டவர்கள் தங்கள் குடும்பங்களுடன் வந்து சேர்வதற்காக சிக்லாகை வந்தடைந்தபோது, அந்நகரம் தீக்கிரையாக்கப் பட்டிருப்பதைக் கண்டு கலங்கினர். அமலேக்கியர் அந்நகரைத் தாக்கி அழித்துவிட்டதாகவும் அங்கிருந்த மக்களைச் சிறைப்பிடித்துச் சென்றுவிட்டதாகவும் தகவல் கிடைத்தது.

ஓர் எகிப்திய இளைஞனின் உதவியுடன் அமலேக்கியர்கள் விடுதிவிட்டிருந்த இடத்தைத் தாவீதும் தோழர்களும் கண்டு கொண்டனர். சிக்லாகு மற்றும் நெகேபு ஆகிய நகரங்களைக் கொள்ளையடித்துச் சென்ற அமலேக்கியர், வெற்றிக் களிப்பில் வெறியாட்டமாடி மகிழ்ந்திருந்தனர். அனைவரும் நல்ல குடிபோதையில் இருந்தமையினால், தாவீதும் தோழர்களும் மிகச்சுலபமாக அவர்களை முறியடிப்பதில் வெற்றி கண்டனர். அமலேக்கியர் பிடித்துச் சென்ற தமது குடும்பத்தினரையும் ஏனையோரையும் விடுவித்தனர். அத்துடன் அவர்கள் கொள்ளையடித்துச் சென்ற பொருட்களையும் மீட்டனர்.

இஸ்ரயேலர் மீது பெலிஸ்தியரின் பெரும் படை மோதப் புறப்பட்டது. பெலிஸ்தியர் அணியில் பல தலைவர்களின் அணிகள் ஒன்றுதிரண்டிருந்தமையினால் அவர்களுக்கு ஈடாக இஸ்ரயேல் படைகளால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. சிதறி ஓடினர்.

இராஜகுமாரன்

## மன்னர் சவுல் மாண்டார்

சவுலையும் அவரின் புதல்வர்களான யோனத்தான், அபினதாபு மற்றும் மல்கிசுவா ஆகியோரையும் பெலிஸ்தியப் படைகள் வில்லில் அம்பு பொருத்தி எய்து வீழ்த்தினர். சவுலின் உயிர் உடன் பிரியவில்லை. பெலிஸ்தியரால் தான் மடியலாகாது என்று கருதிய சவுல், தனது உதவியாளனை அழைத்து, வாளால் வெட்டி உயிரைப் போக்கி விடுமாறு கேட்டுக் கொண்டார். அஞ்சியமையினால் அவன் மறுத்தான். ஆகவே தனது வாளை நட்டு அதன் மீது தன் உடலைப்பொருத்தி உயிர் துறந்தார் மன்னர் சவுல்.

அடுத்த நாட்காலையில் சவுலின் தலையைக் கொய்த பெலிஸ்தியர் அதனை எடுத்துச் சென்று தமது மக்களிடம் காட்டி வெற்றிக் களிப்பில் மிதந்தனர். சவுலின் சடலத்தை ஒரு சுவரில் தொங்கவிட்டனர்.

இத் துயரச் செய்தியை அறிந்த யாபேசு நகரத்தில் வாழ்ந்த சிலர் இரவோடிரவாகச் சென்று சவுலினதும் அவர்தம் புதல்வர்களினதும் சடலங்களை எடுத்து வந்து யாபேசு நகருக்குக்கொண்டு வந்து எரித்தனர். ஏழு நாட்கள் தொடர்ந்து நோன்பு நோற்று துக்கம் அனுஷ்டித்தனர்.

தாவீது தனது மனைவியர் இருவரையும் உறவினரையும் மீட்டு, சீரழிந்து கிடந்த சிக்லாகு நகருக்கு வந்து சேர்ந்தார். அவருடைய தோழர்களும்கூட தாவீதுடன் இருந்தனர். அப்போதுதான் மன்னன் சவுலும் அவர்தம் புதல்வர்களும் மாண்ட செய்தி அவருக்குக் கிட்டியது. மன்னன் மறைந்த துயரத்தைவிட தனது உயிருக்குயிரான சிநேகிதர் யோனத்தான் மரணமான துயரம்தான் தாவீதால் தாங்க முடியாத துன்பத்தை அளித்தது. மன்னனுக்காகவும் தன் நண்பனுக்காகவும் இரங்கற்பா பாடித் துயரப்பட்டார்.

# தாவீதின் ஆட்சி தொடங்கியது

ஆண்டவரிட்ட ஆணைப்படி தாவீது எபிரோன் சென்றார். அவருக்கு அப்போது இருமனைவியர் இருந்தனர். ஏற்கனவே சவுலின் ஒரு மகளான மீகாளை மணம் முடித்திருந்தார். சவுல் தன்னைக் கொலை செய்யத் திட்டமிட்டிருந்தபோது மீகாளை விட்டுவிட்டுத் தனியே வெளியேறினார். பின்னர் இஸ்ரயேல் பெண்ணான அகினோவாவை மணந்தார். அதன் பின்னர் நாபால் என்ற பெரும் செல்வந்தன் இறந்ததும் அவன் மனைவியான அபிகாயிலையும் கரம்பிடித்தார்.

எபிரோன் நகரில் வைத்து யூத மக்கள் ஒன்றுதிரண்டு தாவீதைத் தங்கள் மன்னனாக ஏற்று திருப்பொழிவு செய்தனர். ஆனால் சவுல் மன்னரின் தளபதியான அப்னேர், சவுல் மன்னரின் மற்றொரு மகனான இஸ்போசேத்தை மற்றொரு மன்னனாக ஆக்கினான். இருதரப்பினருக்குமிடையில் அப்னேரே மோதலை ஏற்படுத்தினான். இப்போரில் அப்னேரும் அவனுடன் வந்த இஸ்ரயேல் வீரர்களும் தாவீதின் படைகளால் சிதறடிக்கப்பட்டனர். அப்னேரும் போர்க்களத்திலிருந்து தப்பி ஓடினான்.



## அப்னேரின் மன மாற்றம்

சிறிது காலத்தின் பின்னர், ஆண்டவரால் இஸ்ரயேலரின் அரசனாகத் திருப்பொழிவு செய்யப்பட்ட தாவீதுடன் மோதுவது தவறு என்றுணர்ந்த அப்னேர், தாவீதிடம் வந்து சேர்ந்து கொண்டான். இஸ்ரயேல் சமுதாயத்தவரிடம் எதுவித பிளவும் இல்லாமல் அனைவரையும் ஒன்று திரட்டி தாவீதின் ஆட்சியின் கீழ் கொண்டுவரப்போவதாக மன்னன் தாவீதிடம் கூறிக்கொண்டு அப்னேர் புறப்பட்டுச் சென்றான். அப்னேர் தாவீதிடம் உறவுகொண்டுள்ள சமாச்சாரம் தெரியாத தாவீதின் பணியாளர்களின் தலைவனான யோவாபு, அப்னேரைக் கொன்றான். ஏற்கனவே நடைபெற்ற ஒரு போரில் யோவாபுவின் சகோதரனை அப்னேர் கொன்றமையினால் அப்னேரைக் கொன்று யோவாபு பழிதீர்த்துக் கொண்டான்.

யோவாபுவின் செயலை தாவீது வரவேற்கவில்லை. அனைவரையும் உடைகளைக் கிழித்துக்கொண்டு துக்கம் அனுஷ்டிக்குமாறு தாவீது கேட்டுக்கொண்டார். எப்ரேனில் பிரேதம் அடக்கம் செய்யப்பட்டது. தாவீது அப்னேரின் கல்லறையில் பலத்த குரலெழுப்பி அழுதார்.

அப்னேரால் இஸ்ரயேலரின் மன்னனாக ஆக்கப்பட்ட சவுல் மன்னரின் மற்றொரு மகனான இஸ்போசேத்து, அவருடைய படைத் தலைவர்கள் இருவரால் கொல்லப்பட்டார். மதிய வேளையில் படுக்கையில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தபோதே, இஸ்போசேத்தின் வீட்டினுள் புகுந்த சகோதரர்களான இரேக்காபு மற்றும் பானா ஆகிய இருவரும், அவருடைய வயிற்றில் குத்திக்கொன்று விட்டு அவருடைய தலையைக் கொய்து எடுத்துக்கொண்டு தாவீதிடம் சென்றனர்.

"தங்களைக் கொலை செய்வதற்காகப் பல தடவைகள் தேடித்திரிந்த மன்னர் சவுலின் மகனான இஸ்போசேத்தின் தலை இது. உங்களுடைய ஆட்சிக்கு எதிராக மற்றொரு மன்னனாக முடிசூடிக் கொண்டவன் இவன்!"

இவ்வாறு கூறினார்கள். தங்களுடைய செயலால் மன்னர் தாவீது தங்களைப் பெரிதும் பாராட்டுவார் என்றே அச்சகோதரர்கள் கருதியிருந்தனர். ஆனால் மன்னன் தாவீதோ அவர்கள் இருவரையும் தனது காவலாளர்களை ஏவி வெட்டி வீழ்த்தினார்.

இஸ்ரயேல் மக்கள் அனைவரும் தாவீதே தங்கள் மன்னர் என்பதனை ஏற்றுக் கொண்டனர். அனைத்துக் குலத்தலைவர்களும் எபிரோனுக்கு வந்து தாவீது மன்னரைக் கண்டு, மன்னருக்குரிய மரியாதையைச் செய்து ஒப்பந்தமும் செய்துகொண்டனர்.

தாவீது தமது முப்பதாவது வயதில் அரசனாக அரியணை ஏறினார். முதல் ஏழு வருடங்களும் அவர் எபிரோனில் இருந்து ஆட்சி புரிந்தவர்; இஸ்ரேலிய சமுதாயம் முழுவதற்குமான அரசன் என்ற நிலை ஏற்பட்டதும் எருசலேம் நகருக்கு வந்து ஆட்சி புரிந்தார்.

தாவீது மன்னரின் நிலையினை அறிந்து கொண்ட பெலிஸ்தியர் அவரை எப்படியாவது பிடித்து விடவேண்டும் என்று திட்டம் தீட்டினர். ஆண்டவர் தாவீதுக்கு வேண்டிய துணை புரிந்து பெலிஸ்தியரின் திட்டங்கள் எதுவும் ஈடேறாமல் செய்தார்.

## தாவீது நகர்

எருசலேமில் சீயோன் கோட்டையைக் கைப்பற்றிய தாவீது, அக்கோட்டையையே தனது இருப்பிடமாக்கிக் கொண்டார். அதற்கு 'தாவீது நகர்' என்று பெயரிட்டார்.

இக்காலகட்டத்தில் இஸ்ரயேலரின் உடன்படிக்கைப் பேழை, பாலை யூதாவிலுள்ள ஒரு குன்றின் மீதிருந்த ஓர் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்தது. அபிநதா என்பவருடைய இல்லம் அது. தாவீது இஸ்ரயேல் சமுதாயத்திலிருந்து முப்பதாயிரம் வீரர்களைத் தேர்ந்தெடுத்து உடன்படிக்கைப் பேழையை எருசலேமுக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்தார். புதிதாக ஒரு வண்டி தயாரிக்கப்பட்டு குன்றின் மீது கொண்டு வரப்பட்டது. உடன்படிக்கைப் பேழையை அவ்வண்டியின்மீது வைத்து அபிநதாவின் புதல்வர்களான உசாவும் அகியோவும் எடுத்துக்கொண்டு வந்தனர். இவ்வண்டியை இரு காளை மாடுகள் இழுத்து வந்தன. வண்டியின் முன்பாக இஸ்ரயேல் மக்கள் இசைக்கருவிகளை மீட்டி பாடி ஆடிக் கொண்டு வந்தனர். இடையில் காளைமாடுகள் இரண்டும் மிரண்டன. இதனால் வண்டி மீதிருந்த பேழை நிலத்தில் விழுந்து விடக் கூடும் என்ற அச்சம் எழுந்தது.

(தொடர்ந்து வரும்)

**திருமறை 35 விடை ☛ அகிமெலக்கு**

**பரிசு பெறுவோர்:**

1. ஏ.ஜே. கனிசியஸ், 432, அன்புவழிபுரம், திருகோணமலை.
2. வே. நிரஞ்ஜன் குமார், கபரகலை டிவிசன், பூனாகலை.
3. ஜெரோமியா ஜெகநாதன், 200, உடபேராதெனிய, பேராதெனிய.
4. கே.வி. நாதன் ரவிசங்கர், வட்டகெல எல்.டி., மடுல்கலை.
5. அஸ்மா அக்ரம், 141/3, விஸ்வைக் வீதி, மட்டக்குளி, கொழும்பு-13.

**திருமறை 37 வினா:-** தாவீதின் இரு மனைவியர் பெயர்களைத் தருக?

டிச. 05க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 37—தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**



# பயோடேட்டா

| | |
|---|---|
| பெயர் | : தமிழ்க்கட்சி தலைவர்கள். |
| தொழில் | : அரசியல் வியாபாரம். |
| நண்பர்கள் | : புலிகளல்ல. |
| நம்புவது | : தங்களை மட்டும். |
| நம்பாதது | : கொள்கைகளை |
| மறந்தது | : மக்களை |
| துறந்தது | : உணர்ச்சிகளை |
| விரும்புவது | : நாற்காலிகள். |
| விரும்பாதது | : போராட்டங்கள். |
| பொழுது போக்கு | : அறிக்கைகள், சந்திப்புக்கள் |
| வெறுப்பது | : விமர்சனங்களை |
| வளர்ப்பது | : அடங்கி நடக்கும் அரும் குணத்தை |
| மறைப்பது | : அதிகாரத்தில் உள்ளோரின் தவறுகளை! |
| சாதனை | : பதவிகள். |
| சோதனை | : அச்சுறுத்தல்கள். |
| சமீபத்திய சங்கடம் | : அம்மையாரின் பேட்டி. |
| சமீபத்திய எரிச்சல் | : அப்பேட்டி பகிரங்கமானமை. |
| ஒரே இலட்சியம் | : கெட்டியான நாற்காலி. |

# கந்தசாமியும் முத்துத்தம்பியும்!

**க: அம்மையார் வந்தேறு குடிகள் என்று நாக்குத் தவறிச் சொல்லி இருப்பாரோ என்று தமிழ்க் கட்சித் தலைவர்கள் சிலர் சந்தேகப்படுகினமாம்.**

மு: அவை சந்தேகப்படவில்லை, சங்கடப்படுகினம். 'ஆம்' என்று ஒப்புக்கொண்டால் சனம் கேட்குமல்லோ "இனியும் ஏன் ஆமாம் போட்டுக் கொண்டிருக்கிறியள்?" என்று! இவைக்கு நோக்கு தவறிப்போனதாலே நாக்கு தவறினதாகத்தான் தெரியும். இவைக்கு அம்மையார் கொடுத்த வாக்குகளும் தவறியல்லோ போய்ட்டுது.

**க: நாக்கு ஸ்லிப் ஆகவில்லை என்கிறியள்?**

மு: ஸ்லீப்பிங்கில் இருக்கிற மாதிரி நடிக்கிறவைக்கு ஸ்லிப் ஆன மாதிரித்தான் தெரியும். வக்கீல் கூட அழைக்காமல் ஆஜரானதில்லை. எங்கட தமிழ்க் கட்சிகள் அம்மையார் அழைக்காமலேயே அவர் சார்பாக வாதாடுகினம்.

**க: வாதாட்டமில்லை ஐசே ஈடாட்டம். தனது கருத்தில் பிழையில்லை என்று தமிழ்க் கட்சித் தலைவர் ஒருவரிடம் நேரடியாகவே ஒளிவு மறைவு இல்லாமல் அம்மையார் மீண்டுமல்லோ அடித்துக் கூறினவராம். துவேஷத்தில் கூறவில்லை. வரலாற்று ஆதாரத்துடன் கூறுகிறேன் என்ற மாதிரி சொன்னவராம்.**

மு: அவர் தனது கூற்றில் உறுதியாக நிற்கிறார். ஈடாட்டமே கிடையாது. இவை ஏன் கிடந்து ஆடுகினம்?

**க: தலை ஆடாவிட்டாலும் வால் ஆடும்.**

மு: ஓஹோ, தானாடாவிட்டாலும் தசையாடும் என்ற பழமொழியை மறந்து, புதுமொழி கண்டிருக்கினம்.

**க: அமைச்சர் கதிர்காமரை நினைச்சாத்தான் கவலையாகக் கிடக்கு.**

மு: என்ன கவலை?

**க: காலில் சக்கரம் பூட்டின மாதிரி உலகெங்கும் ஓடுப்பட்டுத் திரியுறார் பார்த்தியளோ?**

மு: நீலத்தாருக்குத்தான் 'தாங்ஸ்' சொல்ல வேணும். இப்படியொரு விசுவாசமான உழைப்பாளியை சிபாரிசு செய்தவர் அவர் தானே.

**க: எல்லாம் சரி, தென்னாபிரிக்காவுக்கு ஓடி ஓடி சக்கரம் தேயப்போகுது. பிறகு மற்ற நாடுகளுக்கு ஓடுபட்டுத் திரிந்து உபகாரம் செய்ய முடியாமல் போயிடுமல்லோ.**

மு: அவர் வருவாரா? அவர் வருவாரா? எரிந்துபோன தீவை கட்டியெழுப்ப அவர் வருவாரா? என்று பாடாமல், அவர் வர வேண்டாம் என்றல்லோ பாடுகிறார் கதிர்காமர்.

**க: அவர் இராணுவத்தீர்வைப் பற்றித்தான் சிந்திக்கிறார் என்றுதான் அர்த்தம். இதை நான் சொல்லவில்லை. மிஸ்டர் சம்பந்தரே சொல்லிப்போட்டார்.**

மு: என்ன சம்பந்தரோ? (பாடுகிறார்)

*அவரா சொன்னார்*
*இருக்காது– இருக்கவும்*
*முடியாது!*
*தாய் தந்த பால்*
*விஷமும் ஆகலாம்*
*கதிரர்மீது சம்பந்தர்*
*குற்றம் சொன்னது*
*எப்படி உண்மையாகலாம்?*
*இருக்காது– இருக்கவும்*
*முடியாது!*



**க: கதிரரும், சம்பந்தரும் தோஸ்த்துகள் என்றதால்தானே ஆச்சரியப்படுகிறீர்?**

மு: முன்பும் ஒருமுறை மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் பற்றி பேசிவிட்டு, கதிரர் மறுத்தவுடன் சம்பந்தர் கரணமடித்தவரல்லோ. அதை மறந்து போனீரோ?

**க: மறக்கவில்லை. மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்று கேட்டால் அம்மையாரும், கதிரரும் கோபிப்பினம் எண்டு மூன்றாம் நபர் உதவி மட்டும் போதும் எண்டு கூட்டணி தீர்மானம் போட்டதையும் மறக்கவில்லை.**

மு: மூன்றாம் நபர் ஒருவர் ஏற்பாட்டாளராக இருப்பது பற்றி பரிசீலிக்கலாம் என்று அம்மையார் கூறியதாக செய்தி வந்ததை பார்த்துப் போட்டுத்தானே அந்தத் தீர்மானமும் எடுத்தவை.

**க: நாடித்துடிப்பறிந்து கோடு கிழிக்கும் சாணக்கியரல்லோ.**


மு: பின்னர் எப்படிப் பாரும் கதிர்காமரை கண்டிக்கத் துணிந்தார் சம்பந்தர்?

**க: அங்கேதான் பிழைவிடுகிறீர். கண்டிச்சது என்று யார் சொன்னது? மூன்றாம் தரப்பை யார் எதிர்க்கினமோ அவையெல்லாம் இராணுவத்தீர்வு பற்றி சிந்திக்கினம் என்று அர்த்தமாம். பொத்தாம் பொதுவாகத்தான் கூறியிருக்கிறார். அதுவும் சபையில் கதிரரும், முக்கிய அமைச்சர்களும் இல்லாத நேரமாகப் பார்த்து, சொல்லியிருக்கிறார்.**

மு: அதென்ன, யார் எதிர்க்கிறார்களோ அவர்கள் எல்லாம் என்று சுற்றி வளைப்பு? அரசாங்கம் மட்டும்தானே எதிர்க்கிறது. அதை நேரடியாக நெற்றிமுட்ட சொல்ல வேண்டியதுதானே!

**க: அதுதான் 'பொலிட் ரிக்ஸ்.'**

மு: ஓஹோ, 'பொலிட்டிக்ஸ் அல்ல பொலிட்ரிக்ஸ்'



# பேச்சாளர் பேரம்பலம்

ஊரைவிட்டு விரட்டினால், நிவாரணமாக ஒதுங்க இடம் கேட்டு மகஜர் அனுப்புவோம். ஓட ஓட விரட்டி உதைத்தால், காயத்திற்கு நிவாரணமாக மருந்து கேட்போம். நிர்வாணமாக நிறுத்தி வைத்தால், அதற்கும் நிவாரணமாக ஒரு முழம் துணி கேட்போம். இதன் பெயர்தான் விவேகம். இதன் பெயர்தான் ஜனநாயக வழி என்பதை மறக்காமலும், மறுக்காமலும் மக்கள் எம் சேவைகளை மதிக்கவேண்டும். மறக்காமல் இருந்து அடுத்த தேர்தலில் புள்ளடிகளை போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காதிலை பூ கந்தசாமி




படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.(QD/21/NEWS/98)




அருள் ஜுவலர்ஸ்

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை:
105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழு–06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331

# விஷப் பொறி



ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657


அழகான தோற்றமளிக்கும் இப்பல்லி சாதாரண பல்லி இனத்தைச் சார்ந்ததுதான். சிறு பூச்சி புழுக்களையும் வேறு பல உணவுப் பண்டங்களையும் உண்டு எத்தகைய சூழ்நிலையையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வாழ்வதில் இவை தேர்ந்தவை.

தங்க வர்ண உடலையும் பச்சை கலந்த தலையையும் நீல வால்ப்பகுதியையும் கொண்ட இப்பல்லியை மரகதப்பல்லி என்று அழைக்கிறார்கள்.

பல்லி இனங்கள் மொத்தம் 3100 என்று கணக்கிட்டுள்ளார்கள். இவற்றுள் 3 செண்டி மீட்டர் (1 1/2 அங்குலம்) முதல் 4.75 மீட்டர் (15 அடி) நீளமுள்ள பல்லிகள் உள்ளன. இவை வசிக்கும் இடத்துக்கேற்ப இவற்றின் ஓடும் வேகம் மாறுபடுகின்றது. இவை முட்டை இட்டுக் குஞ்சு பொரிக்கின்றன. சில பல்லிகள் நிலத்தில் வாழ்வதுபோல் தண்ணீரிலும் வாழக்கூடிய தன்மை உடையன.

பிரிட்டிஷ் வேர்ஜின் தீவுகள் மேற்கிந்திய நாடுகள் ஆகியவற்றில் காணப்படும் பல்லிகள் தான் உருவத்தில் மிகச் சிறியவை. பப்புவா நியுகினியில் காணப்படும் பல்லிகள்தான் 15 அடி வரை வளரும் இனத்தைச் சேர்ந்தவை.

மிக, மிக, மிக ஆச்சரியமான சுவரொட்டி இது.

பழுதுபட்டுப் போகாமல் பாடம் பண்ணப்பட்டு வைத்துள்ள மனிதச் சடலம் ஒன்று உயிர் பெற்று வருகிறது. இதுதான் 'த மம்மி' என்ற ஹொலிவுட் திரைப்படக்கதையின் மையக்கரு.

யுனிவேர்சல் ஸ்ருடியோவில் 1932ம் ஆண்டு தயாரிக்கப்பட்டுத் திரையிடப்பட்ட இப்படத்துக்கான விளம்பர சுவரொட்டிதான் இங்கு காணப்படுகிறது.

# சுவரொட்டி




# டிக்... டிக்... டிக்



சிவப்புநிற 'கேக்' போலத் தெரிகிறதா? அதுதான் இல்லை. தொடர்ந்து படியுங்கள்.

காளான் ஒரு ஊட்டச்சத்து நிறைந்த உணவாகக் கொள்ளப்படுகிறது. உலகெங்கும் இதற்கு நல்ல கிராக்கி இருப்பதனால் காளான் நல்ல விலைக்கு விற்கப்படுகிறது.

காளான்களில் பல வகை இனங்கள் காணப்படுகின்றன. இவை எல்லாமே உணவுக்குப் பயன்படுவதில்லை. படத்தில் காணப்படுவது அபூர்வமான நச்சுக் காளான்.

அழகாக காட்சி அளிக்கும் இக்காளானின் குடையில் ஏதாவது ஒரு பூச்சி வந்து அமருமானால்-அதோ கதிதான். பூச்சியை இக்காளான் தன்மீது ஒட்டவைத்து அதன் ஊனை உறிஞ்சிக் குடித்துவிடும்.

பண்டைக்காலத்தில் இக்காளான் பூச்சி கொல்லி மருந்து தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டதாம். மனிதனுக்கு வரும் சில நோய்களுக்கு மருந்தாகவும் இதனைப் பயன்படுத்தினார்களாம்.

உலகக் கிண்ணப் போட்டியில் தம்மை தோற்கடித்த இலங்கை அணியை தமது மண்ணில் வைத்து தோற்கடிக்க அவுஸ்திரேலியர்கள் ஆர்வம் காட்டுவர்.

எதிர்வரும் ஜனவரியில் அவுஸ்திரேலியாவுக்கு செல்லும் இலங்கை அணிக்கு சவால்கள் காத்திருக்கின்றன. முரளிதரனுக்கும்தான்.

யாருக்கு எப்படி பந்தை போட்டால் விக்கெட்டை கொத்தலாம் என்பதை முரளிதரன் அனுபவத்தில் கற்றுத் தேறியுள்ளார்.

இலங்கை அணி என்றதும் ஏனைய அணிகளுக்கு மூன்று பேர்தான் ஞாபகத்தில் வருவார்கள். சனத், அரவிந்தா, முரளி. இந்த மூவர் அணியை குறிவைத்தே ஏனைய அணிகளின் வியூகம் வகுக்கப்படுகிறது.

இந்த மூவர் அணியில் ஒருவர் இல்லையானாலும் அணிக்கு பலவீனம்தான். சமீபத்திய சார்ஜா போட்டிகளில் முரளிதரன் இல்லாததும் படு தோல்விக்கு காரணம் என்பது பரவலான அபிப்பிராயம்.

'முரளி இருந்திருந்தால் வெற்றி பெற்றிருப்போமோ இல்லையோ, கௌரவமாகவேனும் தோற்றிருப்போம். மறுதரப்பின் ஒட்ட எண்ணிக்கையை கட்டுப்பாட்டில் வைத்திருந்திருக்கலாம்' என்று கூறியிருக்கிறார் இலங்கை அணி வீரர் ஒருவர்.

அச்சுக்கலை இன்றுபோல் வளர்ச்சியடையாத 66 ஆண்டுகளுக்கு முற்பட்ட அக்காலத்தில் அச்சிடப்பட்ட மேலேயுள்ள சுவரொட்டியின் இன்றைய மதிப்பு எவ்வளவு தெரியுமா? 4 இலட்சத்து 53 ஆயிரம் அமெரிக்க டொலர். நமது நாட்டு நாணயப்படி ரூ 13 கோடியே 3 இலட்சத்து 51 ஆயிரம். வாவ்!

நியூயோர்க் நகரில் சொதேபி என்ற ஏல நிலையத்தில்- 1997 மார்ச் மாதம் இந்த விலை கொடுத்து இந்தச் சுவரொட்டியை ஒரு தனவந்தர் வாங்கியிருக்கிறார். இப்பொழுது இதற்கு மேலும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. சுவரொட்டி ஒன்று இத்தனை விலைக்கு விற்கப்பட்டது உலக சாதனையாக கின்னஸில் பதியப்பட்டுள்ளது.

# சூப்பர் ஹீரோ





1960ம் ஆண்டுகளில் தான் திரைப்படங்களில் முப்பரிமாணப் படங்களின் ஆக்கிரமிப்பு இருந்தது. இப்படங்கள் திகிலூட்டுவதாக இருந்தாலும், தயாரிப்பு செலவுக்கு ஈடாக வசூலாகவில்லை. தமிழில் முதலில் வந்த முப்பரிமாணப் படம் 'மை டியர் குட்டிச் சாத்தான்'.

தற்போது முப்பரிமாணப் படங்களுக்கு உலகெங்கும் பயங்கர வரவேற்பு. முப்பரிமாணப் படங்களில் மாபெரும் வரவேற்பு பெற்றது டியூக் நிக்கெம். மூன்று அங்கங்கள் தொடராக தயாரிக்கப்பட்டுவிட்டது. முதன் முதலாக தொடராக தயாரிக்கப்பட்ட முப்பரிமாணப் படம் என்ற உலக சாதனையும் இதற்குத்தான்.

அப்படத்தின் ஹீரோ தோன்றும் காட்சிதான் இது. 21ம் நூற்றாண்டில் பிறகோள்களில் இருந்து பூமிக்கு நடக்கும் படையெடுப்புக்களை டியூக் முறியடிக்கிறார். அதுதான் கதை. பிரமாண்ட தொழில் நுட்பத்தால் திகிலூட்டி பயங்கர வரவேற்பு பெற்றுள்ளது இப்படம்.

# தடை

இலங்கை அணியின் நம்பிக்கை நட்சத்திரம்மீது அவுஸ்திரேலியர்களுக்கு எப்போதும் ஒரு சீண்டல்தான்.

தருமியின் பாட்டில் குறைகண்ட நக்கீரன் போல், முரளிதரனின் பந்து வீச்சில் நடுவர் டாரெல்ஹேர் குறை கண்டுள்ளார்.

ஏற்கனவே குறை சொல்லி நெத்தியடி வாங்கினாலும் கூட, அந்த நடுவர் சோர்ந்து போகவில்லை. யார் என்ன தீர்ப்பு சொன்னாலும் குற்றம் குற்றமே என்று கூறிக்கொண்டிருக்கிறார். முரளிதரன் மட்டுமல்ல, தர்மசேனாவின் பந்துவீச்சு மீதும் புகார் கூறியிருக்கிறார்.


இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை விட்டுக் கொடுக்காமல் நின்றதால், இம்முறையும் அந்த நடுவரின் புகார் கிளின் போல்டாகிவிட்டது.

இலங்கை அணியை உளவியல் ரீதியாக குருவைக்க அவுஸ்திரேலியாவில் மேலும் புகார்கள் எழலாம்.

வீட்டு முற்றங்களில் பச்சைப் பசேலென்று புல் வளர்ப்பது அழகு. பசுந்தரை கண்களுக்கு குளிர்ச்சி.

தற்போது புல் வளர்க்க சிரமப்படத் தேவையில்லை. செயற்கைப் புல் தயார். பசுந்தரைபோல் செய்யப்பட்ட செயற்கை புற்கள் விற்பனைக்கு வந்துவிட்டன. வீட்டின் உள்ளேயும், வெளியேயும் பயன்படுத்தலாம். மேல் நாடுகளில் இதுதான் பாஷன்.

# செயற்கை



# 1வது பிறந்தநாள் வாழ்த்து



## செல்வி திவ்யா 28.09.1998

வல்வெட்டித்துறை காட்டுவளவு- திருவிலைச் சேர்ந்த பாலேந்திரன்-கவிதா தம்பதியினரின் செல்வப்புதல்வி திவ்யா தனது முதலாவது பிறந்த தினத்தை 28.09.98 அன்று திங்கட்கிழமை நோர்வே-ஒஸ்லோ (NORWAY-OSLO) விலுள்ள தனது இல்லத்தில் கொண்டாடினார்.

அன்பு அப்பா, அம்மா, இந்தியாவிலிருக்கும் அப்பம்மா, அம்மம்மா, பூட்டிமார், வல்வெட்டித்துறை தயாநிதி மாமா, மாலினி மாமி, கிரிசாந்த் அத்தான், கிருத்திகா மச்சாள், வன்னி வீரேன் சித்தப்பா, பதமப்பிரியா சித்தி, சுரேன் சித்தப்பா, கொழும்பு அப்பம்மா அம்மம்மா குடும்பத்தினர், கனடா பிரபு மாமா, சுபாசினி மாமி, ரஞ்சித், தர்சன் அத்தான்கள், இலண்டன்-ரவி மாமா, அருள் சித்தப்பா, ரஜி சித்தி, சுஜா மாமி நோர்வே- ஜவின் அங்கிள், ரெமி அன்ரி மற்றும் அம்மப்பாமார், அம்மம்மாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், அண்ணாமார், அக்காமார், தங்கைமார், மச்சான்மார், மச்சாள்மார், மாமி, மாமாமார்கள், உற்றார் உறவினர் அனைவரும் வைகுண்டப் பிள்ளையார் அருளால் பல்கலையும் பெற்று சீரும் சிறப்புடனும் நீடூழி வாழ்கவென திவ்யாவை வாழ்த்துகின்றனர்.